சிறப்பு நிதியுதவி
1499

# புதிய ஒளி

தமிழ்நாடு அரசு நூலகம்
துறை வரிசை எண்:
தொ. ம. பொ. நூலக
வரிசை எண்:
சிறப்பு நிதியுதவி
வரிசை எண்: 1499
வகை வரிசை எண்:

புதுமைப்பித்தன்

ஐந்திணைப் பதிப்பகம்
தொலைபேசி: 849410
279, பைகிராப்ட்ஸ் (பாரதி) சாலை
திருவல்லிக்கேணி
சென்னை-600 005

முதற் பதிப்பு : டிசம்பர், 1953
இரண்டாம் பதிப்பு : ஏப்ரல், 1956
மூன்றாம் பதிப்பு : டிசம்பர், 1963
நான்காம் பதிப்பு : ஜனவரி, 1975
ஐந்தாம் பதிப்பு : டிசம்பர், 1986
ஆறாம் பதிப்பு : செப்டம்பர், 1989

ஐந்திணை—26

உரிமை பதிவு

DSA
1499

விலை ரூ. 14-00

Published
By
KUZHA. KATHIRESAN

AINTHINAI PATHIPPAGAM
Phone : 84 94 10
279, Pycrofts Road
Triplicane, Madras-600 005

அச்சிட்டோர் : தொ. பே. 47 78 20
சாலை அச்சகம், 11 திருவீதியான் தெரு
கோபாலபுரம், சென்னை-600 086

# பொருளடக்கம்


1. புதிய ஒளி 1
2. கொடுக்காப்புளிமரம் 4
3. பால்வண்ணம்பிள்ளை 10
4. கோபாலய்யங்காரின் மனைவி 15
5. குப்பனின் கனவு 23
6. பித்துக்குளி 27
7. கடவுளின் பிரதிநிதி 31
8. நிகும்பலை 38
9. ஒப்பந்தம் 49
10. காளி கோயில் 56
11. செல்வம் 60
12. சித்தம் போக்கு 64
13. மாய வலை 67
14. திருக்குறள் குமரேச பிள்ளை 77

15. இரண்டு உலகங்கள் 83
16. பாட்டியின் தீபாவளி 90
17. சொன்ன சொல் 94
18. கயிற்றரவு 99
19. பூசணிக்காய் அம்பி 109
20 சாமியாரும், குழந்தையும், சீடையும்... 117
21. அவதாரம் 121

புதிய கதைகள்

22. சாமாவின் தவறு 132
23. நம்பிக்கை 137
24. சாளரம் 141
25. கண்ணன் குழல் 144
26. ஆற்றங்கரைப் பிள்ளையார் 147

# பதிப்புரை

இன்று புகழுடன் பூத்துக் குலுங்கும் பிரபல எழுத்தாளர்கள் அனைவருக்கும் முன்னோடியாக விளங்கிய, தமிழ் இலக்கிய உலகிற்குப் புதுப்பார்வையையும் புதிய விழிப்பையும் தந்து இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற வேந்தராகத் திகழ்ந்த அமரர் திரு. புதுமைப்பித்தன் அவர்களின் ''புதிய ஒளி'' இன்று புதுப்பொலிவுடன் வெளிவருகிறது.

திரு. ரகுநாதன் அவர்களின் மேற்பார்வையின் கீழ் இந் நூலின் முதற்பதிப்பிலுள்ள சில பிரச்சனைக்குரிய கதைகள் நீக்கப்பட்டு, இதுவரை நூலாக வெளிவராத சாமாவின் தவறு, நம்பிக்கை, சாளரம் கண்ணன் குழல், ஆற்றங்கரைப் பிள்ளையார் ஆகிய புதிய 5 சிறுகதைகளும் சேர்க்கப்பட்டு புத்தொளி வீசுகிறது.

புதுமைப்பித்தனின் கிடைத்தற்கரிய கதைகளை வெளியிட்ட கொல்லிப்பாவை இதழாசிரியருக்கும், இக்கதைகளைத் தேடிக் கண்டு பிடித்துக் கொடுத்த பல்கலைக்கழகக் கல்லூரி ஆசிரியரும் 'புதுமைப் பித்தன், ஜெயகாந்தன் சிறுகதைகள் ஒரு ஒப்பீட்டாய்வு' என்ற தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி உள்ளவருமான திரு. வேதசகாயகுமார் அவர்களுக்கும் நன்றி!

புதுமைப்பித்தனின் மொழி பெயர்ப்புகள் அனைத்தும் பைண்டு வால்யூமாக ஆய்வுரையுடன் விரைவில் வெளி வர உள்ளன என்பதை வாசகப் பெரு மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

புதுமைப்பித்தனின் எழுத்தோவியங்களை வெளியிட அனுமதி வழங்கிய புதுமைப்பித்தனின் மனைவி திருமதி கமலா விருத்தாசலம் அவர்களுக்கும், திரு. சொக்கலிங்கம் அவர்களின் குடும்பத்தாருக்கும் இதயம் கனிந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

*19-9-89*
*சென்னை-5*

அன்புள்ள,
குழ. கதிரேசன்

# ஐந்திணையின் புதிய வெளியீடுகள்

பண்பாட்டுக் கலப்பும் இலக்கிய ஒருமையும்
டாக்டர் ஜி. ஜான்சாமுவேல்

இலக்கியத் திறனாய்வியல்
—டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி

சிந்தாநதி —லா. ச. ராமாமிருதம்

லா. ச. ராவின் சிறப்புச் சிறுகதைகள்
—லா. ச. ராமாமிருதம்

அன்று இரவு —புதுமைப்பித்தன்

சித்தி ,,

புதிய ஒளி ,,

செம்பருத்தி தி. ஜானகிராமன்

மரப்பசு ,,

உயிர்த்தேன் ,,

தமிழ் இலக்கிய வரலாற்றுக்
களஞ்சியம் —மது. ச. விமலானந்தம்

தமிழர் நாகரிகமும் பண்பாடும்
—டாக்டர் அ. தட்சிணாமூர்த்தி

புனைகதை இலக்கியப் பொலிவு —டாக்டர் ம. திருமலை

பொன்னடியான் கவிதைகள் —கவிஞர் பொன்னடியான்

பிராயச்சித்தம் லா. ச. ராமாமிருதம்

புற்று ,,

கேரளத்தில் எங்கோ ,,

கல் சிரிக்கிறது — லா. ச. ராமாமிருதம்
சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம்
—(பதிப்) அரங்க சீனிவாசன்
ஒரு சொல் —மல்லிக் ரங்கனாதன்
மனிதாபிமானம் —தி. ஜானகிராமன்
புதுமைப்பித்தன் படைப்புகள் (I) பைண்டு வால்யூம்
" (II) "

# புதிய ஒளி

அன்று இரவெல்லாம் நல்ல மழை.

காற்றும் மழையும் இருளுடன் சேர்ந்து ஒரு பெரிய கூத்து நடத்தி விட்டுச் சென்றன.

இரவு பூராவும் "ஹோ! ஹோ!" என்று ஓலம். பேயின் எக்காளச் சிரிப்பு. கத்தி வீச்சு மின்னல்கள். சடசடா என்ற குமுறல்கள் குடலைக் கலக்கின.

மழை நின்றது.

காற்று ஓய்ந்தது.

சொட்டுச் சொட்டென்று நீர்த் துளிகள்.

வீட்டு வெளிச்சத்தில் ஒளி பெற்று, ஜன்னல் உயரம் உயிர் பெற்று மறுபடியும் இருள் துண்டமாக மறைந்தன.

வீட்டிலே நிசப்தம்—

இந்த ஓலத்திலே அதன் நிரந்தர சப்தத்திலே தூங்கிக் கொண்டிருந்த எனக்கு மழை ஓய்ந்ததும் விழிப்பு வந்தது.

அந்த நிசப்தம்! அந்த மௌனம்! என் மனத்திலே என்னென்னவோ குவிந்து மறைந்தன. ஒன்றோடொன்று ஓடித் தளர்ந்துமறையும் எண்ணக் குவியல்கள்.

திடீரென்று...

தூளியிலிருந்து குழந்தை...என் குழந்தை...

"அம்பி! அம்பி! குச்சியை எடுத்துண்டு வா...சீமா எடுத்துண்டு வா..." வீறிட்டு அழுகை...

"என்னடா கண்ணே...அழாதே..." என்று என் மனைவி எழுந்தாள்.

"அம்பி! இந்தக் குச்சிதான் ராஜாவாம்...சாமிடா...நீ கொட்டு அடி, நான் கும்படறேன்..."

"நான்தான் கும்பிடுவேன்..." ஓரே அழுகை......

நான் படுக்கையை விட்டு எழுந்திருந்தேன்...ஜன்னலருகில் சென்று நின்றேன்......

சிதறிய கருமேகங்களிடையே நட்சத்திரங்கள் கண் சிமிட்டின.

உள்ளே நிசப்தம்...

தாயின் மந்திரந்தான்.

குழந்தை எந்தக் கனவு லோகத்திலோ முல்லைச் சிரிப்புடன் மகிழ்ந்து தூங்கினான்.

தாய்...அவளுக்கு என்ன கனவோ!

என்ன கனிவு! என்ன ஆதரவு! அந்தத் தூக்கத்தின் புன்சிரிப்பு!

குழந்தையின் உதட்டிலே ஒரு களங்கமற்ற, கவலையற்ற மெல்லிய நிலவுச் சிரிப்பு.

தாயின் அதரங்களிலே கனிவு, ஆதரவிலே அவற்றின் கனியான சிரிப்பு...

என் மனதில் சாந்தி...

அன்று விடியற்காலம். கீழ்த் திசையிலே தாயின் ஆதரவு, குழந்தையின் கனவு—இரண்டும் கலந்த வான் ஒளி.

என் மனதில் ஒரு குதூஹலம்.

எனக்கு முன் என் குழந்தையின் மழலை...

பூவரச மரத்தடியிலே... "இந்தக் குச்சுதான்டா சாமி ...நான்தான் கும்பிடுவேன்..."

(1934)

★

# கொடுக்காப்புளி மரம்

நாலுநாய்க்கன் பட்டியில் ஆரோக்கிய மாதா தெரு என்றால் ஊருக்குப் புதிதாக வந்தவர்களுக்குத் தெரியாது.

நகர சபையின் திருத்தொண்டினால், அவ்விடத்தில் அந்த மாதா அக்ஞாதவாசம்,— உருவத்தையும் மாற்றிக் கொண்டு—செய்து கொண்டு இருப்பதாகத் தெரியும். தேக ஆரோக்கியத்திற்காக அங்கு சென்று வசிக்க வேண்டாம். அதற்கு வேறு இடம் இருக்கிறது. ராமனுடைய பெயரை வைத்துக் கொண்டால் ராமன்போல் வீரனாக இருக்க வேண்டும் என்று எங்காவது சட்டம் இருக்கிறதா? இதில் ஒன்றும் அதிசயமில்லை.

அங்கு வசிப்பவர்கள் எல்லாரும் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள். அ தா வ து அங்கு வசிப்பவர்கள் என்றால், அவர்களுடைய வீடு என்ற ஹோதாவில் ஒரு குடிசை, சில இடத்தில் ஓட்டுக் கட்டிடம்கூட இருக்கும். முக்கால்வாசி சாமான் தட்டு முட்டுக்கள் வெளியே, சமையல் அடுப்பும் வெளியே. எல்லாம் சூரியபகவானின் —அவர்கள் கிறிஸ்தவர்கள்—நேர் கிருபையிலேயே இருக்கும்.

ஆண்கள், ஏகதேசமாக எல்லாரும், பட்லர்கள், அல்லது ''பாய்கள்.'' பெண்கள் சுருட்டுக் கிடங்கிலோ அல்லது பக்கத்திலிருக்கும் பஞ்சாலைகளிலோ தொழிலாளி கள். அங்கு அவர்கள் தொழிலைப்பற்றிக் கவனிக்க நமக்கு நேரமில்லை.

காளியக்காவும், இசக்கியம்மாளும் அங்கு குடியிருக்க வில்லை; செபஸ்தியம்மாளும் மேரியம்மாளும்தான் குடி யிருந்தார்கள். உண்மையில் காளியக்காள்கள் புதிய பெயர் களில் இருந்தார்களே ஒழிய, வேறில்லை. மாதா கோவிலுக்குப் போகும் அன்றுதான் ஆரோக்கிய மாதாவின் கடாக்ஷம் இருப்பதாகக் காணலாம். பரிசுத்த ஆவி அவர் களுடைய ஆத்மாவைத் திருத்தியிருக்கலாம்; அதைப்பற்றி எனக்குத் தெரியாது. அந்த ஆத்மா சில வருஷங்கள் தங்கி இருப்பிடத்தைச் சுத்தப்படுத்தவில்லை என்று எனக்குத் தெரியும்.

ஆரோக்கிய மாதா தெருவின் ஒரு முனையில், அவற்றைச் சேராது தனித்து ஒரு பங்களா—அந்தத் தெருக்காரர்கள் அப்படித்தான் சொல்லுவார்கள்— இருக்கிறது. அது பென்ஷன் பெற்ற ஜான்டென்வர் சுவாமிதாஸ் அய்யர் அவர்கள் வீடு. அவர் ஒரு புரோட்டஸ் டன்ட் கிறிஸ்தவர். பெரிய பணக்காரர். "ஒட்டகங்கள் ஊசியின் காதில் நுழைந்தாலும் நுழைந்து விடலாம்; ஆனால் செல்வந்தர்கள் மோட்ச சாம்ராஜ்யத்தின் வாசலைக் கடக்க முடியாது" என்றார் கிறிஸ்து பகவான். சுவாமிதாஸ் ஐயரவர்கள் இதற்கு விதி விலக்காக இருக்க வேண்டும் என்றோ என்னவோ, கர்த்தரின் திருப்பணியைத் தமது வாழ்க்கையின் ஜீவனாம்சமாகக் கொண்டார். உலகத்தின் சம்பிரதாயப்படி அவர் பக்திமான்தான். எத்தனையோ அஞ்ஞானிகளைக் குணப்படும்படியும், என்றும் அவியாத கந்தகக் குழியிலிருந்து தப்ப வைத்தும், மோக்ஷசாம்ராஜ்யத்திற்கு வழி தேடிக் கொடுத்திருக்கிறார். நல்லவர்; தர்மவான்; ஞாயிற்றுக் கிழமைகளில் கோவிலுக் குச் சொல்வார். புதிய ஏற்பாட்டில் மனுஷ குமாரனின் திருவாக்குகள் எல்லாம் மனப்பாடம்.

அவர் பங்களா முன்வாசலில் ஒரு கொடுக்காப்புளி மரம். பங்களா எல்லைக்குட்பட்டது. ஆனால் வெளியே அதன் கிளைகள் நீட்டிக் கொண்டு இருக்கும்.

வெறுங் கொடுக்காப்புளி மரமானாலும் அதன் உபயோகம் அதிகம் உண்டு. கொடுக்காப்புளிப் பழம் ஒரு கூறுக்கு ஒரு பைசா வீதம் விலையாகும்பொழுது அதை யாராவது விட்டு வைப்பார்களா? பள்ளிக்கூட வாசலிலும், மில், ஆலைப் பக்கங்களிலும், சவரியாயி காலையில் ஒரு கூடை எடுத்துக்கொண்டு சென்றால், ஒரு மணி நேரத்தில் கூடை காலி.

எவ்வளவு வருமானமிருந்தாலும் இந்தக் கொடுக்காப் புளி வியாபாரத்தில் சுவாமிதாஸ் ஐயரவர்களுக்கு ஒரு பிரேமை. "ஆண்டவன் மனித வர்க்கத்திற்காகவே சகல ஜீவராசிகளையும் மரம் செடி கொடிகளையும் சிருஷ்டித் தார். அதைப் புறக்கணிப்பது மனித தர்மமல்ல. மேலும் ஒதுக்கப்பட்டவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர் களுக்கும், சிறு குழந்தைகளுக்கும் இதை மலிவாகக் கிடைக்கும்படி செய்வதினால், கிறிஸ்துவின் பிரியத்தைச் சம்பாதிப்பதற்கு வழி, என்பது அவர் நியாயம். அவர்கள் தான் மோக்ஷ சாம்ராஜ்யத்திற்குப் பாத்திரமானவர்கள். அவர்கள் இதற்காகத் திருட ஆரம்பித்துப் பாப மூட்டை கட்டிக் கொள்ளாதபடி இவர் இந்தக் கைங்கர்யம் செய்து வருகிறார்.

கொடுக்காப்புளியில் உதிர்ந்து விழும் பழங்கள் சவரியாயிக்குக் குத்தகை. நாளைக்குக் கால் ரூபாய். காலையிலும் மாலையிலும் வந்து எடுத்துக் கொண்டுபோக வேண்டியது. பணம் அன்றன்று கொடுத்துவிட வேண்டி யது. இதுதான் ஒப்பந்தம்.

இதனால் ஒரு ஏழை விதவைக்கு ஒரு வழி ஏற்பட்டிருக்கவில்லையா? சுவாமிதாஸ் ஐயரவர்கள் இதை

விடத் தமது தர்ம சிந்தனையைக் காட்ட வேறு என்ன செய்ய முடியும்?

திங்கட் கிழமை காலை.

சவரியாயி வரக் கொஞ்சம் நேரமாகி விட்டது.

அந்தத் தெருவின் மற்றொரு கோடியில் பெர்னான்டெஸ் என்ற பிச்சைக்காரன்.—பிறப்பினால் அல்ல; விதியின் விசித்திர விளையாட்டுக்களினால் அகண்ட அறிவின் ஒரு குருட்டுப் போக்கினால்—எடுத்த காரியம் எல்லாம் தவறியது. மனைவியும் பெண் குழந்தையின் பொறுப்பைத் தலையில் போட்டு விட்டுச் சென்று விட்டாள்.

இரண்டு உயிர்களுக்கு உணவு தேடுவதற்கு வழியும் இல்லை. இதனால் பிச்சைக்காரன். வீட்டின் முன் வந்து கிறிஸ்துவின் பெயரைச் சொல்லிக் கொண்டு நிற்பான். அது ஹிந்து வீடானாலும் சரி, புரோட்டஸ்டான்ட், அல்லது மகமதிய, எந்த வீடானாலும் சரி. கிடைக்கா விட்டால் முனங்கலும் முணுமுணுப்பும் கிடையாது. இந்த விஷயத்தில் அவன் குழந்தையும்,—அதற்கு மூன்று அல்லது நான்கு வயதிருக்கும்—அதுவும் வரும். அதற் கென்ன? உத்ஸாகமான சிட்டுக் குருவி.

உலகத்தின், தகப்பனின் கவலைகள் ஏதாவது தெரியுமா? எப்பொழுதும் சிரிப்புத்தான். பெர்னான்டஸின் வாழ்க்கை இருளை நீக்க முயலும் ரோகிணி.

அன்று சுவாமிதாஸ் அய்யர் அவர்களுடைய வீட்டையடைந்தான். வந்தபொழுதெல்லாம் இரண்டணா என்பது சுவாமிதாஸ் அவர்களின் கணக்கு. அது கிடைக்காத நாள் கிடையாது. அதிலே பெர்னான்டஸ்ஸிற்கு அய்யரவர்களின் மீது ஒரு பாசம்,

ஏமாற்றுக்கார உலகத்தில் தப்பிப் பிறந்த தயாளு என்ற எண்ணம்.

"தோஸ்தரம் அம்மா" என்றது குழந்தை.

"தோஸ்தரம் வருது ஆண்டவனே!" என்றான் பெர்னான்டஸ்.

'ஸ்தோத்திரம்' என்ற வார்த்தை வராது. அதற்கென்ன? உள்ளத்தைத் திறந்து அன்பை வெளியிடும் பொழுது தப்பிதமாக இருந்தால் அன்பில்லாமல் போய் விடுமோ?

சுவாமிதாஸ் ஐயர் சில்லரை எடுக்க வீட்டிற்குள் சென்றார்.

கூட வந்த குழந்தையைச் செக்கச் செவேலென்ற கொடுக்காப்புளிப் பழம் அழைத்தது. ஓடிச்சென்று கிழிந்த பாவாடையில் அள்ளி அள்ளி நிரப்புகிறது.

வெளியே வந்து கொண்டிருந்த சுவாமிதாஸ் அய்யர் கண்டு விட்டார். வந்து விட்டது கோபம்.

"போடு கீழே! போடு கீழே!" என்று கத்திக்கொண்டு வெளியே வந்தார்.

குழந்தை சிரித்துக் கொண்டு ஒரு பழத்தை வாயில் வைத்தது. அவ்வளவுதான். சுவாமிதாஸ் கையிலிருந்த தடிக் கம்பை எறிந்தார்.

பழத்துடன் குழந்தையின் ஆவியையும் பறித்துக் கொண்டு சற்று தூரத்தில் சென்று விழுந்தது தடி.

திக்பிரமை கொண்டவன்போல் நின்ற பெர்னான்டஸ் திடீரென்று வெறி பிடித்தவன் போல் ஓடினான்,

குழந்தையிடமல்ல.

கீழே கிடந்த தடியை எடுத்தான்.

"போ, நரகத்திற்கு. சைத்தானே!" என்று கிழவர் சுவாமிதாஸ் மண்டையில் அடித்தான். கிழவரும் குழந்தையைத் தொடர்ந்தார்.

பிறகு...?

கைது செய்தார்கள். கிழவர் அடித்தது எதிர்பாராத விபத்தாம். பெர்னான்டஸ் கொலைகாரனாம்!

அவனும் நியாயத்தின் மெதுவான போக்கினால் குழந்தையைத் தொடர்ந்து செல்லக் கொஞ்ச நாளாயிற்று. வேறு இடத்திலிருந்துதான் பிரயாணம்.

(1934)

★

# பால்வண்ணம் பிள்ளை

பால்வண்ணம் பிள்ளை கலெக்டர் ஆபீஸ் குமாஸ்தா. வாழ்க்கையே தஸ்தாவேஜிக் கட்டுகளாகவும், அதன் இயக்கமே அதட்டலும், பயமுமாகவும், அதன் முற்றுப் புள்ளியே—தற்பொழுது 35 ரூபாயாகவும்—அவருக்கு இருந்து வந்தது. அவருக்குப் பயமும்; அதனால் ஏற்படும் பணிவும் வாழ்க்கையின் சாரம். அதட்டல் அதன் விதி விலக்கு.

பிராணி நூல், மிருகங்களுக்கு, முக்கியமாக முயலுக்கு நான்கு கால்கள் என்று கூறுமாம். ஆனால் பால்வண்ணம் பிள்ளையைப் பொறுத்தவரை அந்த அபூர்வப் பிராணிக்கு மூன்று கால்கள்தான். சித்த உறுதி, கொள்கையை விடாமை, இம்மாதிரியான குணங்கள் எல்லாம் படை வீரனிடமும், சத்தியாக்கிரகிகளிடமும் இருந்தால் பெருங் குணங்களாகக் கருதப்படும். அது போயும் போயும் ஒரு கலெக்டர் ஆபீஸ் குமாஸ்தாவிடம் தஞ்சம் புகுந்தால் அசட்டுத்தனமான பிடிவாதம் என்று கூறுவார்கள்.

பால்வண்ணம் பிள்ளை ஆபீஸில் பசு. வீட்டிலோ ஹிட்லர். அன்று கோபம். ஆபீஸிலிருந்து வரும் பொழுது —ஹிட்லரின் மீசை அவருக்கு இல்லா விட்டாலும்— உதடுகள் துடித்தன. முக்கியமாக மேலுதடு துடித்தது. காரணம், ஆபீஸில் பக்கத்துக் குமாஸ்தாவுடன் ஒரு சிறு பூசல். இவர் மெக்ஸிகோ தென் அமெரிக்காவில் இருக்கிறதென்றார். இவருடைய நண்பர் பூகோள

சாஸ்திரம் வேறு மாதிரிக் கூறுகிறதென்றார். பால் வண்ணம் பிள்ளை தமது கட்சியை நிரூபிப்பதற்காக வெகு வேகமாக வீட்டிற்கு வருகிறார்.

பால்வண்ணம் பிள்ளைக்கும் அவருடைய மனைவி யாருக்கும் கர்ப்பத் தடையில் நம்பிக்கை கிடையாது. அதன் விளைவு வருஷம் தவறாது ஒரு குழந்தை. தற்பொழுது பால்வண்ண சந்ததி நான்காவது எண்ணிக்கை; பிறகு வருகிற சித்திரையில் நம்பிக்கை.

இப்படிப்பட்ட குடும்பத்தில் பால்வண்ணக் 'கொடுக்கு' கள் 'பேபி ஷோ'க்களில் பரிசு பெறும் என்று எதிர்பார்க்க முடியாது. பால்வண்ணம் பிள்ளையின் சகதர்மிணி, உழைப்பிலும் பிரசவத்திலும் சோர்ந்தவள். தேகத்தின் சோர்வினாலும், உள்ளத்தின் களைப்பினாலும் ஏற்பட்ட பொறுமை.

கைக்குழந்தைக்கு முந்தியது சவலை. கைக்குழந்தை பலவீனம். தாயின் களைத்த தேகம் குழந்தையைப் போஷிக்கச் சக்தியற்று விட்டது. இப்படியும் அப்படியு மாக, தர்ம ஆஸ்பத்திரியின் மருந்துத் தண்ணீரும், வாடிக்கைப் பால்காரனின் கடன் பாலுமாக, குழந்தை களைப் போஷித்து வருகிறது. அந்த மாதம் பால் 'பட்ஜட்—எப்பொழுதும் போல்—நான்கு ரூபாய் மேலாகி விட்டது.

இம்மாதிரியான நிலைமையில் பால் பிரச்னையைப் பற்றி பால்வண்ணம் பிள்ளையின் சகதர்மிணிக்கு ஒரு யுக்தி தோன்றியது. அது ஒன்றும் அதிசயமான யுக்தியல்ல. குழந்தைகளுக்கு உபயோகமாகும்படி ஒரு மாடு வாங்கி விட்டால் என்ன என்பதுதான்.

தெய்வத்தின் அருளைத் திடீரென்று பெற்ற பக்தனும், புதிதாக ஒரு உண்மையைக் கண்டுபிடித்த விஞ்ஞானியும்,

'சும்மா' இருக்க மாட்டார்கள். சளசளவென்று கேட்கிற வர்கள் காது புளிக்கும்படி சொல்லிக் கொட்டி விடுவார்கள். பால்வண்ணம் பிள்ளையின் மனைவிக்கும் அதே நிலை ஏற்பட்டது.

பிள்ளையவர்கள் வீட்டிற்கு வரும்பொழுது, அவர் ஸ்கூல் பைனல் வகுப்பில் உபயோகித்த பூகோளப் படம் எங்கு இருக்கிறது, மாடியிலிருக்கும் ஷெல்பிலா, அல்லது அரங்கிலிருக்கும் மரப் பெட்டியிலா என்று எண்ணிக் கொண்டு வந்தார்.

வீட்டிற்குள் ஏறியதும், "ஏளா! அரங்குச் சாவி எங்கே?" என்று கேட்டுக்கொண்டே மாடிக்குச் சென்று ஷெல்பை ஆராய்ந்தார்.

அவர் மனைவி சாவியை எடுத்துக் கொண்டு பின் தொடர்ந்தாள். அவளுக்குப் பால் நெருக்கடியை ஒழிக்கும் மாட்டுப் பிரச்னையை அவரிடம் கூற வேண்டும் என்று உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன. ஆனால் மெக்ஸிகோ பிரச்னையில் ஈடுபட்டிருக்கும் பால்வண்ணம் பிள்ளையின் மனம் அதை வரவேற்கும் நிலையில் இல்லை.

"என்ன தேடுதிய?" என்றாள்.

"ஒரு பொஸ்தகம். சாவி யெங்கே?"

"இந்தாருங்க. ஒங்ககிட்ட ஒண்ணு சொல்லுணுமே! இந்தப் புள்ளைகளுக்குப் பால் செலவு சாஸ்தியா இருக்கே! ஒரு மாட்டெத்தான் பத்து நூறு குடுத்து புடிச்சிப்புட்டா என்ன?" என்றாள்.

"இங்கே வர வேண்டியதுதான், ஒரே ராமாயணம். மாடு கீடு வாங்க முடியாது. எம் புள்ளெய நீத்தண்ணியை குடிச்சு வளரும்!" என்று சொல்லிவிட்டார். மெக்ஸிகோ

வட அமெரிக்காவிலிருந்தால் பிறகு ஏன் அவருக்குக் கோபம் வராது?

பால் பிரச்னை அத்துடன் தீர்ந்து போகவில்லை. அவர் மனைவியின் கையில் இரண்டு கெட்டிக் காப்பு இருந்தது. அவளுக்குக் குழந்தையின் மீதிருந்த பாசத்தினால், அந்தக் காப்புகள் மயிலைப் பசுவும் கன்றுக் குட்டியுமாக மாறின.

இரண்டுநாள் கழித்துப் பால்வண்ணம் பிள்ளை ஆபீஸிலிருந்து வந்து புறவாசலில் கை கழுவச் சென்ற பொழுது, உரலடியில் கட்டியிருந்த கன்று, வைக்கோல் அசை போட்டுக் கொண்டிருக்கும் மாட்டைப் பார்த்து 'அம்மா' வென்று கத்தியது.

"ஏளா?" என்று கூப்பிட்டார்.

மனைவி சிரித்துக் கொண்டே—உள்ளுக்குள் பயம் தான்—வந்தாள்.

"மாடு எப்பொழுது வந்தது? யார் வாங்கிக் கொடுத்தா?" என்றார்.

"மேலவீட்டு அண்ணாச்சி வாங்கித் தந்தாஹ. பாலு ஒரு படி கறக்குமாம்!" என்றாள்.

"உம்" என்றார்.

அன்று புதுப் பால், வீட்டுப் பால் காப்பி கொண்டு வந்து வைத்துக் கொண்டு கணவரைத் தேடினாள். அவர் இல்லை.

அதிலிருந்து பிள்ளையவர்கள் காப்பியும் மோரும் சாப்பிடுவதில்லை.

அவர் மனைவிக்கு மிகுந்த வருத்தம். ஒரு பக்கம் குழந்தைகள். மற்றொரு பக்கம் புருஷன் என்ற குழந்தை. வம்சவிருத்தி என்ற இயற்கை விதி அவளை வென்றது.

இப்படிப் பதினைந்து நாட்கள்.

மாட்டை என்ன செய்வது?

அன்று இரவு எட்டு மணி இருக்கும். பால்வண்ணம் பிள்ளையும் சுப்புக் கோனாரும் வீட்டினுள் நுழைந்தார்கள்.

"மாட்டைப் பாரும். இருப்பத்தஞ்சி ரூபா!" என்றார்.

"சாமி! மாடு அறுபது ரூபாய் பெறுமே!" என்றார் சுப்புக் கோனார்.

"இருபத்தைந்துதான். உனக்காக முப்பது ரூபாய் என்ன? இப்பொழுதே பிடித்துக் கொண்டு போக வேண்டும்!"

"சாமி! ராத்திரியிலா? நாளைக்கு விடியன்னே பிடிச்சிக்கிறேன்!" என்றார் சுப்புக்கோனார்.

"உம் இப்பவே?"

மாட்டையவிழ்த்தாய் விட்டது.

மனைவி 'மாடு எழுபது ரூபாயாயிற்றே, குழந்தைகளுக்குப் பாலாயிற்றே' என்று தடுத்தாள். மேலும் வரும்படி வேறு வருகிறதாம்.

"என் புள்ளெகள் ரீத்தண்ணி குடிச்சு வளந்துக்கிடும்" என்றார் பிள்ளை.

சுப்புக் கோனார் மாட்டை அவிழ்த்துக் கொண்டு போகும் பொழுது, மூத்தபையன், "அம்மா! என் கன்னுக்குட்டி!" என்று எழுந்து உட்கார்ந்துகொண்டு அழுதான்.

"சும்மா கெட, சவமே!" என்றார் பால்வண்ணம் பிள்ளை.

(1934)

★

# கோபாலய்யங்காரின் மனைவி

(பாரதியார் தமது சந்திரிகை என்ற நாவலிலே, கோபால அய்யங்காருக்கும், வீரேசலிங்கம் பந்துலு வீட்டுப் பெண்ணாகிய மீனாட்சிக்கும் பிரம்ம சமாஜத்தில் நடந்த கலப்பு மணத்தை வருணித்திருக்கிறார். கதையின் போக்கு கண்டதும் காதல், என்ற கோபால அய்யங்காரின் இலட்சியத்துடன்—ஏன், பிரமை என்றும் கூறலாம்—முடிவடைகிறது. முடிவு பெறாத இரண்டாவது பாகத்தில் வருணிப்பாரோ, என்னவோ? மனிதன், 'காதல் பெண்ணின் கடைக்கண் பணியிலே, அனலை விழுங்கலாம்! புளித்த குழம்பையும், குழைந்த சோற்றையும் உண்ணச் சம்மதிப்பானோ என்னவோ? பின் கதையை என் போக்கில் எழுதுகிறேன். பாரதியின் போக்கு இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்பதில்லை.)

டெப்டி கலெக்டர் கோபாலய்யங்கார் தமது மனைவி மீனாட்சியை யழைத்துக்கொண்டு தஞ்சைக்கு வந்து ஒரு மாத காலமாகிறது. ஊரில் எல்லாம் பரபரப்பு ஒரே பேச்சு - கோபாலய்யங்கார் இடைச்சியைக் கலியாணம் செய்து கொண்டார் என்பதுதான். எல்லாம் கிசுகிசு என்ற பேச்சு. எதிரில் பேச முடியுமா? அதுவும் அந்தக் காலத்தில்; அதுவும் தஞ்சாவூரில். சிலர் போயும் போயும் இடைச்சி

தானா அகப்பட்டாள் என்று பேசிக்கொண்டார்கள். படியாதவர்கள், யாரோ இடைச்சியை இழுத்து வந்து வைப்பாக வைத்திருக்கிறார் என்ன அபிப்ராயப்பட்டார்கள். ஆனால் பத்திரிகைகளில் பிரசுரமான செய்தி என்பதால் வேறு வழியின்றி நம்பிக்கொண்டார்கள். பியூன்களுக்கு அய்யங்கார் என்றால் சிறிது இளக்காரம்; அவர் முதுகுப்புறம் சிரிப்பார்கள்.

இவ்வளவும் கோபாலய்யங்காருக்குத் தெரியாது. அதாவது தெரிய சந்தர்ப்பம் வைத்துக் கொள்ளவில்லை. வீட்டிலே மீனாட்சிக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க ஒரு கிறிஸ்தவ உபாத்தினி. முன்பிருந்த பிராமணப் பரிசாரகன் சொல்லிக் கொள்ளாமல் ஓடி விட்டான். ஒரு நாள் மீனாட்சி சமைத்தாள். அதாவது அவள் குலாசாரப் படி சமைத்தாள். லவங்கப்பட்டை, பெருஞ்சீரகம் இத்தியாதி பொருள்களுடன், தன் கைப் பாகமாக மிகுந்த ஜாக்கிரதையுடன் வைத்திருந்தாள்.

கோபாலய்யங்கார் குடிகாரர்தான்! ஆனால் மாமிச பட்சணியல்ல. மீனாவின் கண்களைப் பார்த்துக் கொண்டு இரண்டு கவளம் வாயில் போட்டார். அவ்வளவுதான். குடலைப் பிடுங்கியதுபோல் ஓங்கரித்து வாந்தி எடுத்தார். மாமிச உணவின் பாகம் என்று நினைப்பில் ஏற்பட்டது. மீனா பதறித் தன் கணவன் தலையைத் தாங்கினாள். கோபாலய்யங்கார் போஜனப் பிரியர். பசி காதலை வென்றது. அவளை உதறித் தள்ளிவிட்டு, வெளியே சென்று சேவகனைக் கூப்பிட்டு, பிராமண குமாஸ்தா வசம் ஹோட்டலில் இருந்து சாப்பாடு தருவித்தார்.

போஜனமான பிறகுதான் கோபாலய்யங்காருக்குத் தமது காதல் திரும்பியும் வந்தது.

"மீனா!" என்று கூப்பிட்டுக் கொண்டு உள்ளே வந்தார்.

"சாமீ!" என்று எழுந்தாள் மூலையில் உட்கார்ந்திருந்த காதலி. அவள் கண்களில் இரண்டு துளிகள், அவர்கள் இருவருக்கும் இடையே இருக்கும் அகழியை எடுத்துக் காண்பித்தது.

மீனாட்சி பணிப் பெண். அதிலும் பயந்த பெண். மருண்ட பார்வை. கணவன் என்ற ஸ்தானத்தில் அவரை வைக்கவில்லை. தனது தெய்வம் என்ற ஸ்தானத்தில், அதாவது தனக்கு எட்டாத ஒரு ஸ்தானத்தில் இருக்கும் ஒரு லட்சியம் என்று கருதியவள். எட்டாதது என்ற நினைப்பில் பிறந்த பயம். கணவன் இஷ்டப்படி நடக்கத் தூண்டியதே யல்லாது, அவரிடத்தில் தன்னை மறந்த பாசம், லயம் பிறந்ததே கிடையாது.

"என்ன மீனா! உனக்கு எத்தனை தரம் அப்படிக் கூப்பிடக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன்! கண்ணா இப்படி வா. என்ன இப்படிக் கறிக்குழம்பு வைத்தாய்?" என்றார்.

"இல்லிங்களே, இப்படித்தான் எங்க வீட்டிலே பருப்புக் கொளம்பு வைப்பாங்க!" என்றாள்.

"அதை அப்பொழுதே சொல்லி இருக்கக் கூடாதா? ஹோட்டலில் சாப்பாடு எடுத்து வரச் சொன்னால் போகிறது. அது கிடக்கட்டும். இப்படி வா!"

அவளை ஆரத் தழுவி தமது மடிமீதிருத்தி முத்தங்களைச் சொரிந்தார். மீனாள் செயலற்ற பாவைபோல இடங் கொடுத்தாள். கணவன், கலெக்டர் என்ற பயம். அவர் இஷ்டம் போல் இருக்க வேண்டும் என்பதில் ஏற்பட்ட பயம்.

“என்ன மீனா, ஒரு முத்தமிடு.”

மீனாள் தயங்கினாள். ஒரு பயந்த முத்தம் கோபாலய்யங்காரின் கன்னத்தை ஸ்பரிசித்தது.

“என்ன மீனா, இன்னும் பயமா? உன் பயத்தைப் போக்குகிறேன் பார். உனக்கு இரத்தமே இல்லையே. இந்த மருந்தைக் குடி,” என்று ஒரு கிளாஸில் ஒயினை ஊற்றிக் கொடுத்தார். குடித்தாள். சிறிது இனிப்பும் காரமும்தான் தெரிந்தது. மறு நிமிஷம், உடல் பூராவாகவும் ஏதோ ஒன்று பரவுவதுபோல் பட்டது.

“என்னமாக இருக்கிறது?”

“கொஞ்சம் இனிச்சுக்கிட்டு காரமா இருந்துச்சு, என்னமோ மாதிரியா இருக்குதே?”

“என்னமாக இருக்கிறது?”

“நல்லாத்தான் இருக்குது!” என்றாள்.

அவளும் வாலிபப் பெண்தானே. அதுவும் ஒயின் உதவியும் கூட இருக்கும்பொழுது? அன்று சிறிது பயத்தை மறந்தாள். அன்று அவளுக்குக் கோபாலய்யங்காரின் மீது ஏற்பட்ட பாசம், வாலிபத்தின் கூறு. கோபாலய்யங்கார் மீனா தன்னைக் காதலிப்பதாக எண்ணி மகிழ்ந்தார்.

## 2

கோபாலய்யங்கார் சிறிது கஷ்டப்பட்டு ஒரு பிராமணப் பரிசாரகனை நியமித்தார். சம்பளம் இருபத்தைந்து ரூபாய் என்ற ஆசையும், கலெக்டர் அய்யங்கார் என்ற பயமும் இருந்தால், ஒரு ஏழைப் பிராமணன் அகப்படாமலா போகிறான்?

ஆனால் கலெக்டருக்கும் பரிசாரகனுக்கும் ஒரு சமரச ஒப்பந்தம். கோபாலய்யங்கார் தஞ்சை ஜில்லாவிற்குப் பூராவாகவும் ஏதேச்சாதிகாரியாக இருப்பது என்றும், சமையலறையைப் பொறுத்த மட்டில் பரிசாரகன் சுப்புவையர்தான் ஏதேச்சாதிகாரி என்றும் சமையலறைப் பக்கம் கலெக்டர் அய்யங்காரோ, கலெக்டர் அம்மாளோ வரக்கூடாது, பாத்திரங்களைத் தொடக்கூடாது, இருவருக்கும் பரிமாறுவதும், சமையல் செய்வதும், சுப்புவையரின் வேலை என்றும் திட்டமாயிற்று.

சாப்பாட்டுப் பிரச்னை ஒருவாறு முடிந்ததும், கோபாலய்யங்கார், தமது கலெக்டர் தொழிலையும் காதல் கனவையும் அனுபவிக்க முயன்றார். கலெக்டர் வேலை பரிச்சயமானது. ஆனால் காதல்...

மீனாளுக்குப் பயமும், கோபாலய்யங்காரின் மீது மோகமும்தான் இருந்து வந்தன. அதிலும், அவர் பயிற்சி செய்வித்த மருந்தில் கொஞ்சம் பிரேமையும் விழுந்திருந்தது.

ஒரு நாள் சாயங்காலம்.

கோபாலய்யங்கார் ஆபீஸிலிருந்து வந்து, தமது ஆங்கில வேஷத்தைக் களைந்துகொண்டிருந்தார்.

அப்பொழுது மீனாள் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். அய்யங்கார், 'டிரஸ்' செய்வதைப் பார்ப்பதில் அவளுக்கு ஒரு பிரமை, ஆச்சரியம்.

கோபாலய்யங்கார் ஒரு முத்தத்தை எதிர்பார்த்தார். ஆசை இருந்தாலல்லவோ, பாசம் இருந்தால் அல்லவோ?

கோபாலய்யங்காருக்குச் சிறிது ஏமாற்றமாயிருந்தது.

"மீனா! என் பேரில் உனக்குக் காதல் இருக்கிறதா?" என்றார்.

மீனாவுக்கு அர்த்தமாகவில்லை; சிறிது தயங்கினாள்.

"அப்படீன்னா?"

கோபாலய்யங்காருடைய ஏமாற்றம் சிறிது கோபமாக மாறியது.

"என் பேரில் பிரியமில்லை போலிருக்கிறது!" என்றார்.

"என்ன சா...என்னாங்க அப்படிச் சொல்லுறிய? உங்க மேலே பிரியமில்லாமலா?" என்று சிரித்தாள் மீனா.

"வந்து இவ்வளவு நேரமாக ஒரு முத்தமாவது நீயாகத் தரவில்லையே!"

"எங்க ஜாதியிலே அது ஒண்ணும் கெடையாது இப்போ!" என்றாள்.

கோபாலய்யங்காருக்குச் சுருக்கென்று தைத்தது. நல்ல காலமாகச் சுப்புவையர் காப்பியைக் கொண்டு வந்து கொடுக்க உள்ளே நுழைந்தார். கோபம் அவர் மேல் பாய்ந்தது.

"தடியா! காபியை வைத்து விட்டுப் போ!" என்று இரைந்தார்.

அய்யங்காருக்குக் கொஞ்சம் 'டோஸ்' ஜாஸ்தி போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டு போய் விட்டார் பரிசாரகர்.

நாட்களும் வெகுவாக ஓடின. கோபாலய்யங்கார் ஒரு பொம்மைக்குக் காதலுயிர் எழுப்ப பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறார். இதில் தோல்வி இயல்பாகையால் மது என்ற மோகனாங்கியின் காதல் அதிகமாக வளர ஆரம்பித்தது.

மீனாளுக்கு இந்தச் சாப்பாட்டுத் திட்டம் வெகு நாட்களாகப் பிடிக்கவில்லை. தான் பணிப் பெண்ணாக இருக்கும் பொழுது வேளா வேளைகளில் கிடைக்கும் பிராமண உணவு இப்போது வெறுப்பைத் தருவது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. தகப்பனார் வீட்டில் நடக்கும் சமையலைப் பற்றி ஏங்கவாரம்பித்தாள். தனக்குத்தானே சமைத்துக் கொள்ள அனுமதி கேட்கப் பயம். ஆபீஸ் பியூன் கோபாலக் கோனார், கலெக்டர் வீட்டு வேலைகளைக் கவனிக்க நியமிக்கப்பட்ட கிழவன். அவன் வேளா வேளைகளில் சாப்பாடு எடுத்துக் கொண்டு வந்து வீட்டுத் திண்ணையில் சாப்பிடும் பொழுது அவளுக்கு நாவில் ஜலம் ஊறும். வீட்டினுள் இருந்து கண்ணீர் விடுவாள். அவளுக்குக் குழந்தையுள்ளம்; கேட்கவும் பயம்.

கோபாலக் கோனார் அனுபவம் உள்ள கிழவன். இதை எப்படியோ குறிப்பால் உணர்ந்து கொண்டான். ஒரு நாள் ரகஸியமாக மாமிச உணவு தயாரித்து வந்து அவளுக்குக் கொடுத்தான். அவளுக்கு அவன் மீது ஒரு மகளின் அன்பு ஏற்பட்டது. கோபாலக்கோனாருக்கு ஒரு குழந்தையின் மீது ஏற்படும் வாத்ஸல்யம் ஏற்பட்டது.

ரகஸியமாகக் கொஞ்ச நாள் கொடுத்து வந்தான். ரகஸியம் பரம கேட்டை விளைவிக்கும் என்று உணர்ந்து, மீனாளுக்கு ஒரு தந்திரம் கற்பித்தான். அய்யங்கார் போதையிலிருக்கும் பொழுது மாமிச உணவைப் பழக்கப்படுத்த வழி சொல்லிக் கொடுத்தான்.

மீனாள் பிராமணத்தி ஆவது போய், கோபாலய்யங்கார் இடையரானார்.

# 3

கோபாலய்யங்கார் மாமிச பட்சணியான பிறகு, சுப்பு வையரின் எதேச்சாதிகாரம் தொலைந்தது. மீனாள் உண்மையில் கிரகலட்சுமியானாள்.

இரண்டு வருஷ காலம் அவர்களுக்குச் சிட்டாகப் பறந்தது. மீனாளின் துணைக் கருவியாகக் கோபாலய் யங்காரின் மேல்நாட்டுச் சரக்குகள் உபயோகிக்கப் பட்டன.

தம்பதிகள் இருவரும் அதில் ஈடுபட்டதினால் மூப்பு என்பது அவள் வயதைக் கவனியாமலே வந்தது. மீனாளின் அழகு மறைந்தது. ஸ்தூல சரீரியானாள். கோபாலய் யங்கார் தலை நரைத்து, வழுக்கை விழுந்து கிழப்பருவம் எய்தினார்.

இதை மறப்பதற்குக் குடி.

ஆபீஸிற்குப் போகுமுன் தைரியம் கொடுக்கக் குடி.

வந்ததும் மீனாளின் சௌந்தரியத்தை மறக்கக் குடி.

இப்பொழுது அவர்கள் தென்னாற்காடு ஜில்லாவில் இருக்கிறார்கள். இருவருக்கும் பங்களா ஊருக்கு வெளியிலே.

இரவு பத்து மணிக்கு அக்கம் பக்கம் யாராவது போனால் கலெக்டர் தம்பதிகளின் சல்லாப வார்த்தை களைக் கேட்கலாம்.

''ஏ, பாப்பான்!'' என்று மீனாள் கொஞ்சுவாள்.

''என்னடி எடச் சிறுக்கி!'' என்று கோபாலய்யங்கார் காதலுரை பகருவார்.

இருவரும் சேர்ந்து தெம்மாங்கு பாடுவார்கள்.

மீனாளின் 'டிரியோ டிரியோ' பாட்டில்—கோபாலய் யங்காருக்கு—அந்த ஸ்தாயிகளில்—பிரியமதிகம்.

(1934)

★

# குப்பனின் கனவு

அன்றைக்கு நாள் முழுவதும் மழை சிணுசிணுத்துக் கொண்டிருந்தது. ஒரேயடியாக இரண்டு மணி நேரமோ, மூன்று மணி நேரமோ அடித்து வெறித்தாலும் கவலை யற்று வேலை பார்க்கலாம். இப்படி நாள் முழுவதும் அழுது கொண்டிருந்தால்...?

குப்பன் ஒரு ரிக்ஷாக்காரன்.

வண்டியை மேற்கும் கிழக்குமாக இழுத்துச் சென்றது தான் மிச்சம். ஒரு சத்தமாவது கிடைக்கவில்லை.

மேலெல்லாம் நனைந்து விட்டது. தலையில் போட்டிருந்த ஓட்டைத் தொப்பி—அது எந்த வெள்ளைக் காரன் போட்டதோ—அதுவும் தொப்பலாக நனைந்து விட்டது. தொப்பியிலும் உள்பக்கம் ஈரம் சுவரியது என்றால், வேட்டியைக்கூடப் பிழிந்து கட்ட நேர மில்லை. அவ்வளவு ஆவல்.

ஒரு நாலணா கிடைத்தால் வீட்டிலே எறிந்து விட்டா வது முடங்கலாம். போகிற பெரிய மனிதர்களுக்கு, ரிக்ஷா என்றால் மழையில் கசந்து கிடக்கிறது. அந்தத் தெரு மூலையிலே நிற்கிற பிச்சைக்காரன் பாடு குஷிதான். பிச்சைக்காரனாக இருந்தால் கூட...சீ... என்ன மானங் கெட்ட பிழைப்பு!

குப்பன் பொருளாதார சாஸ்திரி யல்ல; பொது வுடைமைக் காரனல்ல. இத்தனை நாளும் அவன் பல்லை இளித்துக் கொண்டு, "ஸார்! ஸார்!" என்று... சட்டை

போட்ட பேர்வழிகளைக் கண்டால் அவனுக்கு எரிச்சலாக இருந்தது. திருட்டுப் பசங்கள்...! ஒரு பயலாவது ஏறக் கூடாதா?

"ஸார்!" என்று ஒருவரிடம் வண்டியைத் திருப்புகிறான்.

அவர், "வேண்டாமப்பா!" என்று கொண்டே டிராமில் ஏறிக் கொண்டு விடுகிறார்.

அந்த மனிதனைக் கிழித்து விடலாமா என்ற கோபம்.

வண்டியை ஸென்ட்ரல் பக்கம் இழுத்துக் கொண்டு செல்லுகிறான். மனதிலே என்ன என்னவோ ஓடுகிறது. இப்பொழுது ஒரு மொந்தைக் கள்ளு அடித்தால், என்ன குஷியாக இருக்கும்! நாவில் ஜலம் ஊறுகிறது. மெட்ராஸ் பூராவுமே வேகமாக இழுத்துக்கொண்டு ஓடலாமே என்று அவனுக்குப் படுகிறது. ஆமாம்! இந்தத் தொலையாத வேலை.

குப்பன் பெண்டாட்டி நாலு காசு பார்க்காமலா இருப்பாள். அவளும் கொஞ்சம் 'தொழில்' நடத்துகிறவள் தான். பிறகு..."எந்த—பத்தினியா இருக்கா?" அவனுக்கும் தெரியும். அவனுக்குத் தெரியும் என்று அவளுக்குத்தெரியும். அவள் நாலு காசு பார்த்திருந்தா... வீட்டுக் கவலை ஒயுஞ்சுது...இவனுக்கு அந்த நாலணா கிடைத்தால் கள்ளுக் கடைக்காச்சு...

குப்பன் வண்டியை இழுத்துக் கொண்டு போகிறான். முகத்தில் பன்னீர் தெளித்த மாதிரி ஓயாமல் தூறல் விழுந்து சொட்டிக் கொண்டிருக்கிறது. சில சமயம் மூக்கில் போகாமல் தும்மிக் கொள்கிறான்...வண்டியும் சடசட வென்று அவன் எண்ணத்திற்குத் தாளம் போடுகிறது.

"அந்த டிராமிலே ஏர்ன ஆசாமி மாதிரி யிருந்தால்..."

அவ்வளவுதான்...

குப்பன் வண்டியிலே குஷியாக உட்கார்ந்திருக்கிறான்.

மேலே கோட்டு, உள்ளே சட்டை; மடியிலே காசு, கையிலே...பீடி......இல்லை, சிகரெட்டு......வண்டியை இழுப்பதும் குப்பன்தான்......குப்பாயியும் உட்கார்ந்து கொண்டால் ஸோக்காக இருக்கும்...அவதான் ஊட்லே இருக்காளே...

"குப்பா, வண்டியெ வேகமா இஸ்திகினு போ...... சாரரியக் கடை...இல்லெடா, வெள்ளைக்காரன் குடிக்கற எடத்துக்கு...ஒரு மிஸி கூட..."

வண்டி போய் ஒரு மாளிகை முன்பு நிற்கிற மாதிரி... குப்பன் இறங்கிக் குப்பனுக்குக் காசு கொடுக்கிறான்... "இந்தாடா நாலணா...கூட ஓரணா எனாம்!..." உம்... உள்ளே போகிறான்...உள்ளே ஸோபா...விசிப்பலகை... நாரு கட்டில் ஸோக்காகத்தான் இருக்கு...'குப்பாயி' என்று கூப்பிடுகிறான். 'போடா குப்பா, வேலை இக்கிது' என்று குப்பாயி வருகிறாள்...அப்பொழுது ட்ராமில் ஏறிய கனவான் வருகிறார். 'ஏன்டா குப்பா ஏன் வூட்லே...' 'போ சாமி...அதெல்லாம் அந்தக் காலம் மலையேறிப் போச்சு...அன்னைக்கி ஏமாத்தலேயோ? ஏய்! வூடு. அப்படி முழி...அப்போ ஏமாத்தனப்ப எப்படி இருந்தது? குப்பாயி, வெளியிலே புடிச்சுத் தள்ளு அவனை ...வா...ஒனக்கு வேணும்னா நாலணா எடுத்துகினு பேசாதே ஓடிப்போ. கூச்சப் போடாதே, இது...குப்பாயி வூடு. தெரிஞ்சிதா...வேண்ணா வெளிலே ரிக்ஷா நிக்குது; இஸ்து பொயிச்சுக்கோ...

"ஏன்டா முழிக்கிறே! போலீசைக் கூப்பிடுவேன்..."

படீரென்ற அறை. திடுக்கிட்டு நிற்கிறான், வண்டி லாந்தல் கம்பத்தில் மோதிக்கொண்டது.

"என்னா ரிக்ஷா, பிராட்வேக்கு வாரியா?" என்றார் ஒருவர்.

"ஏறு சாமி! என்னா குடுக்கறே?"

"நாலணா!"

குப்பனுக்குச் சற்று முன் இழந்த முதலாளிப் பதவியை விட அந்த நாலணா மிகுந்த களிப்பைத் தந்தது.

**நாலணா!** (1934)

★

# பித்துக்குளி

மாவேலிக் கரை என்றால் மனதில் என்ன என்னவோ எண்ணங்கள் எல்லாம் குவிகின்றன. இயற்கை அன்னை தன் எழில்களை எல்லாம் அந்த மேற்கு மலை மறைவிலே கொட்டிக் குதூகலித்து விளையாடுகிறாள். வாலிபனுக்குக் காதல் தோன்றும். கவிஞனுக்குக் கனவு தோன்றும். அறிவில் முதியவனுக்குச் சாந்தி தோன்றும் அந்த இடத்திலே.

சுற்றிலும் காயல் நீலவானைத் தழுவியது. அதன் ஓரத்திலே கமுக மரங்களைக் குழைந்து தழுவின காதற் கொடிகள்—மிளகுதான். அந்த மிளகுக் கொடி...உள்ளத்தையும் உடலையும் ரகஸ்யமற்று அர்ப்பணம் செய்யும் கங்கையின் களங்கமற்ற அன்பு மாதிரி...

காயலுக்கு வட பக்கத்தில் வடசேரி. அதில் வல்லியத் தம்பிரான் என்றால் பழைய அரச வம்சம். மலை நாட்டு வீரம் முதலிய இழந்த இலக்ஷியங்கள் எல்லாம் நினைவிற்கு வரும். அவருக்கு ஒரு மகள் சகுந்தலா. காளிதாசன் கனவில் கண்ட சாகுந்தலை இவளைப் போல்தான் இருந்திருக்க முடியும். இயற்கையின் மடியில் வளர்ந்த குயில் பழைய படாடோபத்தின் அம்சமான வல்லியத் தம்பிரானுக்கு உயிர். சமஸ்தான சம்பந்தத்தில் தமது இழந்த சிறப்புக்களைப் பெறவிருந்தார். அவளுடைய ரகஸிய நாடிகளை அவர் அறிவாரா?...

மாவேலிக் கரைக்கும் வடசேரிக்கும் இடையில் காயல் ஒரு மைல்தான்.

மாவேலிக் கரையில் நீரருகில் ஒரு பிறையிடம் தம்பிரானைச் சேர்ந்ததுதான். அங்கே மார்த்தாண்ட வர்மன் என்ற வாலிபன். ஓலைச்சுவடி, விவசாயம் இது தான் அவனுடைய பொழுதுபோக்கு, வாழ்க்கை இலட்சியம்.

அன்று இரவு சற்று மழை தூறிக்கொண்டிருந்தது.

ஓங்கி வளர்ந்த தென்னங்கீற்றுகளிலிருந்து சொட்டுச் சொட்டென்று நீர்த் துளிகள்.

நாளைக்குச் சகுந்தலா புருஷன் வீடு சென்று விடுவாள்.

இன்றாவது கடைசி முறை காண...

இருளிலே படகு வரும் சப்தம்.

மார்த்தாண்ட வர்மன் ஒரு மூலையில் மணையில் உட்கார்ந்திருக்கிறான்.

இருட்டு.

அவள் வந்தாள். தீபத்தை ஏற்றினாள்.

மூலையிலிருந்த கரியடுப்பில் பாலைக் காய்ச்சினாள்.

அதைக் கையில் எடுத்துக்கொண்டு அவன் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

மார்த்தாண்ட வர்மன் நினைவற்றவன் போல் இருந் தான்.

பால் கிண்ணம் அவனது வாயண்டை வந்தது. குழந்தை மாதிரி அருந்தினான்.

பிறகும்...?

மௌனந்தான்.

மெதுவாக அவன் கால்களை எடுத்து இடையில் சுற்றிக் கொண்டாள்...

அவளது மழையில் நனைந்த உடலை மறைத்த கேசத்தை ஒதுக்கி அவனது சிரத்தைத் தோள் மீது மெதுவாகச் சாய்த்தாள். அவனது உஷ்ணமான கன்னங்கள்...அவள் கழுத்திலிருந்து முகம்வரை செக்கச் சிவப்பாக மாறியது...

மெதுவாக அணைத்த அவன் கரத்துடன் அவன் மடியில் கண்ணை மூடிய வண்ணம் படுத்தாள்.

என்ன நம்பிக்கை! அவள் கடைக்கண்ணில் சுடர் விட்ட இரண்டு துளிகள் எதை நினைத்தனவோ!

'ஆமாம் ... சகுந்தலா ... என்னுடைய ... சகுந்தலா... அவள் என்னுடையவள்...அவள் கழுத்து, அந்தப் பிளவு பட்ட கேசம் எவ்வளவு அழகாக...இப்படியே என் பக்கத்தில்...எப்பொழுதுமே...ஆமாம். எப்பொழுதுமே...அதை அவள் கழுத்தில் அப்படியே சுற்றினால்...'

அவனது கரங்கள் இரு கூறாகப் பிளந்து கிடந்த சிகையை அவள் கழுத்தில் சுற்றுகின்றன, இறுக்குகின்றன.

"ஆமாம்! என்னுடையவள்!" என்ற வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வருகின்றன.

அவள் கண்கள் மூடியபடிதான்...அதரத்திலும் அந்தப் புன்சிரிப்பு. அந்தத் தழுவல், அவனைத் தன்னுள் அழுத்திய கை இன்னும் அவனை இழுப்பது மாதிரி அழுத்துகின்றது... அந்த நிலையில்...

அவ்வளவுதான்.

அந்த இரண்டு துளிகள் என்ன நினைத்தனவோ?

அன்று அவனை அணைத்த வண்ணமே இரவு கழிகிறது.

அவள் எப்படி விலகுவாள்? உயிர் இருந்தால்தானே.

அன்று இரவு அவள் விலகவில்லை.

அவன் மனதில் காதலின் வெறி! ஐக்கிய வெறி!...

அவள் எப்படி நீங்குவாள்?

அன்று இரவு அவள் நீங்கவில்லை!

உயிர் இருந்தால்தானே! (1934)

★

# கடவுளின் பிரதிநிதி

## 1

சிற்றூர் உண்மையிலேயே சிற்றூர்தான்.

அதன் எல்லை எல்லாம் ஒரே தெருவிற்குள். அந்தத் தெருவும் இடையிடையில் பல் விழுந்த கிழவியின் பொக்கை வாய் மாதிரி...இடிந்தும் தகர்ந்தும் சிதறிய வீடுகள். அவ்வளவும் பிராமண வீடுகள். விவசாயம் என்ற சம்பிர தாயமாக மண்ணைக் கிளறும், மண்ணைக் கவ்வும் சோம்பேறித்தனம். தெருவின் மேற்குக் கோடியில் முற்றுப்புள்ளி வைத்த மாதிரி கிழக்கே பார்த்த சிவன் கோவில்.

அங்கு கோவில் கொண்டருளிய சிவனாரும், அவ்வூர் வாசிகள் போலத்தான்.

**கூறு சங்குதோல்முரசு கொட்டோசை யல்லாமல்**
**சோறுகண்ட மூளியார் சொல்.**

சிவபிரான் உண்மையாகப் பிச்சாண்டியாக இருப் பதைக் காண வேண்டுமானால் சிற்றூருக்குத்தான் செல்ல வேண்டும்.

ஊருக்கு வெகு தொலைவில், அதாவது, ஊருக்குப் பக்கத்திலிருக்கும் வாய்க்காலையும் வயல்காடுகளையும் தாண்டி ஊரின் சேரி.

இந்த அக்கிரகாரப் பிச்சைக்காரர்களுக்கு அடிமைப் பிச்சைக்காரர்கள்.

இரு ஜாதியாருடைய நிலைமையும் ஒன்றுதான். ஒருவர் சேஷப்படாது பட்டினியிருந்தால் இன்னொருவன் அசுத்தத்துடன் பட்டினியிருக்கிறான்.

சேரிப் பட்டினிகளுக்கு, அக்கிரகாரப் பட்டினிகளின் மீது பரம பக்தி. இருவருக்கும், அந்தப் பெயர் தெரியாத கும்பினி ராஜ்யத்தில் பரம நம்பிக்கை, பயம்.

ஊர்க்கர்ரர்களுக்கும் பிரிட்டிஷ் அமல் அதன் பக்கத் தூரிலிருந்துதான். அதாவது ஐந்து மைல் தூரத்திலுள்ள பெத்து நாயக்கன் பட்டியில்தான் கி.மு. என்ற பிரிட்டிஷ் பிரதிநிதி.

ஊர்க்காரர்களுக்குச் சுற்றுப் பிரயாணத்தில் நம்பிக்கை கிடையாது. கலியாணம், காட்சி, பிராம்மண போஜனம் விதிவிலக்காக அவர்களை வெளியூருக்கு இழுத்தால், மறுபடியும், தங்கள் இடிந்த வீட்டில் வந்து பட்டினி கிடைக்கும் வரையில், கால் கொள்ளாது.

ஊர்க்காரர்களுக்கு, அவர்கள் பிரதிநிதியும் மெய்க் காப்பாளருமான சிவபிரானின் மீது பரம பக்தி. இவ்வளவு சுபிட்சமாக இருப்பதும், நெற்றிக் கண்ணைத் திறக்க மறந்த சிவபிரானின் கருணை என்று நினைப்பவர்கள்.

கோவில் அர்ச்சகர் சுப்பு சாஸ்திரிகள் சிற்றூரைப் பொறுத்தமட்டிலும் வீட்டில் பட்டினியானாலும் நல்ல மதிப்பு உண்டு. வேத அத்தியயனத்தில் சிறிது பயிற்சி. பூஜை மந்திரங்கள் மனப்பாடம். வேதத்தின் அர்த்தம் அவருக்கும் தெரியாது. பரம சாது. தெரியாததினால் அதில் பக்தி.

கோவிலில் வரும் சிறு வரும்படிகளில் காலம் தள்ளி வந்தார். கோவில் சேவைகளில் கிடைக்கும் கூலி, நியாயமாகப் பெற வேண்டியதுதான் என்று நினைப்பவர்,

ஏனென்றால் அவருடைய தகப்பனாரும் அந்தத் தொழில் செய்தவர்.

ஊரில் நல்ல மனிதன் என்றால் சுப்பு சாஸ்திரிகள்.

இளகிய மனதுடையவர் என்றால் சுப்பு சாஸ்திரிகள்.

## 2

இம்மாதிரி சாந்தி குடி கொண்ட வாழ்க்கையிலே சூறைக்காற்று போல் புகுந்தது ஹரிஜன இயக்கம்.

அது ஊரையே ஒரு குலுக்குக் குலுக்கியது.

திரு. சங்கர் சிற்றூரில் தமது தொண்டைப் பிரசாரம் செய்ய வந்தார். அவரும் ஜாதியில் பிராமணர். தியாகம், சிறை என்ற அக்கினிகளால் புனிதமாக்கப்பட்டவர். சலியாது உழைப்பவர். உண்மையை ஒளிவு மறைவில்லாது போட்டு அடித்து உடைப்பவர்.

ஊருக்கு வந்ததும், சாயங்காலம் கோவில் முன்பு ஹிந்து தர்மத்தைப் பற்றி பேசப் போவதாக வீடு வீடாகச் சென்று சொல்லிவிட்டு வந்தார்.

அவ்வூர்க்காரர்கள் காந்தி என்ற பெயர் கேட்டிருக்கிறார்கள். அந்தப் பெயரின் மேல் காரணமற்ற பக்தி. கதருடை யணிந்தவர்கள் எல்லாம் காந்தியின் தூதர்கள். இதைத் தவிர அவர்களுக்கு வேறு ஒன்றும் தெரியாது.

அன்று சாயங்காலம்.

மேற்கு வானத்திலே சூரியன் இருப்பது, கிளைகளினூடு இடிந்த கோபுரத்தில் பாய்ந்த கிரணங்களால்

தெரிந்தது. பாழ்பட்ட இலட்சியத்தை மறுபடியும் உயிர்ப்பிக்கப் பாயும் தெய்வீக ஜீவநாடி போல, சூரிய கிரணங்கள் கோபுரத்தைத் தழுவின. அந்தப் பிரகாசத்தில் கோவில் பார்ப்பதற்குப் பரிதாபகரமாக இருந்தது.

துவஜ ஸ்தம்பத்தினடியில் நின்று கொண்டு திரு. சங்கர் தமது பிரசங்கத்தை ஆரம்பித்தார்.

முதலில் சேரியின் தினசரி வாழ்க்கையையும், கடவுளற்ற-இலட்சியமற்ற இருளில் அவர்கள் தடுமாறுவதையும், அவர்களும் நமது சகோதரர்கள் என்பதையும் வருணிக்கும்வரை சபையினர்கள் எல்லோரும் அவருடன் ஒத்து அபிப்பிராயப்பட்டனர்.

சுப்பு சாஸ்திரிகளுக்குக் கேட்கும் பொழுது கண்களில் ஜலம் தளும்பியது.

பிறகு—

ஹரிஜனங்களைக் கோவில்களில் அனுமதிக்க வேண்டும் என்றும், அதைத் தடை செய்வதைப் போல் மகத்தான பாபம் கிடையாது என்றும் விஸ்தரிக்கலானார்.

சுப்பு சாஸ்திரிகளுக்கு நெஞ்சில் யாரோ சம்மட்டியால் அடித்தது போல் இருந்தது.

கோவிலுக்குள்ளா?

"அடா பாவி! உன் நாக்கு வெந்து போகாதா?" என்றார்.

"காந்தி அப்படிச் சொல்லியிருக்க மாட்டார்!" என்று மற்றொருவர் அபிப்பிராயப்பட்டார்.

திரு. சங்கர் இதற்கு வேதத்திலிருந்தும், ஹிந்து தர்ம சாஸ்திரங்களிலிருந்தும் ஆதாரம் கூற, வேதங்களை இயற்றிய ரிஷி மூலங்களை விஸ்தரிக்கவாரம்பித்தார்.

சுப்பு சாஸ்திரிகளுக்குப் பெரும் கலக்கமாயிற்று. தான் இதுவரை நம்பிக்கை வைத்து அதன்படி ஒழுகுவதாக நினைத்த வேதமும் இப்படிக் கூறுமா? பாபி பொய் சொல்லுகிறான். உண்மையாக இருக்குமோ? இருந்தால் இதுவரை முன்னோர்கள் இது தெரியாமலா இருந்திருப்பார்கள்? கலக்கம், சந்தேகம், குழப்பம்.

உள்ளத்தின் கலக்கம் எல்லாம் சீறிக் கொதித்துக் கலங்கிய கண்ணீருடன் வெளிப்பட்டது.

''பதிதன்! சண்டாளன்! துரோகி! கோவிலைப் பாழ்படுத்த வருகிறான்!'' என்று என்னென்னமோ தழுதழுத்த குரலில் பிதற்றி விட்டு அகன்று விட்டார்.

உடனே கூடியிருந்த சபையும் பேசி வைத்தது போல் கலைந்து போயிற்று.

துவஜ ஸ்தம்பத்தினருகில் அதைப் போல் மௌனமாக நிற்கும் திரு. சங்கரைத் தவிர வேறு யாருமில்லை.

இப்படிப்பட்ட வாயில்லாப் பூச்சிகளுக்கு என்னத்தைச் சொல்லுவது? நினைவு குவிந்த உள்ளத்துடன் ஊருக்கு வெளியே சென்றார். ஊர் இருக்கும் மனப்பான்மையில் அன்று அவர் பட்டினி இருக்க வேண்டும் என்பதைத் திட்டமாகத் தெரிந்து கொண்டார்.

ஊர் அன்றிரவு அல்லோல கல்லோலப்பட்டது.

இந்தப் பேச்சு சேரிப் பறையர்களுக்கு எப்படியோ தெரிந்து விட்டது. இம்மாதிரி மகத்தான பாவத்தைப் போதிக்கும் மனிதனை உதைக்க வேண்டும் என்று நினைத்து விட்டார்கள். 'சாமி'களுக்குச் சரி சமானமாய்க் கோவிலுக்குள் இவர்கள் போக வேண்டும் என்று சொன்னால் கண் அவிந்து போகாதா?

திரு. சங்கர் என்னவோ நினைத்துக் கொண்டு ஊருக்கு மேற்குப் பக்கம் செல்லுகிறார்.

தூரத்திலிருந்து நாலைந்து கல்லை எறிந்துவிட்டு ஓடி விடுகிறார்கள். ஒரு கல் அவர் மண்டையில் விழுந்து காயத்தை உண்டு பண்ணி விட்டது.

இதை எதிர்பார்க்கவில்லை.

திரும்பிப் பார்க்குமுன் தலை சுற்றி மயங்கிவிழுகிறார்.

## 3

சுப்பு சாஸ்திரிகளுக்கு அன்று ஒன்றும் ஓடவில்லை. திரு. சங்கருக்கு அவர் வீட்டில் சாப்பாடு என்று அவர் சொல்லியிருந்தார்.

அதிதியின் கொள்கைகள் எப்படியிருந்தாலும், அதிதி அதிதிதானே?

வெகு நேரமாகியும் சங்கர் வரவில்லை.

ஒருவேளை கூச்சத்தினால் கோவிலில் இருக்கிறாரோ என்று போஜனத்தையும், கையில் விளக்கையும் எடுத்துக் கொண்டு கோவிலுக்குச் சென்றார்.

அவர் அங்கு இல்லை.

கோவில் மடைப்பள்ளியில் போஜனத்தை வைத்து விட்டு மேற்குப் புறம் வாய்க்கால் பக்கமாகத் தேடிச் சென்றார்.

அங்கு சங்கர் மயங்கிக் கிடப்பதைக் கண்டதும் பதை பதைத்து, பக்கத்திலிருக்கும் வாய்க்காலில் ஓடி ஜலம் எடுத்து வந்து தெளித்து மூர்ச்சை தெளிவித்தார்.

திரு. சங்கரின் நிலைமை தெய்வ நிந்தனையின் கூலி என்று அவர் எண்ணக்கூட அவருக்கு நினைவில்லை.

அவரை மெதுவாகக் கோவிலுக்குள் அழைத்துச் சென்று போஜனத்தைக் கொடுத்து உண்ணச் சொன்னார்.

திரு. சங்கருக்கு, இதில் ஆச்சரியப்படக்கூட நேரமில்லை.

அவ்வளவு தலைவலி.

உணவருந்தியதும் படுத்துக் கொண்டார். துணைக்கு சாஸ்திரிகளும் படுத்துக் கொண்டார்.

அன்று இருவருக்கும் தூக்கம் வரவில்லை. ஒருவருக்கு வலி. இன்னொருவருக்குக் குழப்பம்.

நடு நிசி!

சாஸ்திரிகள் எழுந்து மூல ஸ்தானத்தின் பக்கம் சென்று தமது உள்ளத்தின் கவலைகளை எல்லாம் சொல்லியழுதார். நம்பிக்கை உடைந்து போயிற்று, எதை நம்புவது என்று சந்தேகம் வந்து விட்டது.

"இதுவரை நடந்து வந்தது உண்மையா? அவர் சொல்லுவது உண்மையா? பேசாது இருக்கிறாயே நீயும்! உண்மைதானா?"

இந்தப் பரிதாபகரமான குரல், வலியில் தூங்காதிருக்கும் திரு. சங்கருக்குக் கேட்டது. குரலில் என்ன பரிதாபம்! என்ன சோகம்! என்ன நம்பிக்கை!

சங்கருக்குத் துக்கம் நெஞ்சை யடைத்தது. ஆனால் அந்தக் குரல் வலியைப் போக்கும் சஞ்சீவியாக இருந்தது.

"ஏ தெய்வமே! நீயும் உண்மைதானா?"

இதற்குப் பதில் போல, வான் வெளியிலே நாலுமேகங்கள் ஒன்றாகக் கூடி கர்ஜித்துச் சிரித்தன.

(1934)

★

# நிரும்பலை

விடிந்து வெகு நேரமாகி விட்டது.

அந்த அறையில் மட்டும் சூரியனது திருஷ்டி செல்லவில்லை.

எதிரிலிருந்த மங்கிப் புகையடைந்த மண்ணெண்ணெய் விளக்கருகில், ஓர் மாணவன் கையிலிருந்த புத்தகத்தில் ஏகாக்கிர சிந்தையாக இருந்தான்.

அன்று இரவு அவனுக்குச் சிவராத்திரி. பரீட்சை நெருங்கினால் பின் மாணவர்களுக்குச் சிவராத்திரி ஏன் வராது?

வெளியே தடதடவென்று கதவைத் தட்டும் சப்தம் அவனது யோகத்தைக் கலைத்தது.

''மிஸ்டர் ராமசாமி! மிஸ்டர் ராமசாமி!'' என்று அவன் நண்பனின் குரல்.

கதவைத் திறக்கிறான்.

''என்னவே! நீரெல்லாம் இப்படி 'ஸ்டடி' செய்தால் பரீட்சை தாங்குமா? 'கிளாஸ்' தான்!'' என்று வந்தவன் சிரித்துக்கொண்டே உள்ளே வந்தான்.

''ஏது, ரொம்ப நேரமாகி விட்டது போலிருக்கே? நீர் உள்ளேயிரும்; நிமிஷத்தில் ஜோலியை முடித்து விட்டு வந்து விடுகிறேன்; 'இண்டியன் ஹிஸ்டரி'யை முடித்து விடலாம். 'எ மினிட்','' என்று சொல்லிக் கொண்டே உள்ளே ஓடினான்,

"உம் படிப்புக்கு நான் எங்கே?" என்றார் வந்தவர்.

இருவரும் பி. ஏ. பரீட்சைக்குப் பணம் கட்டியிருக்கிறார்கள். உள்ளே தங்கியவர் பெயர் நடேசன். இல்லை மிஸ்டர் நடேசன்.

"என்னவே! அதுக்குள்ளையா! குளித்துச் சாப்பிட்டு விட்டீர்?"

"ஆமாம், ஆமாம்!" என்று ஈரம் சொட்டிக் கொண்டிருந்த தலையை துடைத்துக் கொண்டே வின்சென்ட் ஸ்மித் என்பார் எழுதிய இந்திய சரித்திரத்தை எடுத்துப் புரட்டினான்.

"அடிமை அரசர்களினால் உண்டான நன்மைகள்" என்ற பகுதியைத் திருப்பி வைத்துக்கொண்டு நாலாயிரப் பிரபந்தத்திற்காகத் தொன்று தொட்டு ஏற்பட்ட ராகத்தில் வாசிக்க ஆரம்பித்தான்.

மிஸ்டர் நடேசனும் தமது மூளைக்குப் பக்கபலமாக ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டு இருந்தவர், இரண்டு மூன்று நிமிஷம் கழித்து, "இதெல்லாம் 'எக்ஸாமினேஷனு'க்கு வராது வே; வந்தாலும் ஜமாய்த்து விடலாம். நம்ப புரொபெஸர் கொடுத்த நோட்ஸை எடுத்து நல்ல 'டாப்பிக்கலா' இரண்டு 'சப்ஜெக்ட்ஸ்' வாசியும்!" என்றார்.

இருவரும் ஐந்து நிமிஷமாகத் தேடினார்கள். அட்டைகள் இரண்டும் அந்தர்த்யானமாகி, பக்கங்கள் ஒன்றோடொன்று ஒத்துழையாமை செய்து கொண்டிருந்த ஒரு காகிதக் குப்பையை எடுத்தார்கள். அதை நோட்டுப் புஸ்தகம் என்பது உயர்வு நவிற்சி. எழுத்துக்கள் பிரம்ம லிபி; ஆதியும் அந்தமும் இல்லாத சிவனார் போல் விளங்கியது.

இவ்வளவு அனந்த கல்யாண குணங்களும் நிறைந்த அந்த 'நோட்டுப் புஸ்தகத்தை'ப் பலவிதமாகப் புரட்டி, ஒரு மாதிரித் திருப்தி யடைந்தவன்போல், 'பர்மிய யுத்தங்களின் சுருக்கம்' என்ற பகுதியைப் படிக்க ஆரம்பித்தான்.

"என்ன மிஸ்டர் இதைப் படிக்கிறீர்? போன ஸெப்டம்பருக்கு கேட்டாச்சே. மேலும், இந்த 'லெவன்த் அவரில் தரோ ஸ்டடி' முடியுமா? 'வார்ஸ்' வந்த காரணங்களைப் படியும். 'ஈவண்ட்ஸ்' விட்டு விடும். 'எப்பெக்ட்ஸ்' படியும். 'பிரிப்பேர்' பண்ணவே தெரியலையே," என்று கடிந்து, சுருக்க வழி சொல்லித் தந்த மிஸ்டர் நடேசன் அதற்குள் அணைந்துபோன சிகரெட்டைப் பற்ற வைத்துக் கும்ப ரேசக பூர்வமாக பிரம்ம பத்திரத்தின் சூக்ஷ்ம சக்தியை வெகு சுவாரஸ்யமாக ஆகர்ஷித்துக் கொண்டு இருந்தான்.

பரீட்சை பாராயணம் நடந்தது.

"என்ன மிஸ்டர்! மணி 'ஒன்' ஆகி விட்டது போலிருக்கே! மத்தியானம் வந்து முடித்து விடுவோமே!" என்றார் மிஸ்டர் நடேசன்.

"சரி."

* * *

மத்தியானம்.

அகோரமான வெயில்.

"இந்த 'ஹாட்ஸன்'லே வந்தது ரொம்ப 'டயர்டா'க இருக்கு!" என்று சொல்லிக்கொண்டு உள்ளே நுழைந்த நடேசன், ஒரு பாயை விரித்துச் சாய்ந்தான்.

"எனக்கும் 'டயர்டா'த்தான் இருக்கிறது. ஆனால் முடியுமா? சாயங்காலத்திற்குள்ளாவது 'இன்டியன்

'ஹிஸ்டிரி'யை முடித்துக்கொண்டு 'பாலிட்டிக்ஸ்' ஆரம்பித்து விடலாம்!'' என்றார் மிஸ்டர் ராமசாமி.

''ஸ்! இந்த 'ஹெவிஸன்' லே 'சப்ஜெக்ட்'ஸா? ஏதாவது 'லைட்' டா 'நான் டீட்டெயி'லை எடுத்துப்படி.''

ஒரு மேல் நாட்டு நாவலாசிரியர் எழுதிய நாவல் ஒன்றை எடுத்து முதலிலிருந்து ஆரம்பித்தான்.

''என்ன மிஸ்டர் உமக்குச் சொன்னாலும் தெரிய வில்லையே. சட்டர்ஜி 'நோட்ஸ்' எடுத்துப் படியும். இதில் மூன்று 'டாபிக்ஸ்.' அதை அவன் நல்லா 'டீல்' பண்ணியிருக்கிறான்.''

படிக்க ஆரம்பித்தான். கொஞ்ச நேரத்திலே மிஸ்டர் நடேசன் பரீட்சையை மறந்தார். ராமசாமி கையிலிருந்த புஸ்தகத்தையே மறந்தார். இருவரும் சுவாரஸ்யமாகக் குறட்டை விட்டார்கள்.

''ஹால் டிக்கட்ஸ் வந்து விட்டதாம்!'' என்று இரைந்து கொண்டே உள்ளே வந்தார் ஒரு மாணவர்.

''என்ன தூக்கம்? 'ஹால் டிக்கட்ஸ்' வந்துவிட்டதாம் ஸார்,'' என்று மறுபடியும் சொல்லி எழுப்பினார் வந்தவர்.

''எப்போ? எப்போ?'' என்று எழுந்திருந்தார்கள் இருவரும்.

''மார்னிங்' தான் வந்ததாம்; போய் வாங்கிக்கொண்டு வந்துவிடுவோமே,'' என்றார் வந்தவர்.

''புறப்படுவோம். எ மினிட்...'' என்று சொல்லிக் கொண்டு இருவரும் மேல் சட்டையைப் போட்டுக் கொண்டார்கள்.

''என்ன மிஸ்டர் சண்முகம்? 'சப்ஜெக்ட்ஸ்' எல்லாம் முடிச்சாச்சா?'' என்று கேட்டான் ராமசாமி.

"என்ன பிரதர், 'சப்ஜெக்ட்ஸ்' எல்லாம் அப்படியே இருக்கு; இங்கிலீஷைத் தொடவே இல்லை. நீங்கள் எதுவரைக்கும் முடித்திருக்கிறீர்கள்?'' என்றார் சண்முகம்.

"என்ன பிரதர், அன்னிக்கே நீங்க 'ஹிஸ்டரி'யை எல்லாம் முடித்தாய் விட்டது என்றீர்களே!'' என்று சிரித்தான் நடேசன்.

"ஒரு தடவை 'டச்' பண்ணா போதுமா? 'ஸ்டடி' பண்ண வேண்டாமா?'' என்றார் சண்முகம்.

"எங்களுக்கு ஒரு தடவை 'ரிவைஸ்' பண்ணவே 'டயம்' இல்லையே. பிரதர்! கொஞ்சம் ஒங்க 'எக்கனாமிக்ஸ்' நோட்ஸைக் கொடுங்கள், 'மார்னிங் தந்து விடுகிறேன்,'' என்றான் ராமசாமி.

"இல்லை 'பிரதர்'; அதைத்தான் இப்போ நான் 'ஸ்டடி' பண்றேன். நாளைக்குக் கொண்டு வாரேனே!''

"ஏன் பிரதர், நீங்களும் நம்ப ரூமிற்கு வந்தால், ராத்திரியிலேயே எல்லோரும் 'ஸ்டடி' செய்து விடலாமே, எப்படி?'' என்றான் நடேசன்.

"சரி.''

"இப்படி ஹோட்டலுக்குப் போவோம். 'டய'மாகி விட்டது!'' என்றான் ராமசாமி.

மூவரும் கலாசாலையை நெருங்கினார்கள். அப்பொழுதுதான் கலாசாலை ரைட்டர் தனது அறையைச் சாத்திப் பூட்ட எத்தனித்தார்.

"பிரதர், கொஞ்சம் தயவு செய்யணும்!'' என்று சண்முகம் ஓடிப்போய்க் கையைப் பிடித்தார்.

"ஏன் சார், 'ஆபீஸ் அவர்'ஸில் வரக்கூடாது? எனக்குக் கொஞ்சம் 'பிஸினெஸ்' இருக்கிறது, சார்" என்று பிரமாதப்படுத்திக் கொண்டார் ரைட்டர் அனந்த ராம அய்யர்.

சண்முகத்தின் கையிலிருந்து ஏதோ ஒரு சிறிய விஷயம், ரைட்டர் பையில் 'கிளிங்' என்ற சப்தத்துடன் விழுந்தது. வேதாரண்யத்திலே கதவைத் திறக்கச் செய்யும்படி பாடினார்களாமே, அந்தப் பாட்டைவிடப் பன்மடங்கு சக்தி வாய்ந்தது! உடனே ரைட்டர் முகம் மலர்ந்து உபசரிக்க வேண்டுமென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

மூவரும் தங்கள் ஹால் டிக்கட்டுகளை வாங்கிக் கொண்டு வந்தனர்.

எதிரே இவர்களுடைய சரித்திர ஆசிரியர் வந்தார். இவர் மூளையில் இல்லாதது சரித்திரம் சம்பந்தப்பட்ட மட்டில் பரீட்சைக்கு அவசியமில்லாதது என்று சொல்லி விடலாம். அக்ஷரம் பிசகாமல் அவர் படித்த புத்தகங்களின் கதம்பமாக இருக்கும் அவர் பிரசங்கங்கள். சரித்திரங்களை யூனிவர்சிட்டிக் கேள்விகளின் விடைகளாக மாற்றிக் கற்றுக் கொடுப்பதில் நிபுணர்; பரீட்சையில் மாணவர்கள் தோற்காதபடி பார்த்துக் கொள்வதிலும் நிபுணர்.

இவர்களைக் கண்டதும், "என்னடே! 'ஸப்ஜெக்ட்ஸ்' எல்லாம் ஆகிவிட்டதா? 'இண்டியன் ஹிஸ்டரி' முடித்து விட்டீர்களா?" என்று கேட்டார்.

"ஆம் சார்," என்றான் நடேசன்.

"இந்த மார்ச்சில், 'டல்ஹௌஸி'யில் ஒரு கேள்வி வருமப்பா. படித்தாகி விட்டதா?" என்றார்.

"பாலிஸி ஆப் லாப்ஸ்'தான் சார் அதில் முக்கியம்!" என்றான் நடேசன்.

"அதைச் சொல்லு பார்ப்போம்," என்றார் புரொபெஸர்.

நடேசன் தனது சொந்த இங்கிலீஷில் சொல்லிக் கொண்டு வந்தான்.

புரொபெஸர் இடைமறித்து, "இப்படி எழுதினால் உனக்குச் சுன்னம்தான். நீ என் 'நோட்ஸை'ப் படித்தையா?" என்று கேட்டுவிட்டு, "ராமசாமி, நீ சொல்லு பார்ப்போம்," என்றார்.

ராமசாமி பிளேட் வைத்தான். இடையில் ஒரு வார்த்தை திக்கிற்று; புரொபெஸர் அதைத் தொடர்ந்தே பாராயணம் பண்ணி முடித்தார். "கேர்புல்'லாகப் படியுங்கள். இன்னும் ஒரு வாரந்தான் இருக்கிறது." என்று புரொபெஸர் விடை பெற்றுக் கொண்டார்.

"ராமசாமிக்குக் 'கிளாஸ்'தான்!" என்று சிரித்தான் நடேசன்.

"இதைத் தவிர தெரியாதே. நீயாவது சொந்தமா எதும் அடிச்சு விடுவாய்!" என்றான் ராமசாமி.

"மிஸ்டர், ஓங்க நம்மர் என்ன?" என்றான் நடேசன்.

"உம்முடையதைச் சொல்லுமேன்," என்றார் சண்முகம்.

"நமக்கு கோளாத்தான்!" என்றான் நடேசன்.

"அதென்ன ஜோஸியம்?" என்றான் ராமசாமி.

"நம்பரில் உள்ள எண்களைக் கூட்டினால் ஒற்றை நம்பராக, 1, 3, 5, உள்ளதாக வந்தால் பாஸ். இல்லாவிட்டால் தோளா!"

"என்னுடையது 8700!" என்றான் ராமசாமி.

"கொளுத்திவிட்டீர். 'கிளாஸ்' தான். அப்பவே சொன்னேனே!" என்றான் நடேசன்.

"என் நம்பர் 7743," என்றார் சண்முகம்.

"உமக்குப் பாஸ்தான். சந்தேகமா?"

"மிஸ்டர் நடேசன், உம்ம நெம்பர் என்ன?"

"அப்பவே சொன்னேனே கோளா என்று."

"சொல்லுமையா. எங்கே இங்கு கொடும்," என்று ஹால் டிக்கட்டைப் பிடுங்கிப் பார்த்தார்கள்.

நடேசன் நம்பர் 7744.

மூவரும் ஹோட்டலுக்குள் சென்றார்கள்.

## 2

ஒரு வாரம் கழித்து.

பரீட்சை தினம். பட்டம் பெறுவதற்கோ, அல்லது திரும்பப் பணங்கட்டி அதிர்ஷ்ட தேவதையை வரிக்க முயலுவதற்கோ ஏற்பட்ட திருநாள். கிண்டிக்கும் சர்வ கலாசாலைக்கும் ஒரே விதமான நியாயம், ஒரே விதமான போட்டி. ஜயிக்கும் வரை, அல்லது பணம் இருக்குவரை, வரையாது கொடுக்கும் வள்ளல்களாக இருக்க வேண்டும். அதுவும் தினம் சராசரி வருமானம், 0-1-3 வாக இருக்கும் இந்தியப் பெற்றோரின் குழந்தைகள்.

நடேசன் கோஷ்டியார் வாசித்து வந்த கலாசாலையில் காலை எட்டு மணியிலிருந்தே ஆர்ப்பாட்டம். உண்மையில்

கலாசாலை மைதானத்திலும் வராந்தாவிலுமே இந்த அமளி, இரைச்சல்.

உள்ளே பரீட்சைப் புலியைப் பத்து மணிக்கு மாணவர்களுக்காகத்தான் திறந்து விடுவதற்காகவோ என்று எண்ணும்படி, கதவுகள் சிக்கென்று அடைக்கப் பட்டிருந்தன. கலாசாலை வேலைக்காரன் பொன்னுசாமி, —வேலைக்காரன் என்றால் பொன்னுசாமிக்குக் கோபம் வந்துவிடும்! 'பியூன்' என்று சொல்லவேண்டும்—ரைட்டர் அய்யரைப் பின்பற்றி ஒரு பெரிய காகித மூட்டையை எடுத்துச் செல்கிறான். உள்ளே எட்டிப் பார்க்க ஆசைப் பட்டு இரண்டு மூன்று மாணவர்கள் தொடருகிறார்கள். அந்தச் சிதம்பர ரகஸியம் லேசாகக் கிடைத்துவிடுமா? மூக்குத்தான் தட்டையாகிறது.

* * *

இன்றுதான் மாணவர்கள் வெகு கோலாஹலமாக உடுத்தியிருக்கிறார்கள். அதில் இரண்டு மூன்று முழுத் துரைகளையும் (உடுப்புவரைதான்) காணலாம். ஒவ் வொருவர் கையிலும் கத்தைப் புஸ்தகங்கள். இதில் சிலர், "எப்பொழுதும்போல் இருப்பேன் இன்னும் பராபரமே!" என்பவர் போல் கவலையற்ற உடையுடன் வந்திருக்கி றார்கள். இந்த ரகம் மாணவர்கள்தான் அதிகப் படிப்பு. சிலர் 'என்ன வரும்' என்ற தர்க்கம்; 'வந்தால் என்ன எழுதுவது' என்ற பிரசங்கம். சிலர் புரொபெஸர்களை வளைத்துக்கொண்டு சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்டு இருக்கிறார்கள்.

ஒவ்வொருவர் கையிலும் ஒரு கைக்கெடியாரம். ஒரு மாணவன் பிக்-பென் (Big Ben) னையே தூக்கிக் கொண்டு வந்து விட்டான். ஒவ்வொருவர் வசத்திலும் குறைந்தது இரண்டு பௌண்டன் பேனாக்கள்; சிலரிடம் ஒரு பெரிய

ஸ்வான் இங்க் புட்டி. மாணவர்களிலும் சில அபூர்வ பிரகிருதிகள் உண்டு. அவை, டார்வின் கூற்றுக்கு உதாரண மாக, மோட்டுக் கிளைகளில் உட்கார்ந்து புஸ்தகத்தை ஆழ மதியுடனே படிப்பதைக் காணலாம்.

நடேசன் கோஷ்டியும் அதோ வருகிறார்கள்.

* * *

கலாசாலை மணி.

பரீட்சை யாரம்பமாகி விட்டது!

சாயங்காலம் மணி ஐந்து; கலாசாலை மணியும் "போ முடிந்தது. இன்று போய் நாளை வா!" என்பது போல் தொனித்தது. ஒவ்வொரு ஹாலிலும், "ஸ்டாப் பிளீஸ்" என்று காவலிருந்த புரொபெஸர்கள் கூவினார் கள். அதையும் கவனிக்காமல் மாணவர்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். நான்கு வார்த்தை அதிகமாக எழுதி விட்டால் பாஸாகி விடும் என்ற நம்பிக்கை, ஒரு பையனைப் பண்டிதர் இழுப்பிற்கும் விடாமல் எழுதச் செய்கிறது.

சிலர் தங்கள் நம்பர்களைப் போட மறந்து விட்டு வெளியேறி விடுவார்கள். ரைட்டர் அய்யர், பொன்னுசாமி முதலியோர் அவனைக் கண்டு பிடித்து நம்பரைப் போடச் செய்யுமுன் மூளை கலங்கிவிடும். இப்படி வெளியேறியவர் ஒருவர் இருவர் தாங்களே வந்து போட்டுவிட்டு, கலாசாலைத் தொழிலாளிகளின் வசை மொழி பெற்றுத் திரும்புவார்கள்.

நடேசன் கோஷ்டியும் வெளியே வந்தார்கள். ஆனால் உற்சாகமில்லை. ஒரு வேளை களைப்பாகவும் இருக்கலாம். "எல்லாம் 'டவுட்புல்'லாக இருக்கிறது!" என்று பேசிக்

கொண்டார்கள். அவர்களுக்குள் ஒரு கேள்விக்கு எப்படி விடை எழுதுவது என்ற தர்க்கம்.

இப்படித்தான் மற்ற நாட்களும்,

பரீட்சை ரிஸல்ட் வந்து விட்டது. மூவரும் தேறி விட்டார்கள்.

இப்பொழுது செர்விஸ் கமிஷன் பரிட்சை எழுது வதாகத் தீர்மானம். அதிலும் தேறி விடுவார்கள்.

(1934)

★

# ஒப்பந்தம்

பார்வதிநாதனுக்கு பி. ஏ. பாசாகி விட்டது. அது மட்டுமல்ல, ஸர்வீஸ் கமிஷன் பரீட்சையிலும் முதல் தொகுதியில் வந்து விட்டான். சீக்கிரத்தில் வேலையாகி விடும். கலியாணம் ஒன்றுதான் பாக்கி. அதையும் செய்து முடித்து விட்டால் பையனைப் பற்றிய கவலை ஓய்ந்து விட்டது என்று நினைத்தார், சங்கரலிங்கம் பிள்ளை.

ஒருநாள் காலை. பிள்ளையவர்கள், தாம்பிர வர்ணியின் ஸ்நான இன்பம், நீண்ட பூஜை முதலிய வற்றுக்கு முற்றுப் புள்ளியான காலை போஜனத்தை முடித்துக் கொண்டதும், சுக ஜீவனத்தின் குதூகலத்தை அனுபவித்தவராய், "ஏளா, அங்கே என்ன செய்யுதே?' என்று தமது பத்தினியைக் கூப்பிட்டார்.

"என்ன, நீங்களா கூப்பிட்டிய; இன்னா வாரேன்."

"நம்ம குட்டிக்கு"—பார்வதிநாதனின் செல்லப்பெயர் —"பொண்ணு பார்க்க வேண்டாமா?"

"எனக்கென்னா தெரியும்? நீங்க சொல்றது சதி; நம்ப சிங்கி குளத்துப் பொண்ணைப் பாத்தா என்ன? பொண்ணு நல்ல செவத்த பொண்ணு; கண்ணும் முளியும் அப்படியே பாத்துக்கிட்டே இருக்கலாம். ஆனா, புள்ளையவர்களுக்குப் பிடிக்குமோ என்னமோ? இந்தக் காலத்துப் புள்ளையளை என்ன சொல்ல?"

"அதாரு, சிங்கி குளத்திலே?"

"என்ன உங்களுக்கு தெரியாதாக்கும்? பேட்டையக்கா இருக்காஹள்ள, பார்வதியக்கா. அவளுக்கு ஒண்ணு விட்ட தம்பி மக."

"சரி! சரி! நம்ம சுப்பராயப் பிள்ளை மகளா? என்ன நகை போடுவா?"

"அது எனக்கென்ன தெரியும்? கோமதியக்காகிட்ட விசாரிச்சா தெரியும். நா அவளைக் கூப்பிடுதேன்," என்று வெளியே சென்று ஒரு விதவையைக் கூப்பிட்டுவந்தாள்.

"அம்மா, வா. இரி. நம்ம குட்டிக்கு இவ என்னமோ சிங்கி கொளத்துப் பொண்ணு ஒண்ணு இருக்காமே, அதைப் பார்க்கலாமென்னு சொல்லுதா. நீ என்னமோ, பாத்திருக்கியாமே. அதெப்படி, நகை என்னம்மா போடுவா?" என்று கேட்டார் சங்கரலிங்கம் பிள்ளை.

"அதா, நல்ல எடமாச்சே. பொண்ணு தங்கமான கொணம். அவுஹளும் அப்படித்தான். என்னமோ ரெண்டு ஆயிரத்துக்கு செய்வாஹ இன்னு சொல்லி இருந்தாஹ."

"இம்புட்டுத்தானே! சதி, சதி. பேச்செ விட்டுத் தள்ளு. நம்ம பேட்டைப்பிள்ளை ஐயாயிரம் நகை போக, கலியாணச் செலவு ஒரு ரெண்டாயிரம் இன்னு சொன்னாரே!"

"ஆமா, பொண்ணு கறுப்பில்லியா? எதுக்கும் கேட்டுப் பாருங்களேன்."

"சதி, நீ என்ன சொல்லுதே?"

"பாத்தா என்ன? நாலும் அக்காளும் போயிட்டுத்தான் வாரமே!" என்றாள்.

''சதி, நாளைக்கு மேக்கெ சூலம். நாளைக் கழிச்சி உதயத்திலெ வண்டியப் போட்டுகிட்டுப் போய் பாத்துட்டு வாருங்க. பொறவு நாவன்னாவை விட்டு நான் விசாரிக்கேன்.''

''அய்யா, தபால்!'' என்று தபால்காரன் உள்ளே நுழைந்து கவர்மென்டு முத்திரையிட்ட நீண்ட 'லகோடா'வைக் கொடுத்தான்.

''நம்ம குட்டிக்குப் போல இருக்கு. ஏலே அய்யா!'' என்று கூப்பிட்டார்.

''என்னப்பா?'' என்று கீழே வந்தான் பார்வதிநாதன்.

கடிதத்தைப் பிரித்துப்பார்க்க சென்னையில் குமாஸ்தா வேலையாகி யிருப்பதாகவும், 26-ந் தேதி வந்து வேலை ஒப்புக்கொள்ளும்படியும் எழுதியிருந்தது.

வீட்டில் ஒரே குதூஹலம். தபால்காரன் 'பக்ஷிஸ்' தட்டாமல் போகவில்லை.

''ஏலே அய்யா! உனக்கு ஓங்கம்மை சிங்கிகொளத்துப் பொண்ணைப் பாத்திருக்கிறா, அப்பாட, ஓனக்குப் புடிக்குமா?'' என்று கேட்டார்.

பார்வதிநாதனுக்கு இந்த விஷயம் திடுக்கிடச் செய்தது. இந்த மாதிரி தகப்பனார் பேசியது இதுதான் முதல் தரம். முகம் வெட்கத்தால் சிவந்தது. ஒன்றும் பேசாமல் மெத்தைக்கு ஏறினவன், ''நாளைக்குப் புறப்பட வேண்டும்,'' என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டான்.

## 2

பெண்ணை எல்லாம் போய்ப் பார்த்துவிட்டு வந்தாகி விட்டது. சங்கரலிங்கம் பிள்ளையின் மனைவிக்கு சிங்கி குளத்துப் பெண் பேரில் நோக்கம்.

சங்கரலிங்கம் பிள்ளைக்கு இப்பொழுது மகனுக்கு வேலையாகி விட்டதால், ரேட்டை உயர்த்த வேண்டும் என்ற நோக்கம். நகை வழியாகக் குறைந்தது மூவாயிர மாவது கறந்துவிட வேண்டும் என்ற தீர்மானம்.

நாவன்னா—நாராயண பிள்ளை அவர் பெயர்—அவரை விட்டுப் பெண் வீட்டுக்காரரைத் தூண்டிவிடும்படி ஏற்பாடு செய்தார்.

நாராயண பிள்ளை ஒரு தடவை சிங்கி குளத்துப் பக்கம் சென்றார், "நம்ம பையன் ஒருவன் இருக்கிறான். கொடுக்கலாம் நல்ல இடம்!" என்றார். விஸ்தரிப்பானேன்? பெண்ணின் தகப்பனார் மாப்பிள்ளை வீட்டாரைக் கண்டு பேசப் புறப்பட்டார். நண்பர் நாவன்னா வீட்டில் ஜாகை.

மறுநாள்.

இருவரும் சங்கரலிங்கம் பிள்ளை வீட்டிற்கு வருகிறார்கள்.

"அண்ணாச்சி, இவுஹதான் நம்ம சிங்கி குளத்துப் பிள்ளையவாள். இந்தப் பக்கத்திலே வந்திருந்தாஹ. பாத்துக்கிட்டுப் போகட்டுமே என்று கூட்டி வந்தேன்," என்றார் நாவன்னா.

"அப்பிடியா! வாருங்க! வாருங்க! ஏளா! வெத்திலை செல்லத்தை எடு. அங்கே தூத்துட்டு சமுக்காளத்தை விரி! காப்பி சாப்பிடுங்களேன். அம்மாளு, ரெண்டு எலையைப் போடு!" என்று துரிதப்படுத்தினார்.

அவருடைய தர்மபத்தினியும், "வாருங்க! சேவிக்கேன்!" என்று வரவேற்றுவிட்டு, அவசர அவசரமாகப் பெருக்கிவிட்டு, ஜமுக்காளத்தை எடுத்து விரித்து, வெற்றிலைச் செல்லத்தை எடுத்து வைத்துவிட்டு உள்ளே சென்றாள்.

"நாங்கள் எல்லாம் காப்பி ஆச்சு. நீங்கள் ஆச்சா? இல்லாவிட்டா முடிச்சுக்கொண்டு வந்து விடுங்கள்." என்றார் நாராயணப் பிள்ளை.

"நான் எல்லாம் ஆச்சு! வெத்திலை போடுங்க," என்றார் சங்கரலிங்கம் பிள்ளை.

பேச்சு மெதுவாகப் பெண் விஷயத்தில் வந்து விழுந்தது.

"ஆமாம்! பையனுக்கு வேலையும் ஆச்சே, முடிச்சுடலாம் என்று எண்ணுகிறேன்," என்றார்.

"ஆமாம். அது செய்ய வேண்டியதுதான்," என்றார் சிங்கிகுளத்துப் பிள்ளை.

"உங்களுக்கு என்ன உத்தேசம்?" என்று அவரைக் கேட்டார் நாராயணப் பிள்ளை.

"உங்களுக்குத் தெரியாதா? நகை ஒரு ரெண்டாயிரம், மத்தச் செலவு ஒரு ஆயிரம்!" என்றார்.

"என்ன, நம்ப பேட்டையப் பிள்ளை சொன்னதைக் கேட்டியளா?" என்றார் சங்கரலிங்கம் பிள்ளை.

"ஆமா, ஆமா. அதிருக்கட்டும். இந்தக் காலத்திலே ஆயிரத்தைச் சொன்னாப்போதுமா? சொன்னதைச் சொன்னபடி செய்யணும். அது நம்ம பிள்ளையவாள்தான். நான் ஒன்று பொதுவாகச் சொல்லுகிறேன். நகை மூவாயிரம்!" என்றார்.

எல்லாரும் சற்று மௌனம்.

"அண்ணாச்சி! நீங்க ஒரேயடியா மொதொண்டாதிக. பிள்ளைவாள்! நீங்க காலைத் தேச்சா பிரயோசனமில்லை,

நல்ல இடம். பையனுக்கு நல்ல அதிர்ஷ்டம். கவர்மெண்ட் வேலை. இனிசூபெக்டரு. தாசில்தாரா வரலாம். உங்க பெண்ணுக்கு ராஜயோகம்!'' என்று மத்தியஸ்தம் பேசினார் நாவன்னா.

''சரி! பொறவு நீங்க சொல்லுறப்போ என்னா?'' என்றார் சிங்கி குளத்துப் பிள்ளை.

''வேறே என்ன அய்யா? இப்பவே வெத்திலை பாக்கு கை மாறிடுத்து. வர வியாழக்கிழமை நல்ல தினம். அன்னைக்கி திருமங்கிலியத்திற்குப் பொன்னுருக்கி விடுகிறது. சரிதானே பிள்ளையவாள்?'' என்று ஒரு வெள்ளித் தாம்பாளத்தைச் சங்கரலிங்கம் பிள்ளையின் தர்மபத்தினியிடம் வாங்கி அந்தச் சிறு சடங்கை முடித்தார்கள்.

சென்னையில் அன்று சாயங்காலம்.

பார்வதி நாதன் வேலை ஒப்புக்கொண்டாய் விட்டது. தகப்பனார் கொடுத்த பணம் கொஞ்சம் கையில் ஓட்டம். சினிமாவிற்குச் சென்றான்.

இவனுக்குப் பக்கத்தில் ஒரு ஆங்கிலோ இந்திய மாது—இளமங்கை—உட்கார்ந்திருந்தாள்.

தகப்பனார் அன்று பெண் விஷயத்தைக் கேட்டதிலிருந்து அவனுக்கு ஒரு புதிய உணர்ச்சி, இயற்கையின் தேவை, அடிக்கடி மனத்தில் சுற்றிக்கொண்டே இருந்தது. பார்வதிநாதன் நல்ல பையன்தான். இதுவரை அந்த நினைப்பிற்கு அவகாசமில்லை.

ஆனால் அந்தத் தினத்திலிருந்து அவனது உடல் கட்டுக்கடங்கவில்லை.

அன்று இருவர் சினிமாப் பார்க்கவில்லை.

அந்த நங்கை ஐந்து ரூபாய்க்கு இரண்டு மணி நேரம் அவன் மனைவியாக இருக்கச் சம்மதித்தாள்.

இருவரும் கடற்கரைக்குச் செல்லுகிறார்கள்.

அந்தச் சிங்கி குளத்துப் பெண் மூவாயிரம் ரூபாயைப் பணயமாக வைத்து, அவனுடன் வாழ்க்கையைப் பிணைத்துக் கொள்ளச் சம்மதிக்கும் பொழுது, ஐந்து ரூபாய்க்கு இரண்டு மணிநேரம், சரிதானே?

(1934)

★

# காளி கோவில்

இருள்.

நட்சத்திரங்களும் அற்ற மேக இருள்.

வானத்திருளை வெட்டி மடிக்கும் மின்னல்கள்.

இருளுடன் இருளாக நகரும் நதி—படிகளில் மோதி எழுப்பும் அலைகளினால் அன்றித் தெரியாது.

கரைக்கு வடக்கே ஒரு கோவில், இருள் திரண்டு எழுந்து நின்ற மாதிரி.

அதனுள் தீப ஒளி தழுவி விளையாடும் காளி விக்கிரகம். கறுத்த பளிங்கினால் ஆக்கியது. அந்தச் சிற்பியின் கைவண்ணந்தான் என்ன! கோரத்திலே ஒரு அழகு, ஒரு பெண்மை. இறுகிய கல்தான்; அதில் என்ன எழில்!

தீபத்தின் மீது கவிந்து அமுக்குவது போல், இருள் பம்மும் பிராகாரம்.

திடீரென்று எங்கும் அந்தகாரம்!

நடுநிசி!

விக்கிரகத்திலிருந்து மெல்ல நிலவும் ஒளி.

தேவியின் கண்களில் ஒரு பிரகாசம். உதடுகளில் உயிர்க் குறியின் புன்சிரிப்பு. மார்பு மேலோங்கி இறங்குகிறது. தேவி எழுகிறாள்!

ஜோதியின் நிலவு தரையைத் தடவ, அந்தக் கறுத்த அழகு மெதுவாகச் சென்று நதியில் முழுகுகிறது.

கோவிலில் தீபத்தை அமுக்க முயன்ற அந்தகாரத்தின் வெற்றி.

தீபக்கால் திரண்டு வளருகிறது. இருளுக்குள் மைக் கொழுந்தாய் வளரும் ஒரு மனித உருவம். ஒரு சமயம் விம்மி உயர்ந்த விஸ்வரூபம். பனை மரக் கை கால்கள் உயரத்திலே வெள்ளைப் பற்களும், அதற்கு மேல் இரண்டு நட்சத்திர ஒளிகளும் தலை இருக்குமிடத்தைக் குறித்தன. இவ்வளவு சிறிய கோவிலில், முகட்டை மீறும் உருவ ஆகிருதி. அடுத்த நிமிஷம் ஒன்றரையடி உயரமுள்ள கனிந்த இருள் கொழுந்து. அடுத்த கணம் ஐந்து அடி உயரம். சிகை முழங்கால் வரை விழுந்து ஆடையாக உடலை மறைக்கிறது.

பேய்! தேவியின் அடிமை.

அது பிராகாரத்தில் ஒரு மூலையில் மறைகிறது.

அங்கே அந்த மூலையில் அந்தப் பேய் ஏன் இப்படிக் குனிந்து குனிந்து அசைகிறது?

பிராகாரம் முழுவதும் அந்தகாரத்துடன் கலக்கும் ஓர் அற்புதமான பரிமள கந்தம். தேவியின் வாசனைச் சாந்து.

அரைகல்லின் பின்புறத்திலிருந்து, எங்கிருந்தோ இறங்கியது மற்றொரு பேய்.

சற்று நேரம் வெகு உத்ஸாகம், சந்தனமரைப்பதைப் பார்ப்பதிலே. வெண்ணெய் போல் குழைந்த வாசனைச் சாந்தைத் தொட்டு முகர ஆசை.

தொட்டு விட்டது!

அரைத்த பேயின் முகத்தில் பயங்கரம், கோபம் பரிதாபம் கலந்து விளங்கின.

ஆற்றங்கரையிலே தேவியின் முகத்தில் சடக்கென்று கோப ஒளி அலை போல் எழுந்து மறைந்தது. உதட்டில் ஒரு துடிதுடிப்பு!

தேவியின் சாந்து! என்ன அபசாரம்!

சுவரில் தேய்க்கிறது. கருங்கல் தரையில் தேய்க்கிறது. ஒவ்வொரு நிமிஷமும் வாசனை அதிகமாகிறதே. குற்றந்தான். மறைக்க வழியில்லையா? மருந்து அதற்கில்லையா?

அரைத்த பேய் சிரிக்கிறது!—ஒரு பயங்கரமான ஏளனச் சிரிப்பு.

திருட்டுப் பேய் விலவிலத்து அப்படியே இருந்துவிடுகிறது.

எப்படியிருந்தாலும் தோழனல்லவா? உதவி செய்யாமலிருக்க முடியுமா?

குற்றம் புரிந்த பேயைப் படித்துறைக்கு அழைத்துச் செல்லுகிறது. போகும் வழியிலெல்லாம் சாந்தின் வாசனை, திருட்டுத்தனத்தைப் பட்டவர்த்தனமாகப் பரப்புகிறது.

கரையிலிருந்த மணலைப் போட்டுத் தேய்த்தாகி விட்டது. பாறையிலும் தேய்த்தாகி விட்டது. கைதான் தேய்கிறது. தேய்க்கத் தேய்க்க வாசனைதான் அதிகமாகிறது.

தேவி பின்புறத்தில் நிற்கிறாள். அதை அவை அறியவில்லை.

சாந்தரைத்த பேய்க்கு ஒரு யுக்தி தோன்றுகிறது! மடியிலிருந்து ஒரு வளைந்த கத்தியை எடுக்கிறது.

குற்றம் புரிந்த விரல்களை இழுத்துப் படிக்கல்லில் வைத்து......

பட்!......

விரல்களும் இரத்தமும் ஆற்றில் கலந்து மறைகின்றன.

என்ன குதூகலம்!

இரண்டும் அண்ணாந்து கொண்டு ஒரு எக்காளச் சிரிப்பு; தேவியின் புன்னகையுடன் கலக்கிறது.

"ஐயோ! தேவி!"

பாதத்தில் மண்ணோடு மண்ணாய் விழுகின்றன. தேவி தன் மலர்க் கைகளால் அருள் புரிகிறாள்.

மின் வெட்டுப்போல் தேவி கோவிலுள் மறைகிறாள். குனிந்து வணக்கமாகத் தொடருகின்ற இரண்டு குற்றவாளிகள்......

பழைய தீபவொளி; தழுவி முயங்கும் கற்சிலை.

பழைய கோவில்.

பழைய அந்தகாரம்.

(1934)

★

தமிழியல் ஆய்வு நூலகம்
UGC . DSA
சிறப்பு நிதியுதவி
நூல் 1499
துறை வரிசை எண் :
தெ.பொ.மீ. நூலக வரிசை எண் :
சிறப்பு நிதியுதவி வரிசை எண் : 1499
துறை வரிசை எண் :

# செல்வம்

அன்று ட்ராமில் வந்து கொண்டிருந்தேன். சென்ட்ரல்வரை தரையில் புரண்டு தொங்கும் புடலங்காய் தான்.

அப்பா! உட்கார்ந்தாகி விட்டது. மனிதனுக்கு உட்கார இடங்கொடுத்து விட்டால் கொஞ்சம் அப்படி இப்படி சுற்றிப் பார்க்க வேண்டும். அங்கே பேசுகிறவர்கள்—சென்னை அவசரத்தில் அந்த மாதிரிப் பிரகிருதிகள் மிகவும் சொற்பம்—யாராவது இருந்தால் கொஞ்சம் காது கொடுக்க வேண்டும்; கூடுமானால் பேச வேண்டும். பிறகு வெற்றிலை நீண்ட நட்பு. இறங்கும்வரை, எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாய்.

சென்ட்ரலில் ஒரு கூட்டம் வந்து ஏறியது. இடம் வசதி பார்த்தாகி விட்டது. வந்தவரில் ஒருவர், வைதிகச் சின்னங்கள்; மெலிந்த தேகம். சுகமாகக் காலை நீட்டிக் கொண்டு சொல்லுகிறார் :

''செல்வம் இருக்கிறதே, அது வெகு பொல்லாதது. இன்று ஒரு இடத்தில் இருக்கும், நாளை ஒரு இடத்தில் இருக்கும்; அதோ அந்த வண்டிச் சக்கரம்போல. அதைத் துறந்தால்தான் மோட்சம்...'' இப்படி அடுக்கிக்கொண்டே போகிறார்.

என் மனம் இருக்கிறதே, அது எப்பொழுதுமே இப்படித்தான். ஒன்றைக் கேட்டால் எதிர்த்தோ, பேசவோ செய்யாது. அப்படியே நீண்ட யோசனைகளை இரகஸிய மாக என்னிடம் வந்து கொட்டும்.

இந்தச் 'செல்வம்' என்ற சொல் 'செல்வோம் செல்வோம்' என்ற பொருள்பட நின்றதாம். அதிலே தமிழுக்கு வேறே பெருமை. அதன் மீது, செல்வத்தின் மீது ஒரு வெறுப்பு உணர்ச்சி—முக்கால்வாசிப் பெயரிடம், 'சீச்சீ, இந்தப் பழம் புளிக்கும்' என்ற தத்துவந்தான்.

செல்வம் சென்றுவிடுமாம்! அதனால் அதை வெறுக்க வேண்டுமாம். நீ வெறுக்கா விட்டாலும் தானே அது சென்றுவிடுமே! அது செல்லாவிட்டால், அந்தச் சகடக் கால் மாதிரி உருண்டு செல்லாவிட்டால், அதற்கும் இந்த மண்ணாங்கட்டிக்கும் என்ன வித்தியாசம்? ரூ. அ. பை. வைத்துக்கொண்டு என்ன செய்யமுடியும்? அது பண்டம் மாற்றுவதற்கு இடையிலே சங்கேதமாக வைத்துக் கொண்ட ஒரு பொருள். வெறும் பணத்தை உண்ண முடியுமா? உடுக்க முடியுமா? இது தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரு வஸ்து. அது சென்று கொண்டிருப்பதினாலே தான் அதற்கு மதிப்பு.

வெள்ளைக்காரன் செல்வத்தை வெல்த் (wealth) என்று சொல்லுகிறான். அது பூர்த்தியாகும் வஸ்து என்று அர்த்தப்படும்படியாக இருக்கிறது. ஜடத்தின் தேவையைப் பூர்த்தி செய்யத்தான் வேண்டும். அது முதல் படி, மற்ற எல்லா இலக்ஷியங்களுக்கும்.

நமக்குச் செல்வம் ஜகந்நாதத்தின் தேர்ச் சக்கரம் மாதிரி இருக்கிறது. அது நம்மை நசுக்குகிறது. அதன் உருளைகள் சரியானபடி சுற்றவில்லை. போகும் வழியும் கண்மூடித்தனமாக இருக்கிறது. அதை நீக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, செல்வமே வேண்டாம் என்று பேசுகிறவனைக் கண்டால், "உன் (அசட்டு) வேதாந்தத்தில் இடி விழ!" என்று சீறும்படியாகக் கோபம் வருகிறது.

வாஸுதேவ சாஸ்திரியை—அதுதான் ராஜமையர் எழுதிய இங்கிலீஷ் கதையில் வருகிறவர் முக்கால் வாசித் தமிழர்களுக்குப் பிடிக்கும். அவரை எல்லாரும் இலக்ஷிய மாக வைத்துக்கொள்ள ஆசைப்படுவார்கள். எனக்கு அந்த அசட்டு வேதாந்தியின் தர்மபத்தினிதான் நமக்குச் சரியான இலக்ஷியம் என்று சொல்லுகிறேன். சாக்கடையி லிருந்து நட்சத்திரங்களைப் பற்றிக் கனவு காண்பது வெகு கஷ்டமல்ல; அது நம்மவருக்கு ரொம்ப நாளையப் பழக்கம். பக்கத்திலிருக்கும் குறட்டில் ஏற முயல்வது, முதலாகச் செய்ய வேண்டியது. நம்மவருக்குச் செல்வத்தின் தீமையைப் பற்றிச் சொல்லுவது. நபும்ஸகனுக்கு பிரமச் சரியத்தின் உயர்வைப் பற்றி உபதேசிப்பது போல்தான்.

செல்வம் நிலையில்லாதது என்று கடிந்து கொள்ளு கிறீர்களே! எதுதான் உலகத்தில் நிலையாக இருக்கிறது? கடவுளைப் பற்றி வெகு லேசாக, எப்பொழுதும் இருக் கிறார் என்று கையடித்துக் கொடுப்பார்கள் நம்மவர்கள். கடவுளும் நம்மைப் போல், பிறந்து வளர்ந்து அழிகிறவர் தான்.

"அட போடா, நாஸ்திகா!" என்பீர்கள். இந்தக் காலத்துப் பிராமணன், வேத காலத்துப் பிராமணனைச் சந்தித்தால், 'அவன் பதிதன்' என்று முடிவு கட்டி விடுவான். அந்தக் காலத்தில் இருந்த கடவுள்கள் எல்லாம் எங்கே? அந்தக் காலத்துத் தமிழன், கொற்றவை என்ற தெய்வத்தைக் கும்பிட்டானாம். அது எங்கே? இந்த மாதிரி எத்தனையோ அடுக்கிக்கொண்டு போகலாம்.

இந்தச் செல்வமும் இப்படித்தான். பழைய காலத்து மனிதனுக்குக் கையிலிருந்த கல் ஈட்டிதான் செல்வம். வேத காலத்துப் பிராமணனுக்கு மாடும், குதிரையும்தான்

செல்வம். அவன் அதை நிரையாகப் பெருக்கினான். யாகம் செய்தான். ஏன், தெய்வமாகக் கொண்டான்? தேவையைப் பூர்த்தி செய்யும் இலக்ஷியந்தான் தெய்வம்; அது எந்தத் தேவையானால் என்ன?

அந்த ட்ராம் கார் நண்பர் மாதிரி நமக்கு அசட்டு வேதாந்தம் வேண்டாம். அஸ்திவாரக் கப்பிகளை நன்றாகக் கட்டிவிட்டுப் பிறகு மெத்தைக்கு என்ன வார்னிஷ் பூசலாம் என்று யோசிக்கலாம்.

(1934)

★

# சித்தம் போக்கு

அன்று ஆபீஸிலிருந்து வரும்பொழுது ரொம்பக் களைப்பு.

அச்சு யந்திரத்தின் கவந்த உபாசனைக்கு ஈடு கொடுத்து முடியவில்லை.

வெளியிலே வந்தேன்.

தெருவிலே கூட்டம்.

குப்பைத் தொட்டியில் ஓர் இறந்த குழந்தை.

எந்தத் தாயோ? அவள் யாராயிருந்தாலென்ன? சமூக ஒப்பந்தத்திற்குப் பயந்து செய்து விட்டாள் அதற்கென்ன? கூடியிருந்த பெண்கள், அந்தக் குற்றவாளியை—அவள் அப்படித்தான். சீர்திருத்தவாதிகள் என்ன கத்தினாலும் தானென்ன?—அடிவயிற்றிலிருந்துதான் திட்டினார்கள். அவர்கள் உணச்சியும் சரிதான். அவர்களுக்குத்தான் தெரியும்—அந்தச் சிருஷ்டியின் உத்ஸாகம், மேதை, துன்பத்தின் இன்பம்.

அவள் உணர்ச்சிகள்? அதற்கென்ன?

ஃ ஃ ஃ

அங்கிருந்து திரும்பினேன். ஒரு பால்காரன். ஒரு வீட்டின் முன்பு கறந்து கொண்டிருக்கிறான். அவன் வழி சுருக்கமானது; லேசானது.

அவனுக்கு அந்தப் பசுவின் கன்றைப் பற்றிக் கவலை யில்லை.

பசுவின் பாலைப் பெற்றுக் கொள்ளுவதற்கு, அந்தப் பசுவின் கன்று இறந்து போனாலென்ன? அதன் தோல் எங்கு ஓடிப்போய்விடுகிறது? அதைப் பசுவின் காலில்கட்டி வைத்து விட்டால் பசு சாந்தியடைந்து விடுகிறது. பசுவும் உள்ளன்புடன் பால் கொடுக்கிறது இதைவிட வேறு என்ன வேண்டும்?

செத்த குழந்தை; தோல் கன்றுக் குட்டி!

போதும்! போதும்!

நாம் கெட்டிக்காரர்கள்தாம்.

எனக்குக் கடற்கரைக்குப் போக வேண்டும்.

மனிதனின் வெற்றியைக் கவனித்தது போதாதா?

கடற்கரைக்குச் சென்றேன்.

லேசான தென்றல், டாக்கா மஸ்லினை உடுத்திய மாதிரி மேலே தவழ்ந்தது. நல்ல காலமாக ரேடியோ முடிந்து விட்டது.

கடற்கரையில் சற்று தூரத்தில் ஒரு பெண்ணின் கீதம். சங்கராபரணம்; இன்பந்தான். நின்று கேட்டால் குடி முழுகிப் போகுமாமே, ஹிந்து சமூகத்திற்கு.

எனக்குத் தகுந்தவள் அந்தக் கடல்தான்.

அவளைப் பார்த்தால் யாரும் ஒன்றும் சொல்ல மாட்டார்கள்—உற்றுப் பார்த்தாலும்.

வானத்திலே சந்திரன். அவனைப் பற்றி அக்கறை யில்லை. அன்று அவன் ஆதிக்கம் அதிகமில்லை. சுற்றி மேகப் படலம். மங்கிய ஒளி.

நீலக்கடல்; அதற்குப் பெயர் அன்றுதான் தெரிந்தது. நீலக்கடல்!

நீலமா? அதிலே உயிர் ததும்பிக் கொண்டல்லவா இருந்தது!

தூரத்திலே — அடி வானத்தில் அல்ல—அதுவும் கடலும் சந்திக்கும் இடத்தில் அவள் குறுநகை.

அலைகள் மேலெழுந்து வெள்ளை வழி காட்டி கண் சிமிட்டலுடன் விழுந்து மறைந்தன.

அதில் என்ன பொருள்? என் மனதில் ஒரு குதூஹலம்; காரணமில்லாத துக்கத்தினால். அதன் பொருள் என்ன?

என்னடீ! ஏன் அகண்ட சிருஷ்டியின் மர்மமாக மந்திரமாக—இருக்கிறாய்? உன்னுடைய குறுநகையின் மர்ம மென்ன?

நீ யார்?

ஏன் என் மனதில் இந்தத் துக்கம்? எனது துயரம்...?

கண் சிமிட்டி மறைகிறாயே, யாருக்கு? அதன் பொருள் என்ன?

வரவா? அடியே! உன் மனந்தான் என்ன?

பொருள் விளங்கவில்லையே! நீதான் இந்தக் கேலிக் கூத்திற்கெல்லாம் தலைவியா?

உன் சிரிப்பின் பொருள் அதுதானா?

பொருள் விளங்க வில்லையே! நீ யார்?

ஆம்; அறிந்து கொண்டேன்.

நீதான் என் அரசி!

என்......கா...த...லி! மனித ஹிருதயத்தின் துக்கத்திலே பிறக்கும் கவிதை என்னும் என் தேவி!

(1934)

★

# மாயவலை

என். பி. நாயகம் கலாசாலை மாணவன். கலாசாலை மாணவர்களுக்கு என்னென்ன தவறுகள், இலட்சியங்கள், உத்ஸாகங்கள் உண்டோ அவ்வளவும் அவனுக்கு இருந்தன. புதிய எண்ணங்களில் பிரேமை, புதிய அனுபவங்களில் ஆசை, தவறுகள் என்பவற்றைச் செய்வதில் ஒரு குதூஹலம், எல்லாம் இருந்தது; ஆனால் தைரியம் மட்டும் இல்லை.

அவன் ஒரு சந்தோஷப் பறவை. கவலை என்பது வகுப்பு எப்பொழுது முடியும் என்பதைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது. ஆனால் இவ்வளவிற்குக் கீழும், ஆழமாகப் பொற்சரடுபோல் அவன் உள்ளத்தில், மனித இலட்சியங்களின் ஆவேசம் ஓடிக் கொண்டிருந்தது.

அவன் கனவில் அறிவு வளர்ச்சி பெற்ற பெண்கள் தான் இலட்சிய வடிவெடுத்தனர். உடன் படிக்கும் பெண் மணிகளின் நாகரிகச் சின்னங்கள்தான் காதல் தெய்வத்தின் உப கருவிகள். மன்மத வேள் தன் பாணங்களைத் தொடுக்குமுன் நாகரிக நாரீமணியை வைத்துக்கொண்டு தான் தனது தொழிலை ஆரம்பிப்பான் என்பது நாயகத்தின் சித்தாந்தம்.

கனவுகளும், இலட்சியங்களும் முட்டாள்தனங்களும் கலாசாலைக் காம்பவுண்டிற்குள்தான் தழைத்து ஓங்கக் கூடியவை. வெளியிலே வந்ததும் உலகத்தின் அதிர்ச்சி அவற்றை நசித்து விடும். நாயகம் கலாசாலையை விட்டு வெளியேறும் பொழுது இலட்சியவாதியாகவே காலங்

கழிப்பது என்ற பிரதிக்ஞையுடன் வெளியேறினான். இதுவரை அவன் தோல்வி என்பது என்னவென்று அறிந்திராதவன்.

முதல் அதிர்ச்சி அவனுக்கு வேலை கிடையாதது. இரண்டாவது அதிர்ச்சி இத்தனை நாட்கள் கேட்டவுடன் பணம் அனுப்பிக் கொண்டிருந்த தந்தையே இவன் வேலை பார்க்க வேண்டும் என்று தூண்டுவது. தகப்பனார் தன்னை வீட்டில் வைத்திருக்கப் பிரியப்படவில்லை என்று எண்ணிக் கொண்டான். உலகம், தான் உயிர் வாழ்வதில் பிரியப்படவில்லை என்று தெரிந்து கொண்டான். இதற்கு மேலாகத் தகப்பனாரும் தாயாரும் இவனுக்குக் கலியாணம் செய்து வைக்க ஆத்திரப் படுவது இவனுக்கு வெறுப் பாக இருந்தது. ஆனால் இவனுடைய வெறுப்பைப் பொருட்படுத்தாமல் அவர்கள் தங்கள் இஷ்டப்படி பெண் பார்த்துக் கொண்டிருப்பது இவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது.

கலியாணமும் கட்டாயத்தின் பேரில் நடந்தது. அவனுடன் அவன் இஷ்டத்திற்கு விரோதமாகப் பிணிக்கப் பட்ட பெண் சாரதா, நல்ல அழகி. ஆனால் படிப்பு என்பது, அதாவது நாயகத்தின் அர்த்தத்தில், சிறிதாவது கிடையாது. பெயர் எழுதத் தெரியும். ஆனால் அந்த அழகில், அவள் குண சம்பத்தில் நாயகத்தால் ஈடுபட முடிய வில்லை. தமது மணமே வாழ்க்கையின் தோல்வியாகக் கருதினான். இருவரும் ஒரே வீட்டில் வாழ்ந்தார்கள். ஏறக்குறைய நெருங்கிப் பழகினார்கள். ஆனால் இருவரும் இரு தனி உலகங்களில் வசித்து வந்தார்கள். சாரதாவிற்கு நாயகத்தின்மீது கட்டுக்கடங்காத பாசம் இருந்தது. ஆனால் வெளிக்குக் காண்பிக்கப் பயம். தனது கணவர் எப்பொழுதும் ஒரு மாதிரியாக இருக்கும் பேர்வழி என்று நினைத்தாள். அதில் அவளுக்குப் பயம். அவன் இருக்கும்

அறைக்குக் காரியமற்றுச் செல்வதற்குப் பயம். இருவர் வாழ்க்கையும் வீணையும் விரலும் விலகி யிருப்பது போன்ற தனிப்பட்ட கூட்டு வாழ்க்கையாக இருந்தது.

கடைசியாக இவனுக்கு ஒரு வேலை கிடைத்தது. அதை யும் வேலை என்று சொல்லிவிட முடியாது. தன் தெருவி லுள்ள செல்வந்தர், சுந்தரேசம் பிள்ளையின் மைத்துனிப் பெண் பி. ஏ. யில் தவறி விட்டாள். அவளுக்கு அரசியல் சாஸ்திரமும் பொருளாதார சாஸ்திரமும் படித்துக் கொடுக் கும் வேலை.

நாயகம் இந்தப் பொறுப்பைத் தன் முழு உள்ளத் துடனும் ஏற்றுக்கொண்டான். சம்பளம் ஏதோ ஐம்பது ரூபாய் என்ற பேச்சு. நாயகத்திற்குச் சம்பளத்தைப் பற்றிக் கூடக் கவலையில்லை.

சுந்தரேசம் பிள்ளையின் மைத்துனியைப் பார்க்கு முன்னரே என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்பதைக் கணக்குப்போட ஆரம்பித்து விட்டான்.

## 2

அன்று சாயங்காலம் ஆறு மணியிருக்கும்.

நாயகம் சுந்தரேசம் பிள்ளையின் வீட்டையடைந்தான். நாயகத்திற்குக் கூச்சம். இவ்வளவு பெரிய மாளிகையில் தான் காணாத கனவுப் பெண் இருப்பதில் உள்ளூரப் பூரிப்பு. அவள் எப்படி இருக்கிறாளோ? அறிவில் தனக்கு ஒத்தவளாக, சம்பாஷணையில் இன்பம் ஊட்டுபவளாக இருப்பாள் என்பதில் சந்தேகமில்லை.

சுந்தரேசம் பிள்ளை நல்ல குஷிப் பேர்வழி. வக்கீல் தொழிலில் நல்ல வரும்படி வந்தால் ஏன் குஷியாக இருக்க முடியாது?

வராந்தாவைக் கடப்பதற்கு முன் தொடை நடுக்கம். அந்தப் பெண் எப்படி இருப்பாளோ?

வேலைக்காரன் நாயகத்தை உள்ளே அழைத்துச் செல்கிறான்.

நாற்காலியில் உட்கார்ந்து பேப்பர் பார்த்துக் கொண்டிருந்த சுந்தரேசம் பிள்ளை, நாயகத்தைப் பார்த்ததும், ஏக ஆரவாரத்துடன், "வாத்தியார் ஸாரா? வாருங்கள் வாருங்கள்!" என்று சிரித்தார்.

"டேய், நீ போய்ச் சின்ன அம்மாளைக் கூப்பிட்டுக் கொண்டு வா," என்று அனுப்பிவிட்டு, "நளினா! நளினா!" என்று வேலைக்காரனுக்குக் கொடுத்த வேலையைத் தானே நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் செய்ய ஆரம்பித்தார்.

உடனே உள் ஹாலில் இருந்து ஒரு கதவு திறந்தது. "என்ன அத்தான்?" என்ற பெண் குரல்.

நாயகம் அந்தத் திசையை நோக்கினான். நாகரிக உடை, நாகரிக மூக்குக் கண்ணாடி, நெற்றியில் சுருண்டு தவழும் சிறு ரோமச் சுருள். கவலையற்ற மாதிரியாகக் கவலையுடன் உடையணிந்த கோலம், சிரித்த கண்கள், குறும்பு தவழும் அதரங்கள். பொதுவாக திரு. நாயகம் மனக் கோட்டை கட்டிக் கொண்டிருந்த பெண்களின் இலட்சியம் தோன்றியது.

அந்தத் திசையை நோக்கிய நாயகத்திற்கு உடல் முழுவதும் வியர்த்தது. நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. கால்கள் உட்கார வேண்டுவது

போல், உடலைக் கீழே இழுக்கவாரம்பித்தது. நாயகம் கோழையல்ல. ஆனால் அன்று அவனுக்கும் பரவசத்தினால் ஏற்பட்ட பயம், அச்சுச் சட்டம் போல் அவனுக்கு நிரந்தரமான வாய்ப்பூட்டுப் போட்டது.

"நளினா! இவர்தான் உனது வாத்தியார். மிஸ்டர் நாயகம்! அவள்தான் எனது மைத்துனிப் பெண். ஹேம நளினி! இந்த விசையாவது, பாஸ்பண்ண வழியைப் பார்!" என்று சிரித்தார் சுந்தரேசம் பிள்ளை.

திரு. நாயகத்திற்கு அந்தச் சந்தர்ப்பத்திற்குத் தக்க பதில் என்ன கூறுவது என்பது பெரும் பிரச்னையாக இருந்தது. அந்தப் பிரச்னை தீருவதற்கு அவகாசம் கிடைக்கவில்லை.

"ஸார், வாருங்களேன்," என்றாள் நளினி.

நாயகம் பின்னே சென்றான்.

"ஸார், இண்டியன் ஹிஸ்டரியில்தான் போய் விட்டது!" என்று சிரித்தாள், நளினி.

"அதற்கென்ன? கொஞ்சம் ஸ்பெஷலாகப் பார்த்துக் கொண்டால் போகிறது!" என்றான் நாயகம். இந்த வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வருவதற்குள் பிரம்மப் பிரயத்தனமாகி விட்டது.

"ஸார், கூச்சப்படாதீர்கள். உங்கள் வீடு மாதிரிப் பாவித்துக் கொள்ளுங்கள்!" என்றாள் நளினி.

திரு. நாயகத்திற்குத் தூக்கிவாரிப் போட்டது. தன்னை அவள் கோழை என்று நினைத்துச் சிரிக்கிறாள் என்று அவனுக்கு அவமானம், கோபம், சொல்ல முடிய வில்லை; மெல்லவும் முடியவில்லை.

குரலை ஒரு மாதிரியாக வைத்துக் கொண்டு, "நான் கோழையல்ல!" வென்று தனது வெற்றிக் கொடியை நாட்டினான்.

"உங்களை யார் அப்படிச் சொன்னார்கள்? குரல் ஏன் இப்படிக் கம்மி இருக்கிறது? காச சம்ஹாரி மாத்திரை இருக்கிறது. எடுத்துத் தரட்டுமா?" என்று அலமாரியைத் திறந்து தேடினாள்.

நாயகம் தனது ஜயக் கொடி பிடுங்கப்பட்டுத் தரையில் புரள்வதைக் கண்டான். இத்தனைக்கும் ஒரு சிறு பெண். ஒரு அறை கொடுத்தால்...அலமாரியைப் பார்ப்பதுபோல் தன்னைப் பாாத்து ஏன் சிரிக்க வேண்டும்? இவனது மானத் தத்துவ ஆராம்ச்சியில் ஒரே பொருள்தான் பட்டது. இந்த மதனைக் கண்டதும்...

"இன்று என்ன ஆரம்பிக்கலாம்?" என்றான் நாயகம்.

"நான் எல்லாம் படித்திருக்கிறேன். நீங்கள் ஒன்று செய்தால் நன்றாக இருக்கும், ஸார்!" என்றாள் நளினி.

"என்ன?"

"போன பரீட்சைக் கேள்விகளைத் தவிர நல்ல முக்கிய மான கேள்வி ஐந்திற்கு விடை எழுதித் தந்தால் சீக்கிரம் பாடங்களைத் திருப்பிப் படித்து விடலாம். வேலையும் குறைவாக இருக்கும்!" என்றாள்.

"அப்பொழுது நான் கேள்விகள் கொடுக்கிறேன். நீ எழுதி வை."

'எனக்கு மற்றதைப் படிக்க வேண்டியிருக்கிறதே. தயவுசெய்து நீங்கள் எழுதித் தாருங்கள், ஸார்!" என்று சிரித்தாள் நளினி.

அவள் புன்சிரிப்பு அவனுக்குக் கட்டளை மாதிரி இருந்தது.

"புஸ்தகம், காகிதங்களை எடு," என்று உட்கார்ந்து எழுத ஆரம்பித்தான்.

இத்தனை நாள் புரொபஸர்களுக்கு டிமிக்கி கொடுத்த நாயகத்திற்கு முதலில் உத்ஸாகமாக இருந்தாலும் நான்காவது பக்கம் போவதற்குள் புளித்துப் போய் விட்டது.

"நான் சொல்லிக்கொண்டு வருகிறேன். நீ எழுது," என்று நோட்டை அவள் கையில் கொடுத்தான். இருவர் கைகளும் சந்தித்தன. திரு. நாயகத்திற்குப் புளகாங்கித மாக இருந்தது. ஆனால் நளினியின் மீது ஒரு மாற்றமும் கிடையாது.

"சொல்லுங்கள்," என்றாள். சொல்லிக்கொண்டு போக ஆரம்பித்தான்.

"நீங்கள் இப்படி வேகமாகச் சொன்னால் நான் எப்படி எழுதுவது?"

இப்படி இவன் சொல்லுவதும், அவள் தடை செய்வது மாக, ஒரு பக்கம்கூடச் செல்லவில்லை. மேலும் அவளுக்குச் சாதாரண ஆங்கிலப் பதங்களுக்கு எழுத்துக் கூட்டக் கூடத் தெரியவில்லை என்பதிலிருந்தும், சிற்சில விஷயங்களில் பயங்கர அசட்டுத்தனங்களைக் காண்பிப் பதிலிருந்தும், அவள் உண்மையில் அந்த வகுப்பில் படிக்கிறாளா என்ற சந்தேகம் தோன்றவாரம்பித்தது. ஆனால் அவன் பேசுவதற்கெல்லாம் 'கிண்டலாக'ப் பதில் சொல்லுவது வாயைத் திறப்பதற்கே பயப்படும்படி செய்து விட்டது.

அன்று பாடம் முடிந்து வீட்டிற்குத் திரும்பும்பொழுது திரு. நாயகம் கையில் ஒரு ஹிந்து தேச சரிதம், ஒரு கத்தைக் காகிதம், எப்பொழுது வெளி வருவோம் என்ற மனப் பான்மை இத்துடன் வெளியேறினான்.

வீட்டிற்குச் செல்லும் பொழுது மனைவி சாரதாவைப் பற்றி மனம் அடிக்கடி காரணமில்லாமல் எண்ணிக் கொண்டிருந்தது. எவ்வளவு சாதுவாகத் தொந்தரவு கொடுக்காமல் இருக்கிறாள்! வேலையை ராஜிநாமாச் செய்து தப்பித்துக் கொண்டால் என்னவென்று பட்டது. ஐம்பது ரூபாய் சும்மாவா?

நாயகத்தின் நினைவுகள் குமைந்தன. அதில் சாரதா முக்கியமாக இருந்தது அவனுக்கே விளங்கவில்லை.

## 3

நாயகம் வீட்டிற்கு வந்தவுடன் மிகுந்த களைப்பு. பள்ளிக் கூடத்திலும் உபாத்தியாயர்களுக்கு டிமிக்கி கொடுத்தவன். வெகு காலமாக உழைப்பென்பதே இல்லாதவன், இன்று உட்கார்ந்து கொண்டு சாரமற்ற பரீட்சைப் பதில்கள் எழுதிக் கொண்டிருக்க வேண்டு மென்றால்...வீட்டில் வந்ததும் தனதறையில் சென்று உட்கார்ந்து இந்து தேச சரித்திரத்தைப் பற்றிய கேள்வி களுக்குப் பதில் எழுதவாரம்பித்தான். மனம் அதில் படிய வில்லை. சரித்திரம் படித்து வெகு நாட்களாகி விட்டது. புத்தகத்தைப் படித்துக்கொண்டு எழுத வேண்டி யிருந்தது.

“சாரதா, தண்ணீர் கொண்டுவா”, என்று அந்தச் சாக்கில் நாற்காலியில் சாய்ந்து கொண்டான்.

சாரதா பயந்து நடுங்கிக்கொண்டு அவசர அவசரமாகத் தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்து மேஜையின் மீது வைத்துவிட்டுத் திரும்பினாள்.

“ஏன் ஓடுகிறாய்? உட்காரு. கொஞ்ச நேரம் பேசலாம்,” என்றான் நாயகம்,

தனது கணவன் இதுவரை தன்னிடம் இப்படிப் பேசியதைக் கேட்காத சாரதா, ஏதோ கோபிக்கத்தான் போகிறார் என்ற பயத்தில் நடுங்கிக்கொண்டு நின்றாள்.

"உட்காரு."

சாரதா பயந்து கொண்டு உட்கார்ந்தாள்.

"ஏன் சாரதா, என்னைக் கண்டால் ஏன் இப்படி ஒளிகிறாய்?" என்றான். காரணம் அவன்தான் என்பதை மறந்து விட்டான் போலும்.

சாரதாவிற்குத் தன் மீது கோபம் இல்லை என்று தெரிந்தது. ஆனால் என்ன பதில் சொல்வது என்ற பிரச்னை.

"ஒளியலே!" என்றாள்.

"பிறகு...?"

பதில் இல்லை.

"இதை எழுதித் தொலைக்கிறேன். கொஞ்சம் உட்காரு. பிறகு பேசுவோம்."

திரு. நாயகம் என்னமோ எழுதிப் பார்த்தான், முடியவில்லை.

அதற்குள் சாரதா அந்தப் பெரிய புஸ்தகத்தில் படம் பார்க்க ஆரம்பித்து விட்டாள். குழந்தையின் உள்ளம்.

"இவ்வளவும் படிக்கணுமா? எவ்வளவு பெரிசு!" என்றாள்.

அதிலே ஒரு ஆச்சரியம், அவளை அறியாது ஒரு பரிதாபம்.

"இவ்வளவும் படிக்கணும்!"

"இவ்வளவுமா?" என்றாள்.

அவள் கையிலிருந்த புஸ்தகத்தை அவன் வாங்கும் பொழுது, புஸ்தகம் விழுந்தது. சாரதாவின் தலை அவன் மார்பில் இருந்தது. அந்த நிமிஷம், தனது காதல் கோட்டை இருக்கும் இடத்தை யறியாது போனாலும், களங்கமற்ற பாசத்தின் இருப்பிடத்தை அறிந்தான்.

ஹேமநளினிக்கு வாத்தியாரை ஏமாற்ற முடியவில்லை. ஜம்பம் சாயாது என்று கண்டு கொண்டாள். காரணம் தெரியாது. அவளுக்கும் கவலை இல்லை.

(1934)

★

# திருக்குறள் குமரேச பிள்ளை

நீங்கள் பட்டணம் போனால் கட்டாயம் பார்க்க வேண்டியது என்று சொல்லுகிறார்களே, 'உயிர்க்காலேஜ்', 'செத்த காலேஜ்' என்று—சென்னையில் அவை இரண்டிற்கும் அதிகமான வித்தியாசம் ஒன்றுமில்லை,—அதில் இரண்டாவதாக ஒரு காலேஜ் சொன்னேனே, அதில் அவசியமாக இருக்க வேண்டிய பொருள், எங்களின் அதிர்ஷ்டத்தாலும், சென்னையின் துர் அதிர்ஷ்டத்தாலும் எங்களூரிலேயே இருக்கிறது. அதுதான் எங்களூர் 'திருக்குறள் குமரேச பிள்ளை.'

இந்தத் திருவாளர் தமது திவ்ய சரீரத்திலேயே இந்த உலகத்துப் 'பென்ஷனையும்' காருண்ய அரசாங்கத்தின் பென்ஷனையும் சுமந்து மகிழும் பெரியார். இவரைப் பார்க்கும் பொழுதெல்லாம், குறள் ஒன்றும் எனக்கு ஞாபகம் வராவிட்டாலும், 'பருத்த தொந்தி நம்மதென்று நாமிருக்க' என்று வரும் பாட்டு எனது மனதில் கிடந்து கொம்மாளம் அடிக்கும்.

கொஞ்சம் வருணிக்கலாமா? உச்சிக் குடுமி. சிவனைப் போல் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு வைத்த 'இமிடேஷன்' நெற்றிக் கண், நெற்றிக் கண் என்றவுடன் பயப்பட வேண்டாம்; கொசுவைக்கூடக் கொல்லச் சக்தியற்ற சந்தனப் பொட்டு. அதற்குப் பகைப் புலமாக விபூதி. கழுத்தில் தங்க நாண் இட்ட ருத்ராக்ஷம்......தப்பு, உருத்திராக்கம். அதை மறைக்க முடியாமல் நாணமுற்றுத் தவிக்கும் காலர்களுள்ள நாகரிகச் சீமை 'டுவில்' ஷர்ட்,

அதற்குமேல் நாஸூக்காக போடப்பட்ட டர்க்கி துண்டு, இடையில் தூய லங்காஷர்மல். இடது கையில் பொடி டப்பி, வலது கையில் மடித்த குட்டிக் குறளும், ருத்திராக்ஷ மாலையும்—இம்மாதிரி இவர் 'வெள்ளைக் கலையுடுத்து', 'புத்தகம் பொடிகை மாலை' இத்யாதி சின்னங்களுடன் தோன்றும் ஓர் ஆண் சரஸ்வதியாகவே, (விஷ்ணு பெண்ணுரு எடுத்தால் சரஸ்வதி ஏன் ஆணுரு எடுக்கக் கூடாது?) தோன்றுவார். இது அவர் நமக்குச் சாதாரண நேரங்களில் சாதித்தருளும் திவ்விய சேவை. விசேஷ காலங்களில்......ஐயோ, என்னால் முடியாது.

இவர் பேச்செல்லாம் சிறு பிரசங்கங்கள். இவரைக் காணும்பொழுது எல்லாம் எனக்கு ஒரே ஒரு எண்ணம் தோன்றும். இவர் மூளையில் அகப்பட்டுத் தவித்துக் கொண்டு இருக்கும் குறள் எல்லாம், இவர் வாயைத் திறந்தவுடன் விழுந்தடித்துக் கொண்டு ஓடி வருகிற மாதிரித் தெரியும். எத்தனையோ வருஷங்களாகியும் இந்தத் திருக்குறளுக்கு விடுதலை என்ற சுய ஆட்சி கிடைத்த பாடு இல்லை.

உயர் திருக்குறள் குமரேச பிள்ளைக்கு மூன்றில் எப்பொழுதும் நம்பிக்கை. தெய்வங்களும் மூன்று. இலக்கியமும் மூன்று. ஒன்று சிவஞானபோதம், இரண்டு காஞ்சி புராணம், மூன்று பெரிய புராணம். இவை மூன்றின் கருத்தையும் கலந்து பொருந்தியது திருக்குறள் என்ற தமிழ் மறை.

எங்களூரின் கிழக்குப் பக்கத்தில் ஒரு வெளியுண்டு. அதில் ஒரு கட்டிடம். வாரத்தில் ஐந்தரை நாட்கள் ஆரம்பப் பள்ளிக் கூடமாகவும், ஒன்றரை நாட்கள் உபாத்தியாயரின் மனைவி நெல் காயப்போடும் ஸ்தல மாகவும், மார்கழி மாதத்தில் பஜனைமடமாகவும், முக்கிய

மாக எங்களூர் கோகலே ஹாலாகவும் திகழ்ந்தது. அதில் தான் நமது குமரேச பிள்ளையின் 'அரங்கேற்று காதை' நடிக்கப்படும்.

வீட்டில் ஒரு பாகத்தைக் கோவிலாக்கி, கலைத்திறன் ஜலத்திற்கும் இல்லாத படங்களின்முன் புஷ்பங்களையும் மருந்தையும் வாரித் தெளித்து, பூஜை என்ற மகத்தான பொழுதுபோக்கு யக்ஞத்தைச் செய்தும், கழிக்க முடியாத மணிச் சங்கிலிகளை, இந்தத் திருச் சபையில் கழிக்க முயலும் பெரியார்களும், பத்து ரூபாய்க்காக, 'பானா' 'மூனா' 'இம்மன்னா' 'பழம்' 'இரண்டும் இரண்டும் நான்கு' என்ற அஸ்திவாரக் கப்பிகளை, கல்வி என்ற பெருங்கோவிலைக் கட்டுமாறு, சிறுவர் மூளை என்ற திவ்வியப் பிரதேசத்திலே நாள் முழுவதும் இடித்துச் செலுத்தும் திருப்பணியில் அயர்ந்து தளர்ந்து நித்திரை சுவானுபூதியை விரும்பும் மூளையின் கொற்றர்களும், வாழைப்பழத் தோலில் சறுக்கி விழுவதிலிருந்து, இரண்டு நாய்களின் குருக்ஷேத்திரம்வரை, இமை கொட்டாமல் பொறுமையுடன் பார்க்கச் சக்தி வாய்ந்த, குளிக்காத நாயனார்களும்,—இவர்களுக்குத்தான் குமரேச பிள்ளை யின் சண்டமாருதத்தைத் தாங்கும் எஃகினாலான மூளை கள் உண்டு.

சாயங்காலம் ஐந்து மணிக்கு ஆரம்பித்து, மேஜையி லிருக்கும் விளக்கில் எண்ணெய் இருக்கும்வரை, அல்லது குமரேச பிள்ளைக்குப் பசி எடுக்கும்வரை, இந்தத் திருச் சபை நடக்கும். கேட்க வந்தவர்களைப் பற்றி அவருக்குக் கவலை என்ன? செவிக்குணவு இல்லாத போதன்றோ சற்று வயிற்றுக்கும் ஈயவேண்டும்!

ஒரு நாள் எக்கச் சக்கமாக அங்கு அகப்பட்டுக் கொண்டேன்.

குமரேச பிள்ளை எழுந்து, 'உலகெலாம் உணர்ந் தோதற்கரியவன்' என்று கண்ணை மூடியவண்ணம் பிலாக் கணம் வைத்துவிட்டுப் பேசலானார் :

''சென்ற ஆனித் திங்கள் பதினெட்டாம் நாள் அன்று எனது கெழுதகை நண்பர் கலசை உயர்திரு இளவழகனார், 'வள்ளுவனாரும் மேனாட்டு உடற்கூறு நூலும்,'' என்ற பொருள் பற்றி ஓர் பேருரை நிகழ்த்துமாறு வேண்டினர். யாமும் உடன் பட்டனம். புகழ் பற்றியோ எனின், அற்றன்று! நந்தெய்வத் திருமறையை இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்குமுன் வகுத்தருளிய செந்நாப் போதார்,

''புணர்ச்சி பழகுதல் வேண்டா, உணர்ச்சி தான் நட்பாங் கிழமை தரும்' என்றும்,

''உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே இடுக்கண் களைவதாம் நட்பு

என்றும் அருளிப் போந்தார். ஆகலின், யாமும் உடன் பட்டனம்.

''பேரறிவாளர் குழுமியுள்ள மன்றத்தின்கண், நும் போன்றோர் மாட்டு அறைதற் கொன்றிலதாயினும், என் சிற்றறிவுக்கெட்டிய பொருளை வகுத்துரைக்குமாறு பெரிதும் விழைகின்றேன். இன்றைக்கு எனக்கு உரை செய்யுமாறு அருளப்பட்ட பொருள் நந்தொல்லறிவாளர் வள்ளுவ நாயனார் மேனாட்டு உடற்கூறு நூல்களை இற்றைக்கு ஐயாயிர வருடத்திற்கு முன்னரே எவ்வாறு தெள்ளிதில் அறிந்திருந்தார் என்பான் மொழிதல் பற்றி.

'துளாயிரத்து இருபத்தியாறாம் குறள் முதலடியில் ஓர் பெரும் உண்மையைக் கூறிப் போந்தார்.'

'துஞ்சினார் செத்தாரில் வேறல்லர்.' இறந்தவர்கள் மாண்டவர்களில் வேறு அன்று என்ற உயர்ந்த கருத்தை

எளிதாக நயம்பட செய்வித்திறக் கூறியருளினார். உரையாசிரியர் பரிமேலழகர் 'துஞ்சினார்' என்னும் பதத்திற்கு உறங்கினவர்கள் என்று வகுக்கிறார். அஃது ஒரு பெரும் வழு. அன்னார் அறியாமையை எள்ளி நகையாடுகின்றேன். இறந்தவர் என்று பொருள் கோடல் சாலப் பொருந்தும். பரிமேலழகனார் அவ்வாறு கூறிப் போந்தார் எனின், அது ஓர் பெரும் ஆரியக் கூற்று. சூழ்ச்சி!

"நிற்க. கவரிமான் விலங்கினங்களில் கானில் உலவா நிற்கும் நாற்காற் பிராணி என்று பொருள் கோடல் தகும். அதன் உயிர் அதன் வாலில் இருப்பது மேல் நாட்டார் கண் கூடாகக் கண்ட காட்சி. அவர் அதைத் தொகுத்து வைத்திருக்கின்றனர். வேட்டையாடுங்கால் பையப் பையச் சென்று அதன் வாலில் ஓர் சிகையைப் பிடுங்கி விடுவார்களாம். இதை நம் நல்லிசைப் புலவன் தமிழ் மறை தந்த பெம்மான் அறிந்தன்றோ,

'மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்' என்று அருளிப் போந்தார். என்னே!

"இன்று இப் பொருள் பற்றி வலியுறுத்துவான் அவாய், உரையாசிரியர் பரிமேலழகனாரால் ஏற்பட்ட பெரும் பிழைகளைக் கண்டிப்பான் மிகுதியும் வேட்கையுடையேன் எனின் சாலப் பொருந்தும்.

"அவர் 'கண்ணோட்டம்' என்ற பதப் பிரயோகத்திற்கு அருள் என்று வகுக்கிறார். அஃதன்று. கண் அசைவு என்பதுதான் பொருள்.

"கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம், அஃதின்றேல் புண் என்று உணரப்படும்."

"கண்ணில் அசைவு இன்றேல் புண் போன்று அஞ்சத் தக்கவாறு இருக்கும் என்பது மேனாட்டுத் தொன்னூல் வலியுறுத்தும் உண்மை. அது நாம் இற்றைக்கு ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பே யறிந்த செம்பொருள் என்னின், என்னே தமிழுலகம்! தமிழ் நாகரிகம்! அவை வாழ்க! அவை வெல்க!

"நிற்க. இற்றைக்கு.........."

என்னால் பொறுக்க முடியவில்லை. ஓடி வந்து விட்டேன்.

**(1934)**

★

# இரண்டு உலகங்கள்

ராமசாமி பிள்ளை வெறும் அறிவியல் வாதி. உலகம் தர்க்கத்தின் கட்டுக்கோப்பிற்கு ஒத்தபடிதான் வளருகிறது என்ற நம்பிக்கையில் வளருகிறவர். தர்க்கத்திற்குக் கட்டுப் படாத விஷயமோ பொருளோ உலகத்தில் இருக்க முடியாது. அப்படி இருந்தால், தர்க்கத்தின் மயக்கம் போல சமூகப் பிரமையாகத்தான் இருக்க முடியும், இருக்க வேண்டும் என்பது அவருடைய மதம். அதை அசைக்க யத்தனித்தவர்கள் பாடு திண்டாட்டம்தான். குறைந்தது இரண்டு மணி சாவகாசமாவது வைத்துக் கொண்ட பிறகு தான் அவரை நெருங்கலாம்.

அவர் காலேஜில் ஒரு ஸயன்ஸ் பண்டிதர். வாழ்க்கையின் வசதிகள், முக்கியமாகப் புஸ்தகங்கள் எல்லாம் கிடைக்கக் கூடிய நிலைமை. கவலையற்ற வாழ்க்கை.

அவர் மனைவி ராஜத்திற்கு ஏகதேசக் கல்வி. அதாவது ஒரு முழந் தாளில் தனது பெயரை, குறைந்தது இரண்டு தவறுகளுடன், ஒரு வரி பூராவாக எழுதக் கூடிய கல்வி. ராமசாமி பிள்ளைக்கு எப்பொழுதுமே அவருடைய மனைவியின் கடிதத்தைப் படிப்பதென்றால் குறுக் கெழுத்து நேரெழுத்து என்று வந்து கொண்டிருக்கும் வார்த்தைப் போட்டிகளுக்குச் சரியான விடை கண்டு பிடிப்பது மாதிரி. அவளுக்குத் தன் புருஷன் என்றால், அடங்காத பெருமை. ஆசை. இன்னும் என்னென்னவோ

அவள் மனதில் எழுந்து அவள் உடல் முழுவதும் பரவசப் படுத்தும். அவர்களுடைய குழந்தை, ஒன்றரை வயதுக் குழந்தை, அதுதான், தனது கணவன் கொடுத்த செல்வங் களைக் காட்டிலும் மகத்தான பொக்கிஷம் என்று நினைத் துக் கொண்டிருப்பவள்.

அன்று ஒரு நாள் அவருக்கு பெர்ட்ரண்ட் ரஸல் எழுதிய புஸ்தம் கிடைத்தது. அது அவருடைய மனதில் இருந்து கொண்டிருந்த பெரிய குழப்பமான சிக்கல்களுக்கு எல்லாம் ஒரு தீர்ப்பு, அறிவுக்கு ஒத்த தீர்ப்புக் கொடுத்து விட்டது. அன்று சாயங்காலம்வரை அதை உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தார். நேரம் சென்றது கூடத் தெரிய வில்லை.

அப்பொழுது ராஜம் குழந்தை மீனுவை இடையில் எடுத்துக்கொண்டு, கையில் காப்பி பலகாரங்களுடன் அறையில் நுழைந்தாள். ராமசாமி பிள்ளையின் கவனம் முழுவதும் அந்தப் புஸ்தகத்தில் அழுந்திக் கிடந்தது.

அவரைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று பட்சணங்களை மெதுவாக மேஜைமீது வைத்து விட்டு, குழந்தையுடன் சற்றுத் தள்ளி தரையில் உட்கார்ந்தாள்.

குழந்தை என்ன தர்க்கத்தைக் கண்டதா, அல்லது அறிவைக் கண்டதா? "அப்பா!" என்று சிரித்தது. ராஜம் மெதுவாகக் குழந்தையின் வாயைப் பொத்தினாள். அது என்ன கேட்கிறதா? அதற்குப் போக்குக் காட்டுவதற் காகக் குழந்தையை மடியில் எடுத்து, பால் கொடுக்க ஆரம்பித்தாள். கொஞ்ச நேரம் குழந்தை அதில் ஈடு பட்டது.

ராஜம் கவனியாத சமயத்தில் குழந்தை திடீரென்று எழுந்து, 'அப்பா' என்று கத்திக் கொண்டு, தள்ளாடி ஓடி அவர் காலைக் கட்டிக் கொண்டது.

அப்பொழுதுதான் பிள்ளையவர்கள் தம்முடைய அறிவியல் போதையிலிருந்து விழித்தார். ராஜம் எழுந்து சென்று மெதுவாக அவர் கழுத்தைச் சுற்றித் தன் கரங்களை வளைத்து அவரது உதடுகளில் முத்தமிட்ட வண்ணம், ''காப்பி கொண்டுவந்திருக்கிறேன்'' என்றாள்.

ராமசாமி பிள்ளை தமது உதடுகளைப் புறங்கையால் துடைத்து விட்டு, ''என்ன ராஜம், உனக்கு எத்தனை நாள் சொல்லுவது—உதட்டில் முத்தமிட்டால் கிருமிகள் பரவி விடும் என்று. அதிலிருந்துதானே பல வியாதிகள் வருகிறது என்று முந்தாநாள் கூடச் சொன்னேனே. காப்பி எங்கே? இந்தப் புஸ்தகத்திலே என்ன மாதிரி உண்மையைச் சொல்லியிருக்கிறான் தெரியுமா?'' என்றார்.

ராஜம் ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தாள். மெதுவாக ஒரு பெருமூச்சு வந்தது, அவள் கடைக் கண்ணில் சற்று ஒளிவிட்டுப் பிரகாசித்ததே......அவள் முந்தானையால் துடைக்குமுன்...

''ராஜம், மனிதனுக்கு மூன்று குணங்கள்தான் இயற்கை. முதலில் பசி. இரண்டாவது தன் குடும்பத்தை விருத்தி செய்வது. பிறகு, மூன்றாவது, பக்கத்திலிருப்பதை அழிப்பது. இது மூன்றிற்கும் அடிப்படையான குணம், எல்லாவற்றையும் தனக்கென்று ஆக்கிக் கொள்ளும் ஆசை. மற்றதெல்லாம் வீண் பித்தலாட்டங்கள்...''

ராஜம் அவரை வெறித்துப் பார்த்தபடியே இருந்தாள்.

''இந்தக் கற்பு, காதல் என்று பேத்திக் கொண்டு இருக்கிறார்களே, அதெல்லாம் சுத்த ஹம்பக்...''

''அப்படின்னா...''

''சுத்தப் பொய். மனிதனுக்கு எல்லாவற்றையும் தனது என்று ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று

ஆசைப்படுகிறானே, அதில் பிறந்தவை. தன் சொத்து, தான் சம்பாதித்தது, கஷ்டப்பட்டுச் சம்பாதித்தது தனக்கே இருக்கவேண்டும் என்ற ஆசை. மனிதன்தான் செத்துப் போகிறானே. தனக்கில்லாவிட்டால் தனது என்று தெரிந்த தனது ரத்தத்தில் உதித்த குழந்தைகளுக்குக் கொடுக்க ஆசைப்படுகிறான். பெண்கள் தங்கள் இஷ்டப்படி இருந் தால் அது எப்படி முடியும்? அதற்குத்தான் கலியாணம் என்று ஒன்றை வைத்தான். பிறகு தனக்குத் தெரியாமல் ஒன்றும் நடந்துவிடக் கூடாது என்பதற்குக் கற்பு என்பது பெருமை என்ற பொய் சொல்லி வேலி கட்டினான். பிறகும் பார்த்தான், காதல் என்ற தந்திரம் பண்ணினான். ஒருவருக்கொருவர் இந்த மாதிரி இஷ்டப்படுவார்களாம்... இதெல்லாம் சுத்த ஹம்பக்...''

''எனக்கு ஒண்ணும் தெரியலியே!''

தமது உற்சாகமான பிரசங்கம் சுவரில்தான் பிரதி பலித்தது என்பதில் பிள்ளையவர்களுக்கு ஏமாற்றம். ராஜம் ஒன்றும் பேசாமல் குழந்தையை எடுத்துத் தனது மார்பில் இறுக அணைத்துக் கொண்டாள்.

''என்ன தெரியவில்லை? இது வெகு சுலபமாச்சே... சொல்லுகிறேன் கேள்...'' என்று ஆரம்பித்தார்.

''எனக்குத் தெரிய வேண்டாம். வாருங்களேன் பீச்சுக்குப் போகலாம்!'' என்றாள். தன்னையறியாமல் அவள் கைகள் குழந்தையை இறுக அணைத்துக் கொண்டன.

ராமசாமி பிள்ளைக்கு இதைக் கவனிக்க நேரமில்லை. தமது சுகாதாரத்திற்கு, தமது குடும்ப சுகாதாரத்திற்கு அவசியமான கடற் காற்று வாங்க அவசர அவசரமாக உடைகளை மாட்டிக் கொண்டார்.

"என்ன ராஜம், புறப்படலியா?" என்பதற்குமுன், "இதோ வந்தேன்." என்று குழந்தைக்கு ஒரு மாற்றுச் சட்டையணிந்து, அதை இடையில் எடுத்துக்கொண்டு தயாரானாள்.

குழந்தை "அப்பா!" என்று அவரை நோக்கித் தாவியது.

புன்சிரிப்புடன் குழந்தையை எடுத்துக் கொண்டார். இருவர் கரங்களும் சந்தித்தன. ராஜத்திற்கு உள்ளத்தில் குதூஹலம் கலந்த ஒரு ஏமாற்றம் தோன்றியது.

## 2

கடற்கரையில் இருவரும் உட்கார்ந்திருந்தனர். குழந்தை மீனுவிற்கு மணலை வாரியிறைக்கும் தொழிலில் வெகு உற்சாகம். தலை எல்லாம் மணல். ராஜத்தின் மடி எல்லாம் மணல்.

குழந்தையுடன் விளையாடுவதில் ராஜத்திற்கு எல்லாம் மறந்து விட்டது. மீனுவின் அட்டகாசத்தில் தன்னை மறந்து விட்டாள்.

கடலைப் பட்டாணி விற்பவன் ஒருவன் அவர்களை நெருங்கினான்.

"அம்மா! கடலைப் பட்டாணி!" என்றான்.

"வேண்டாம் போ!"

குழந்தை அவனைப் பார்த்து விட்டது. அது வேண்டும் என்று அவனை நோக்கிக் கைகளைக் காண்பித்தது. பிறகு அழுகை. கடலையையாவது தின்னத் தெரியுமா? வேண்டுமென்றால் மறு பேச்சேது?

"கடலைக்காரனா அது. உடம்பிற்காகாதே!" என்று அழுகையைக் கேட்டுப் புஸ்தகத்தை மூடிக்கொண்டு பிள்ளையவர்கள் கேட்டார்.

"காலணாவிற்குக் கடலை, உப்புக் கடலை, கொடு. என்னப்பா உனக்கு எந்த வூர்?" என்றார் பிள்ளை.

"தஞ்சாவூர் ஜில்லா சாமி!"

"என்ன! மன்னார்குடியா?"

"ஆமாஞ் சாமி!" என்று சிரித்தான்.

"உனக்கு அங்கே, பெரிய கடைத் தெரு சாமி நாயக்கர் தெரியுமா?"

"போன வருசம் அவுக கிட்டத்தான் வேலை பார்த்தேன் சாமி. காலதோசம்...என்னை இங்கே கொண்டாந்து தள்ளிட்டது!" என்று பிள்ளையவர்களின் கைக்குட்டையில் கடலையை அளந்து போட்டு விட்டு ஒரு கூழைக் கும்பிடு போட்ட வண்ணம், "கடலைப் பட்டாணி" என்று கத்திக் கொண்டு சென்று விட்டான்.

'ராஜம்! இதைப் பார்த்தியா? சமுத்திரக்கரையிலே எந்தக் கடலைப் பட்டாணி விற்கிறவன் கிட்டக் கேட்டாலும், இந்தப் பதில்தான். இது எது மாதிரி என்றால் அன்றைக்கு ஒரு ஜோரான ரஷ்யக் கதை படித்தேன். அதிலே விபசாரி வீட்டுக்குப் போகிறவனைப் பற்றி எழுதுகிறான். அங்கே போகும்பொழுது, ஒவ்வொருவரும் முதல்லே, "உன் பேரென்ன?" என்று கேட்பானாம். "இதில் வந்து, அதாவது, நீ தவறி எவ்வளவு காலாமாச்சு?" என்று கேட்பானாம். அவளும் ஏதாவது ஒரு பொய், சமீபத்தில்தான் சமூகக் கொடுமையால் வந்து விட்டதாகக் கூறுவாளாம். அதை அவள் ஆயிரத்தெட்டாவது தடவை பாடம் ஒப்பிக்கிற மாதிரி சொல்லியிருப்பாள். இவனும் வாத்தியார் மாதிரிக்

கேட்டுக் கொள்ளுவான். பிறகு இருவருக்கும் அதைப் பற்றிக் கவலையில்லை. இதில் என்னவென்றால், மனிதனுக்கு விபசாரியானாலும் தனக்குக் கிடைப்பது நல்ல பொருளாக இருக்க வேண்டும் என்ற ஆசையினால் தான் இருக்கிறான். சாயங்காலம் சொன்னேனே ஒன்று. அதுதான் அந்தத் தனக்கு வேண்டுமென்ற ஆசை. அதிலிருந்துதான்...''

''அதற்கென்ன இப்பொழுது?''

''இல்லை! உனக்குத் தெரியவில்லை என்றாயே, அதற்குச் சொன்னேன்.''

''எனக்குத் தெரிய வேண்டாம்.''

அப்பொழுது நன்றாக இருட்டி விட்டது. எங்கிருந்தோ, பக்கத்தில்தான், யாரோ பாரதிப் பாட்டு ஒன்றைப் பாடினார்கள்.

''பிள்ளைக் கனியமுதே'' என்ற இன்பக் கனவில் ராஜத்தின் மனம் லயித்து விட்டது.

பாட்டு முடிந்தது.

மௌனம்.

''பாட்டு எவ்வளவு நல்லா இருக்கு! மீனுவுக்குப் பாடினாப்பிலே இருக்கே!'' என்றாள் ராஜம்.

''அதில் என்ன இருக்கிறது. விஷயம் தெரியாமல் பாடுகிறான். வெறும் அசட்டுப் பாட்டு!'' என்றார்.

மீனு அதற்குள் கடலை பூராவும் வாரி இறைத்துவிட்டு வேறு 'ஸப்ளை' வேண்டுமென்று அழ ஆரம்பித்தாள்.

இருட்டில் மீனுவை எடுத்து இறுக அணைத்துக் கொண்டாள்.

ராமசாமி பிள்ளை, ''நேரமாகி விட்டது!'' என்று எழுந்தார்.

ராஜத்தின் மனத்தில் ஒரு ஏமாற்றம் இருந்தது.

(1934)

★

# பாட்டியின் தீபாவளி

"குத்துவிளக்கேற்றிக் கோலமிட்டுப் பாரேனோ?"

சங்கரிப் பாட்டியின் வீடு வெறிச்சோடிக் கிடந்தது. பாட்டியின் வாழ்க்கை, திடீரென்று இந்திரப் பதவியை இழந்த நஹுஷகன் நிலைமை மாதிரி. அவள் வாழ்க்கை சுகமான கவலையற்ற முடிவை எதிர் நோக்கித் தன் பிள்ளை, மாட்டுப்பெண், குழந்தை மீனு இவர்கள் இடையில் கழிந்து வந்தது. திடீரென்று சென்ற ஐப்பசியில், அந்தக் கண்ணற்ற விதி, எல்லோரையும் ஒரேயடியாகக் கொண்டு போய் விட்டது. காலராவிற்குத் தராதரம் தெரிகிறதா? அந்தக் குழந்தை, குழந்தை மீனு, அவள் என்ன பாவம்செய்தாள்? கிழக்கட்டையைத் தவிக்கவிட்டுத் திடீரென்று சென்று விட்டாளே!

அதன் பிறகு...

அதன் பிறகென்ன? கிழவிக்கு நாட்கள் சென்றது தெரியாது. யோகிகள் காலம் கடந்து விடுகிறார்கள். காலத்தின் மாறுபாடுகளை மீறி மோன நிலையில் இருந்து விடுகிறார்களாம். அது எனக்குத் தெரியாது. சங்கரிப்பாட்டிக்கு நாட்கள் கழிந்தது தெரியாது. நடைப்பிணம்...நடையற்ற பிணமாக இருந்தாலும் தேவலை.

அன்று விடியற்காலம் தீபாவளி ஆரம்பிக்கிறது. சாயங்காலம் முதல் கிழவிக்குத் துக்கம் நெஞ்சையடைத்தது. கிழக்கட்டைக்குத் தீபாவளி வேறு வேண்டியிருக்காக்கும். மடிசஞ்சி மூட்டையைத் தலைக்கு வைத்துப்

படுத்துக் கொண்டாள். இரவு பூராவாகவும் துக்கம்...... தூக்கமாவது மண்ணாவது!

விளக்கையாவது ஏற்றி வைக்கலாமே. கிழவி குடு குடுவென்று நடுங்கிய வண்ணம் எழுந்திருக்கிறாள். என்ன நேரம் என்று தெரியாது. வெளி எல்லாம் இருள். உள்ளெல்லாம் இருள். உள்ளத்திலும் இருள். எங்கோ தூரத்திலே பேச்சுக் குரல்...அர்த்தமற்ற மனிதக் குரல் அவள் காதைக் குத்துகிறது.

நெருப்புக் குச்சியைக் கிழித்துக் குத்து விளக்கை ஏற்றுகிறாள். குச்சிதான் சீக்கிரம் பிடிக்கிறதா? நனைந்த தீப் பெட்டி. அடுப்பண்டை போகிறாள். குவிந்த சாம்பலில் மங்கி அதன் உதவியால் நெருப்புக் குச்சியைப் பற்றவைத்து விளக்கை ஏற்றுகிறாள். விளக்கின் மங்கிய தீப ஒளி, குச்சியில் இருக்கும் தட்டுமுட்டுச் சாமான்களைப் பேயின் மாயையாகக் காண்பிக்கின்றன. அசைந்தாடும் தீபவொளி பொருள்களை அசைக்கின்றன. மூலையிலும் மோட்டிலும் பம்முகின்ற இருளையும் அசைந்தாடச் செய்கின்றன.

கிழவிக்கு மீனுவின் நினைவு உள்ளத்தைக் கவ்வியது. நெஞ்சை யடைத்தது. போன தீபாவளிக்கு முந்திய தீபாவளியில் அவள் கைக்குழந்தையாக, தவழும் குழந்தையாக, செல்லத்தின் மடியில் சிரித்துக் கொண்டிருக்கும் போது தைத்த சட்டை பாட்டியின் மடிசஞ்சி மூட்டையிலே, பரிசுத்தமான விபூதிச் சம்புடத்துடனும், ருத்திராட்சத்துடனும் இருந்தது. அதை மெதுவாக எடுத்து, (மங்கிய கண்களின் கண்ணீர் அதை நனைக்கிறது.) 'மீனு' என்று குழறிக் கொண்டு, குத்துவிளக்கின் பாதத்தில் சமர்ப்பித்து வணங்குகிறாள். கிழவியின் பொக்கை வாயில் ஒரு பரிதாபமான சிரிப்பு. பட்டுச் சட்டையில் இரண்டு துளிகள்,

பாட்டி குத்து விளக்கின் பாதத்தில், பட்டுச் சட்டையில் முகம் வைத்து, வணங்குகிறாள். உள்ளம் "மீனு! மீனு!" என்று ஒலி செய்கிறது.

ஏன் அப்படியே சிலையாக, குத்துவிளக்காக இருந்து விட்டாள்? உயிர்தான்...

"பாட்டி!"

குழந்தைக் குரல்...குழந்தை...மீனுவின்...

கிழவி திரும்புகிறாள்.

"வாடியம்மா! கோந்தே...வாடியம்மா!"

ஆவலுடன் கையை நீட்டுகிறாள்.

"மாத்தேன் போ!" குழந்தை சிரிக்கிறது. ஆனால் கைகளைப் போட்டுத் தாவுகிறது. குழந்தை அவள் வற்றிய நெஞ்சில் தாவுகிறது. அப்பா! பால் வார்த்த மாதிரி... என்ன சுகம்!

"பாட்டி! பாட்டி!" என்று நெஞ்சில் குழைகிறது. நெஞ்சிடையே நெளிந்து, வளைந்து, குழைகிறது.

"பாட்டி, பாப்பா வெச்சு விளையாடலாமா?

"வாடியம்மா! மரப்பாச்சி எடுத்துண்டு வரட்டா?"

குழந்தையுடன் ஒரு மூலைப் பக்கம் திரும்புகிறாள். குழந்தை எட்டி ஒரு பொம்மையை எடுக்கிறது. கையொடிந்த மரப்பாச்சி.

"பாட்டி! நீதான் அம்பி மாமாவாம்! நான்தான் பொண்ணாம். வெச்சு விளையாடலாமே!"

குழந்தைக்குச் சட்டை போட்டுக் குத்து விளக்கின் முன்பு மரப்பாச்சியுடன் உட்கார வைத்தாகி விட்டது. தனது நாதமிழந்து நடுங்கும் குரலில் கிழவி சோபனப் பாட்டு பாடுகிறாள்.

"பாட்டி, கதை சொல்லு பாட்டி......அன்னிக்கிச் சொன்னையே, அந்தக் கதை சொல்லு பாட்டி......நன்னா ...நான்தான் இப்படி மடிலே உட்காந்துப்பேனாம்." மறுபடியும் குழந்தை மடியில் ஏறி உட்கார்ந்து கொண்டது. ஆடி ஆடி அசைந்து கொண்டு கேட்கிறது.

"நாகாசூரன்னு ஒத்தனாம். அவன் பொல்லாதவனாம். அக்ரமம் செய்தானாம், எல்லாரையும் அடிச்சு, குத்தி, பாடு படுத்தினானாம்..."

"நான் 'படுத்துவேன்'பியே, அது மாதிரியா?"

"அடி கண்ணே, உம் மாதிரி யார் சமத்தாட்டம் படுத்துவா?" குழந்தையைத் தழுவி முத்தம் கொஞ்சுகிறாள். "அவன் பொல்லாதவன்...அவனைக் கிருஷ்ணன் வந்து அம்பாலே—வில்லாலே..."

"அம்புன்னா என்ன பாட்டி?"

"அம்புன்னா..."

"பாட்டீ! ஒரு பாட்டுச் சொல்லு பாட்டீ."

கிழவி பாடுகிறாள்.

"பார்க்குமிடத்தி லெல்லாம் நந்தலாலா—நின்றன்
பச்சைமுகம் தோன்றுதடா நந்தலாலா."

"பாட்டீ, நான் ஓடறேன் பிடிப்பையோ?"

"சமத்தாட்டம் ஓடு! பிடிக்கறேன்."

குழந்தை குதித்துக் கொண்டு வாசல் பக்கம் ஓடுகிறது. வெளியில் இருக்கும் இருள் திரையை நோக்கி ஓடுகிறது. கிழவியும் தள்ளாடிக் கொண்டு பின் தொடர்கிறாள்.

குழந்தையும் வாசலை நெருங்கி விட்டது.

வெளியே 'டபார்' என்று ஓர் யானை வெடிச் சப்தம்.

அவ்வளவுதான்!

உலகத்திற்குத் தீபாவளி ஆரம்பித்தது. பாட்டிக்கு...?

(1934)

★

# சொன்ன சொல்

நல்ல சிவம் பிள்ளையவர்கள் பூர்விகத்தில் மருதூர் வாசி; ஆனால் மருதூர் வாசம் எல்லாம் முந்திய ஜன்ம வாசனை போல அவ்வளவு நெருங்கிய சொந்தம் உள்ளது. ஏழு மாத கர்ப்பிணியாக அவரது தாயார் அவரைச் சுமந்து கொண்டு சுப்பையா பிள்ளையுடன் மருதூரை விட்டுப் புறப்படும் போது ஊரே கண்ணீர் வடித்தது என்று சொல்ல வேண்டும். வாழையடி வாழையாக நல்ல செயலி லிருந்த பண்ணையார் சுப்பு பிள்ளையின் குடும்பம் நொடித்து விட்டது. பண்ணையார் சுப்புபிள்ளை சொன்ன சொல் தவறாதவர் என்று பெயர் வாங்குவதற்கே தம் முடைய நண்பரும் காசுக்கடைப் பிள்ளையுமான உமை யொருபாகன் பிள்ளைக்குக் கொடுத்த வாக்கை நிறை வேற்றி வைப்பதற்காகப் பூர்விக நிலத்தை எல்லாம் விற்றார். அவருக்கு உதவினார். ஆனால் கடை முறிந்த போது சுப்பையா பிள்ளையின் குடும்பமும் முறிந்தது.

உமையொருபாகன் பிள்ளை ஆதியில் காசுக்கடை ஆரம்பிக்கும் போது பிள்ளையவர்களையும் பங்கெடுத்துக் கூட்டாளியாக வரும்படி கேட்டார். ஆனால் பிள்ளைய வர்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை. ''எனக்குப் பூமியைப் பார்த்துக் கொள்வதற்கே நேரம் போதமாட்டேன் என் கிறது. வியாபாரத்தில் ஈடுபடுவது என்றால் நிலம் மண் ணாகப் போய் விடும். நான் ஒன்று சொல்லுகிறேன். உனக்கு ஆபத்து வந்தால் எந்த நிமிஷமானாலும் என்னி டம் வா; கை கொடுக்கிறேன்!'' என்றார். அந்தக் காலத்

தில் அவர் அப்படிக் கையடித்திருக்கும் போது, தன்னை ஒரு விஷப் பரீட்சைக்கு ஆளாக்கிக் கொள்ளுகிறோம் என்று நினைத்தாரோ என்னவோ?

ஒருநாள் இரவு பதினோரு மணிக்கு மருதூரில் உமையொருபாகன் பிள்ளை இரட்டை மாட்டு வண்டியில் வந்திறங்கி, வாசலில் நார்க் கட்டிலில் படுத்திருந்த சுப்பையா பிள்ளையவர்களின் காலைக் கட்டிக் கொண்ட பொழுது சத்திய சந்தனாகி விடுவது என்று உறுதியாக நினைத்தார். உமையொருபாகன் பிள்ளை கேட்ட தொகை திடீரென்று சேகரிக்கக் கூடியதுமல்ல, சேகரித்துக் கொடுத்தாலும் அவரது நிலையையேசற்று ஆட்டி வைக்கக் கூடியது. பேசாமல் உள்ளே சென்று பெட்டியைத் திறந்து பார்த்தார். வீட்டில் ரொக்கமாக ரூபாய் இரண்டாயிரம் தானிருந்தது. ''ஏளா, அங்கே, என்ன செய்யுறே?'' என்று மனைவியைக் கூப்பிட்டுக் கைவசமுள்ள நகைகளை எடுத்துக் கொடுக்கும்படி கேட்டார். கணவருடைய வேண்டுகோள் விபரீதமாகப் பட்டது. கர்ப்பிணி; அந்தச் சமயத்தில் நிதானித்துப் பேசுவதற்கு இயலுமா? யார்தான் சாதாரணக் காலத்தில்கூடத் தம்முடைய கணவரின் நண்பருக்காகக் கழுத்து நகையைக் கழற்றிக் கொடுக்கச் சம்மதிப்பார்கள்? அவள் முடியாது என்றதும், நண்பனது கஷ்டத்தைத் தீர்த்து வைப்பது தமது கடமைகளில் ஒன்று என்று நினைத்து, நிலத்தை அடமானம் வைக்க முற்பட்டார். இரண்டொரு புள்ளிகள் விற்பனை என்றால் சம்மதிப்பதாகச் சொன்னார்கள். இன்னும் இரண்டொரு நண்பர்களிடம் கைமாற்றாக வாங்கிய தொகை ரூபாய் ஐயாயிரம் போக மீதிக்கு நிலத்தை விற்றுக் கொடுப்பது என்று தீர்மானித்தார். சுப்பையாபிள்ளை இவ்வளவு அக்கறை காட்டுகிறதைப் பார்த்தால் இதில் ஏதோ சூதிருக்கிறது என்று சிலர் சந்தேகித்தார்கள்.

மறுநாளைக்குப் பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்து கொள்ளச் சம்மதிப்பதாக பணம் கொடுக்கிறவரை இணங்க வைப்பதற்காக நிலத்தையும் அதற்கு இசைந்தாற்போல் ஏராளமாக தியாஜியம் செய்ய வேண்டியிருந்தது. உமையொருபாகன் பிள்ளை கையில் ஏழாயிரத்துடன் டவுனுக்கு ஏகினார். மறுநாள் விற்பனைப் பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்து தொகையுடன் சுப்பையா பிள்ளையவர்கள் டவுனுக்குச் சென்றார். உமையொருபாகன் பிள்ளையையும் தொகையையும் கடைசியாகப் பார்த்தது அப்பொழுதுதான்.

மூன்று நாட்கள் கழித்து உமையொருபாகன் பிள்ளை வைரத்தைப் பொடித்துத் தின்று மாண்டு போனார். கடை முறிந்தது; ரூபாய்க்கு அரையணாக்கூடத் தேறாது எனச் செய்தி வந்தது.

மாலை ஐந்து மணி இருக்கும். டவுனுக்குக் காரியமாகச் சென்றிருந்த வேலாயுதம் பிள்ளை வேகுவேகென்று ஓடி வந்து தகவலைச் சொன்னார்.

பிள்ளையவர்கள் ஒன்றும் பேசவில்லை. வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். புகையிலையை எடுத்துச் சாவதானமாகப் போட்டுக் கொண்டு, "இருங்க தம்பி, வர்றேன்!" என்று சொல்லிவிட்டுப் போனார்.

வருவதற்கு சற்று தாமதித்தது. வந்ததும் துண்டை உதறித் திண்ணையில் போட்டு விட்டு, சாவதானமாக உட்கார்ந்தார்.

மடியிலிருந்த வைர நகைகள் சிலவற்றை எடுத்து மௌனமாக வேலாயுதம் பிள்ளையிடம் கொடுத்தார்.

"வேலையா, வண்டியைப் போடச் சொல்லுகிறேன். நேரே ஸ்ரீவைகுண்டத்துக்குப் போயி நம்ப சிதம்பர ஐயர் கடையிலே இதை விற்றுத் தொகையைக் கொண்டுவா.

நானும் ஒரு துண்டு எழுதித்தாரேன். காதோடு காதாக இருக்க வேண்டும். நான் இங்கேயே உறங்காமல் உட்கார்ந்திருப்பேன்; என்ன சொல்லுறே?'' என்றார்.

''இது என்னத்துக்கு அண்ணாச்சி; நம்ம ஊர்லெ தானே; மின்னெப் பின்னே சொல்லிக்கிட்டாப் போகுது'' என்றார்.

''தம்பி, பண விஷயம்; வாக்குத்தான் சொத்து!'' என்றார்.

வேலாயுதம் பிள்ளை திரும்ப வரும்போது இரவு மணி இரண்டு. இருவருமாகச் சென்று முந்திய நாட்களில் கடன் வாங்கிய புள்ளிகளிடம் சென்று வீட்டுக் கதவைத் தட்டிக் கொடுத்தார்கள்.

''பிள்ளைவாள், விடிஞ்சா என்ன, பூனையாகொண்டு போயிடுது? என்னத்துக்கு இந்த அவசரம்?'' என்றார்கள். அவர்களுக்கு உமையொருபாகன் பிள்ளை செல்லாகிப் போன கதை தெரியாது.

''மனிதன் வாழ்வு என்ன நிச்சயம்?'' என்றார் சுப்பையா பிள்ளை.

''எத்தினி நாளாக ஐயா, இந்த வேதாந்தம்? காலையிலே காஷாயமோ?'' என்று கேலி செய்தார்கள்.

''ஒரு வேளை கயிலாசமோ?'' என்றார் பிள்ளை.

இருவரும் திரும்பினார்கள்.

பிள்ளையவர்கள் நார்க் கட்டிலில் படுத்துக் கொண்டார்.

''வேலய்யா, வீட்டுக்குப் போகலியா?'' என்றார்.

"இனி யெங்கே? நடுச் சாமத்திலே ஏன் போய்த் தட்டி எழுப்பணும்? இங்கே திண்ணையில் சாய்ந்தால் போகிறது!'' என்றார் வேலாயுதம் பிள்ளை.

"நீ ரொம்பக் கெட்டிக்காரன்தான்டா! நான் இப்படி அப்படிச் சாக மாட்டேன்; நாளைக்கு டவுனுக்குப்போனாத் தேவலை'' என்றார்.

மறுநாள் காலை அனுதாபம் கேட்க வருவதுபோல மிச்ச நிலமும் விலைக்கு வருமா என நோட்டம் பார்க்க வந்தவர்கள் சுப்பையா பிள்ளையைப் பார்க்க முடியவில்லை.

அவர் டவுனுக்குச் சென்று திரும்புவதற்கு மூன்று நாட்களாயின.

(1941)

★

# கயிற்றரவு

'கள்ளிப் பட்டியானால் என்ன? நாகரிக விலாசமிட்டுத் தொங்கும் கைலாசபுரம் ஆனால் என்ன? கங்கையின் வெள்ளம் போல, காலம் என்ற ஜீவநதி இடை விடாமல் ஓடிக்கொண்டிருக்கிறது...ஓடிக்கொண்டேயிருக்கும். தயிர்க் காரி சுவரில் புள்ளி போடுகிற மாதிரி, நாமாகக் கற்பனை பண்ணிச் சொல்லிக் கொள்ளும் ஞாயிறு, திங்கள், செவ்வாய்க்கிழமைகள் எல்லாம் அடிப்படையில் ஒன்று தானே? பிளவு—பின்னம் விழாமல் இழுக்கப்பட்டு வரும் ஒரே கம்பி இழையின் தன்மைதானே பெற்றிருக்கின்றது. இல்லை—இல்லை, சிலந்திப் பூச்சி தனது வயிற்றிலிருந்து விடும் இழை போல நீண்டு கொண்டே வருகிறது. இன்று—நேற்று—நாளை என்பது எல்லாம் நம்மை ஓர் ஆதார எண்ணாக வைத்துக்கொண்டு கட்டி வைத்துப் பேசிக் கொள்ளும் சவுகரியக் கற்பனைதானே? நான் என்ற ஒரு கருத்து, அதனடியாகப் பிறந்த நானல்லாத பல என்ற பேத உணர்ச்சி, எனக்கு முன், எனக்குப் பின், என்று நாமாக வக்கணையிட்டுப் போட்டுக் கொண்ட வரிகள்...... இவை எல்லாம் எத்தனை தூரம் நிலைத்து நிற்கும்...நான் என நினைத்த, நினைக்கும், நினைக்கப் போகும் பல தனித் துளிகளின் கோவை செய்த நினைப்புத்தானே இந்த நாகரிகம்...கூட்டு வாழ்வு என்ற வாசனையை யொட்டி, மனசு இழைத்து இழைத்துக் காட்டும் மணற் சிற்றில் தானே இந்த நாகரிகம்...மகா காலம் என்ற சிலந்தியின் அடி வயிற்றிலிருந்து பிறக்கும் ஜீவநதியின் ஓரத்தில் கட்டி வைத்த மணற் சிற்றில்...என்ன அழகான கற்பனை!'

என்று உச்சிப் போதில் பனை மூட்டினடியில் குந்தி உட்கார்ந்திருந்த பரமசிவம் பிள்ளை நினைக்கலானார்.

துவர்த்து முண்டில் அவர் கட்டியிருந்த ஒற்றைப் பிரிமுண்டாசுக்குத் தப்பிய சிகைத் தலையில் வெயில் தாக்கியது. குனிந்து குந்தியிருந்த பனை நிழல் வாக்கில் வெயில் சற்றுப் படாதபடி ஒரு பக்கமாக நகர்ந்தார். முள்ளும் முனையுமாக நின்ற ஊவாஞ்செடி, கருவேலங் கன்று பெருந்துடையில் குத்தியது. மறுபுறமாக விலகிக் கொண்டார். குனிந்து கவனித்துக் கொண்டிருந்தவருக்கு நினைவு பிரபஞ்ச யாத்திரை செய்ததென்றாலும், மலத்தில் மாண்ட குடல் புழு கண்ணில் விழுந்தது. 'மலப் பிறவி...பல ஜன்மம் பல மரணம், சீச்சி...' மனம் குமட்ட வேறு ஒரு பனை மூட்டினடியில் போய் அமர்ந்தார். அது விடலிப் பனை. சற்றுத் தாழ்வாக இருந்ததனால் நிழலும் சுமாராக இருந்தது. முள் குத்தலும் இல்லை. ஆனால் சரல் குத்தியது.

மனமோ 'பிறவா நெறி' காட்டாமல் மீண்டும் மீண்டும் மலப் புழு மாதிரி உடற் கூறின் விளைவாக எழுந்த அவசங்களின் பால் விழுந்து குமைந்தது.

'மனம் என்ற ஒன்று உடம்பை விட்டுத் தனியாக, அதன் அவசியம் இல்லாமலே இயங்கக் கூடிய ஒன்றா அல்லது நாதத்துக்கு வீணை என்ற சாதனம் அவசியமாக இருப்பது போலத்தானா......நான் பிறப்பதற்கு முன்...... என்னைப் பற்றி எனக்குப் பிரக்ஞையுண்டோ? என்னைப் பற்றி, இப்பொழுது என்னைப் பற்றியுள்ள சூழ்நிலைக்குத் தான் பிரக்ஞையுண்டா?

'இந்தப் பனை, இந்தப் பனை விடலியெல்லாம் என் பிரக்ஞைக்குள் பட்டது. இது முளைத்தது எனக்குத் தெரியும்; இது முளைப்பதற்கு முன் இந்தக் கட்டாந்தரை,

இந்த நிழல்கூட அற்று இருந்தது தெரியும். முந்திய ஆடிக் காற்றில் விழுந்ததே அந்தப் பனை, அது எங்கு நின்றது என்று கூட நிதானிக்க முடியாமல் வரட்டுக் கட்டாந்தரையாகத்தானே கிடக்கிறது...நான் பிறப்பதற்கு முன்பு...பரமசிவம்பிள்ளை என்ற ஒருவன் விருப்பு வெறுப்பு, ஆசை, துயரம், கவலை, பொறுப்பு முதலியவற்றுடன் கூடிய ஒரு ஐந்து, வாழையடி வாழையாக வரும் விளையாட்டின் வித்தைகளை வாலாயமாக கற்று, அதற்கு இசைந்தோ இசையாமலோ விளையாடி...பிறகு பரமசிவம் என்ற பெயர் மட்டும் போகுமிடத்துக்கு வழி வைத்துவிட்டு, வந்த வழியைப் பார்த்துக் கொண்டோ, அல்லது புது வழியிலோ, போய் விடும் ஒரு தோற்றம்... ஒரு பொம்மலாட்டம்! பொம்மலாட்டம் என்று எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்? சூத்திரக் கயிறு இழுக்கிறதா, அல்லது சூத்திரதாரன் உண்டா? நிச்சயமாக எப்படி இருக்கிறது அல்லது இல்லையென்று இரண்டில் ஒன்று சொல்லிவிட முடியும்?... வருகிற வாசல், போகிற திசை இரண்டுந்தான் தெரிகிறது. வருகிறது ஒரு யோனித் துவாரம்...பிரகிருதி என்ற அன்னையிடந்தானா? அல்லது கருவூரிலிருந்து கருவூருக்குச் செல்லும் பாதைதான் மனித வாழ்வா? முடிவில்லா வித்தையா? முறையில்லாத் தந்திரமா?...'

கைலாசபுரத்து ஆற்றங்கரைப் பனை மூட்டடியிலே உட்கார்ந்த பரமசிவம் பிள்ளையின் மனம் 'தான்' இல்லாத ஒரு காலத்தைச் சற்று சிரமத்துடன் கற்பனை பண்ணத் தொடங்கியது.

## 1

சுமார் அரை நூற்றாண்டுக்கு முன் கைலாசபுரத்திலும் சூரியோதயம், சூரியாஸ்தமனம் தெரிந்துகொண்டு

தானிருந்தது. அப்பொழுது ஆற்றங்கரைக்கு வரும் பாதையில் அத்தனைக் காரைக் கட்டிடங்கள் கிடையாது. புழுதி கிடையாது. சுகமாக மருத மரநிழல் உண்டு; மாடு படுத்திருக்கும். மனித நாகரிகமே அந்தப் பிராந்தியத்தில் அப்பொழுது உட்கார்ந்து அசை போட்டுக் கொண்டிருந்த மாதிரிதான் தென்பட்டது; ஆனால் இயக்கம் இருந்து கொண்டுதானிருந்தது. ஞாயிற்றுக் கிழமை மடிந்து திங்கட் கிழமை பிறக்கிறது எந்த வினாடிக்குள் என்று யாருக்காவது நிர்த்தாரணமாகச் சொல்ல முடியுமா? நாமாக முடுக்கி விட்ட கெடிகாரம் சொல்லுவதும், நாம் சொல்லுவதும் ஒன்றுதான். ஞாயிற்றுக் கிழமையாகவே இருந்து கொண்டு வந்தது, திங்கட் கிழமை என்று நாம் சொல்லும் படியாகி விட்ட ஒரு தன்மை போல், நாகரிகம் அங்கே உட்கார்ந்து அசை போட்டுக் கொண்டிருப்பது போலத் தென்பட்டதும் ஒரு தோற்றந்தான். அது அப்படியே உட்கார்ந்து கொண்டே இருந்தால், இப்பொழுது காரைக் கட்டிடங்கள் எப்படி முளைத்திருக்கும்? மருத மரத்து நிழல் இன்னும் இருந்து கொண்டிருக்குமே! அப்பொழுது காற்றடித்தது; மழைபெய்தது; நதியில் வெள்ளம் வந்தது. பனை மரங்கள் சாய்ந்தன. விறகாயின...விட்டமாயின. விடலிகள் முளைத்தன. சூரியாஸ்மனம்...சூரியோதயம்... ஆற்றங்கரைப் படிக்கல்லில் அழகிய நம்பியா பிள்ளை வேட்டி துவைப்பார்...உட்கார்ந்திருந்து அழுக்குத் தேய்ப்பார். ஆற்றில் மூழ்கிக் குளிப்பார். நின்று திருநீறு அணிவார். அனுஷ்டானாதிகள் செய்வார். படிமீது மருத மர நிழல்கள் கவிந்திருக்கும். ஆனால் இப்போது படிக்கல் சரிந்து விட்டது. பாதை உண்டு. மணலிலும் தெற்றுக் குத்தாக நிற்கும் படிகளை மறைத்தும் தண்ணீர் ஓடும். இப்பொழுது மருத மரம் இல்லை, வெயில் உண்டு; கல் வழுக்கும்,

அன்று ஐம்பது வருஷங்களுக்கு முன்னால் கருவூரிலே வீரிய வெள்ளம் பிரவகித்தது. அதிலே விளைந்த அனந்த கோடி பீஜங்களிலே ஒன்று நிலைத்தது. அனந்த ஜீவ அணுக்களிலே அதற்கு மட்டும் அதிர்ஷ்டம் என்பதா? அல்லது நிலைக்க வேண்டும் என்ற பூரண பிரக்ஞை யுடன் அது நிலைத்ததா? எப்படியானாலும் இந்த அணு இல்லாவிட்டால் இன்னொன்று நிலைத்தது; ஒன்றியது; உருவம் பெற்றது; உணர்வு பெற்றது. மீனாயிற்று. தவளை யாயிற்று. வாலிழந்தது. குரங்காயிற்று. சமாதி நிலையிலே உறங்கலாயிற்று. சிசுவாகி, கைக் கட்டைவிரல்களை உள்ளங்கையில் மடக்கி விரல்களைக் கொண்டு மூடிக் குண்டுக் கட்டாகக் காத்திருந்தது......

கைலாசபுரத்திலே மரங்கள் மொக்கு விட்டன. பூ மலர்ந்தது. தேன் வண்டுகள் வரத்துப் போக்கு வைத்துக் கொண்டன. மரமும் சூலுற்றது...பிஞ்சுற்றது...

கருவூருக்கு வடக்கே உதரபுரியிலேயிருந்து ஹுங் காரம் போன்ற அலறல் பிறந்தது. வேதனையிலே குரல் பிறந்தது. கைக்கட்டை விரல்களை உள்மடக்கிப் பிடித்துக் கொண்டு தலை குப்புற வந்து விழுந்தது ஒரு பிண்டம்—ஒரு ஜன்மம். பிரக்ஞை வந்தது. காட்டு மலம் போயிற்று... ஜன்மம் வீறிட்டது. கைகளையும், கால்களையும் சுண்டி உதறிக் கொண்டு அழுதது. கருவூர்க் கயிற்றைக் கத்தரித்து விட்டார்கள். தனி ஜன்மமாயிற்று. தனித்தன்மை பெற்றது. முலை சுவைத்தது......... உறங்கியது......... அழுதது......... முலை சுவைத்தது.........

கைலாசபுரத்திலே மரங்கள் காய்த்தன. கொத்துக் கொத்தாக, பச்சை பச்சையாகக் காய்த்துத் தொங்கின. மரத்தையே தரையில் இழுத்துக் கிடத்தி விடும் போலிருந் தது அந்த வருஷத்துக் காய்ப்பு.

# 2

நிலவொளியிலே நிலா முற்றத்திலே அழகிய நம்பியா பிள்ளை குழந்தை யொன்றை வைத்துக் கொஞ்சுகிறார். குழந்தை கொஞ்சுகிறது.

"அப்பா யாரு?" என்று கேட்கிறார் அழகிய நம்பியா பிள்ளை.

குழந்தை தனது நெஞ்சைத் தட்டிக் காட்டியது.

"முட்டாப் பயலே! நான்தான்டா அப்பா! நீ பரமசிவம்...பரமசிவம் பிள்ளை!" என்றார் அழகிய நம்பியா பிள்ளை.

"அப்பா யாரு?" என்றார் அழகிய நம்பியா பிள்ளை.

குழந்தை அவரது நெஞ்சைத் தொட்டுக் காட்டியது.

"பரமசிவம் யாரு?" என்று கேட்டார் அழகிய நம்பியா பிள்ளை.

"நான்!" எனத் தனது நெஞ்சைத் தட்டிக் கொண்டது குழந்தை.

"போடு பக்காளி போடு! பத்துப் பக்காளி போடு!" எனக் குழந்தையை மெய்ம்மறந்து குதூகலத்தில் பந்து போல் தூக்கிப் போட்டு விளையாடினார்.

குழந்தையும் பரமசிவமாகி நான்—நீ—அவன் என்ற பேதாபேதம் பிரக்ஞையுடன் வாழையடி வாழையாக இருந்துவரும் விளையாட்டைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தது. அம்மா—அப்பா—தெரு—ஊர் எனப் பரிசய விலாசம் படிப்படியாக வளர்ந்தது. வாத்தியார், பிரம்படி, பிறகு கல்வி, சில்லறை அறிவு, பிரம்புக் கொட்டியிலும் மற்றப்படி இனிக்கின்ற, அவசியமான பிரியமான ஞானச் சரக்குகளை வேற்று அங்காடிகளிலும் பரமசிவம் பெற்றார். சீனி இனிக்கும்—நெருப்பு சுடும்—அப்பா கோபிப்பார்—கடவுள் மன்னிக்க மாட்டார் என்ற நேர்

அனுபவ, அனுபவ சூன்யக் கருத்துக்கள் எல்லாம் நான், என்னுடைய என்ற அ'டித்தளம் இட்ட ஒரு மனையில் சுவர் எழுப்பிக் கட்டிடம் அமைக்க ஆரம்பித்தது. பள்ளிக் கூடம்——பரமசிவம் அடி—உதை—பலம் பலீன் சடுகுடு முதலிய பாதைகளில் செல்ல, கிழமைகள் என்ற கால அமைதி தாராளமாக வசதி செய்து கொடுத்தது.

அழகிய நம்பியா பிள்ளையின் வேலைகளை மேற் கொள்ளும் கட்டம் வந்தது. பரமசிவம், பரமசிவம் பிள்ளை யானார். உடல் வாட்ட சாட்டமாக அமைந்தது. உடம்பில் வலு, நெஞ்சில் உரம். மனசில் நம்பிக்கை, தைரியம், வீட்டிலே சமைத்துப் போட...பிறகு வம்ச விருத்திக் களமாக்கிக் கொள்ள ஒரு யுவதி...உச்சுவாச...நிச் சுவாசத்தைவிட என்ன சுகம்...போகம்...உடலில் உள்ள வலு வீர்யமாகப் பெருக்கெடுத்து ஜீவ தாதுக்களை அள்ளி விசிறியது. இப்பொழுது கிழமைக்கும் வாரத்துக்கும் மாதத் துக்கும் ஓடும் வேகந்தான் என்ன! கஷ்டம்—வருத்தம்— கசப்பு—ஏமாற்றம்—கடன் வாங்கி அதற்குள் ஐந்து வருஷங்களா?...என்ன ஓட்டமாக ஓடுகிறது. மணல் கூண்டு சரிகையில் கடைசி மணல் பொடி விரைந்து ஓடி வருவது மாதிரி என்ன வேகம்!...நிஜமாக, திங்களும் செவ்வாய்களும் இப்போதுதான் இவ்வளவு வேகமாக ஓடு கின்றனவா?...அல்லது நான்தான் ஓடுகிறேனா?...நான் யார்?...இந்த உடம்பா?...தூங்கும் போது, பிறக்கு முன் இந்த நான் எங்கிருந்தது?...இந்த நான்தான் ஓடுகிறதா? ...நாள்தான் ஓடுகிறதா? பெட்டியடிக் கணக்கு இடுப் பொடிக்கும் உழைப்பு...குனிந்து குனிந்து இன்னொருவன் பண மூட்டைக்குத் தலையை அண்டை கொடுத்துக் கழுத்தே சுளுக்கிக் கொண்டதே! முதுகிலே கூன் விழுந்து விட்டது. பிறனுக்கு நலம் பார்த்து நாலு காசு சேர்த்து வைத்துக் கண்ணிலும் வெள்ளெழுத்து. வீட்டிலே பூனை

படுத்திருக்கும்...பொய்ம்மை நடமாடும்...வறுமையும் ஆங்கே பெற்றெடுத்த பிள்ளையுடன் வட்டமிட்டுக் கை கோத்து விளையாடும். மனையாளுக்குக் கண்ணிலே இருந்த அழகு—ஆளைத் தூண்டிலிட்டு இழுக்கும் அந்த அழகு எங்கே போயிற்று? கையில் ஏன் இந்த வரட்சி? வயலோ ஒத்தி. வீடோ படிப்படியாக மூலப் பிரகிருதியோடு லயமாகிவிட யோக சாதனம் செய்கிறது. விட்டமற்றுப் போனால் வீடும் வெளியாகும்...அப்பொழுது அழகிய நம்பியா பிள்ளை எங்கே? அவர் மகன் பரமசிவம் எங்கே?... எல்லாம் பரம ஒடுக்கத்திலே மறைந்துவிடும். எத்தனை துன்பம்...எத்தனை நம்பிக்கைக்காக எத்தனை ஏமாற்று...எத்தனை கடவுள்கள்......வாய்க்கு ருசி கொடுக்க ஒரு கடவுள்...வயலுக்கு நீர் பாய்ச்ச ஒரு கடவுள்...வியாச்சியம் ஜயிக்க, சோசியம் பலிக்க, அப்புறம் நீடித்து, நிசமாக உண்மையில் பக்தியாய்க் கும்பிட எத்தனையடா எத்தனை?...நான் தோன்றியபின் எனக்கு என்று எத்தனை கடவுள்கள் தோன்றினார்கள்! எனக்கே இத்தனை யென்றால் என்னைப் போன்ற அனந்த கோடி உயிர்—உடம்புகள் கொண்ட ஜீவநதியில் எத்தனை! ஆற்று மணலைக்கூட எண்ணி விடலாம். இந்தக் கடவுளர்களை—? ஒருவன் பிறந்தால் அவனுடன் எத்தனை கடவுளர்கள் பிறக்கிறார்கள்! அவனுடன் அவர்கள் மடிந்து விடுவார்களா?...'நான்' மடிந்து விடுகிறதா?... அப்பொழுது ஒரு வேளை அவர்களும் இந்த நானோடு போய்விடக் கூடும். இந்த நானையும் மீறித் தங்கி விடுகிற கடவுளர்களும் உண்டு. அவர்கள்தான் மனம் என்ற ஒன்று கால வெள்ளத்துக்கு அருகே அண்டி விளையாடும் மணல் வீட்டைப் பந்தப்படுத்த முயலும் சல்லி வேர்கள்—பரமசிவம், பரமசிவம்! உனக்கு ஏதுக்கடா இந்தச் சள்ளை! அதோ காலடியில் பாம்புடா, பாம்பு...

கயிற்றரவு!

# 3

காலம் ஒரு கயிற்றரவு!

பரமசிவம் பிள்ளையைக் கட்டிலிலிருந்து எடுத்துத் தரையில் கிடத்தி விட்டார்கள். பாம்பு கடித்தால் பிழைக்க முடியுமா? போகிற வழிக்குப் புண்ணியம் சேர்க்கத் தலை மாட்டில் உட்கார்ந்து யாரோ தேவாரம் படித்தார்கள். பரமசிவம் பிள்ளை ஏறிட்டுப் பாரத்துச் சிரமத்துடன், 'தூரத்தில் இருந்து படித்தால் கேட்பதற்குச் சுகமாக இருக்கும். பக்கத்திலிருந்தால் காதில் வண்டு குடைகிற மாதிரி தொந்தரவாக இருக்கிறது!' என்றார்...

கண்ணை முழுவதும் திறக்காமலும் முழுவதும் மூடாமலும் அரைக் கண் போட்டபடி உலகைப் பார்ப்பதிலே அவருக்கு ஓர் ஆனந்தம் இருந்தது. நிம்மதி இருக்கிறது. தூரத்திலே தேவாரம் தண்ணீரடியில் முங்கி உட்கார்ந்திருக்கும்போது கேட்கும் தூரத்து ரீங்காரம் மாதிரி சுகமாக இருக்கிறது. அதோ தெரிகிறது என் புஸ்தகம்... என்னுடைய கால் கட்டை விரல்தான்...இனி எத்தனை நேரம் எனக்கு இது தெரிந்துகொண்டிருக்கும்...ஸ்மரணையில் கால் இருக்கிற மாதிரி தெரியவில்லையே. கண்ணுக்குத் தெரிந்தால் மட்டும் போதுமா? ஸ்மரணைக்குப் புலனாக வேண்டாமா? கால் கட்டை விரல் ரொம்ப தூரத்திலிருக்கிறதோ...இரண்டு மைல் தூரத்தில்! சீ, எட்டு மைலாவது இருக்க வேண்டும்...அதோ அந்தப் புஸ்தகம்...இப்பொழுது அதுவும் தூரத்தில் தெரிகிறதே... ...அதில் என்ன எழுதி வைத்திருந்தேன்—...கணக்கா... சுவடியா...அழகிய நம்பியைக் கூப்பிட்டுக் கேட்க வேண்டும். எது இருந்தால்தான் என்ன? நாம் செத்துப்

போனால் இந்தக் கால் கட்டை விரல் சாம்பலாகத்தானே... அது எவ்வளவு நேரம் எனக்குத் தெரியப் போகிறதோ... கொஞ்சம் நிம்மதியாகப் பார்த்துக் கொண்டே இருப்போமா...அதுவும் சுகமாகத்தானிருக்கிறது...உறக்கம் வருகிறதோ...அசதியாக வருகிறதே...நிம்மதியாகக் கண்ணை மூடினால்...அப்பா! என்ன சுகம்...மூச்சு நின்றது...கைக் கட்டை விரல்கள் உள் வாங்கின...காட்டு மலம் வந்தது... நான் சுழன்றது...ஸ்மரணை சுழன்றது...உயிர்—ஆமாம்; உயிரும்அகன்றது...அன்று கருவூரிலே உருவற்று நிலைத்த பிண்டம் இன்று உருவுடன் வதங்கிக் கிடந்தது.

சுழி

சாம்பல் காற்றோடு போச்சு; பெயர் பெயரோடு போச்சு...மனித மனம் இம்மாதிரி அனந்த கோடி கூடுகளைக் கட்டிக் கட்டி விளையாடியது...கைலாசபுரத்து மருத மரம் நிழல் கொடுத்தது. மரம் பூத்துக் காய்த்தது. பழுத்தது...ஆற்றில் தண்ணீர். தண்ணீர் மணலிலும் படியிலும் தவழ்ந்து ஓடியது. கள்ளிப்பட்டியானால் என்ன, கைலாசபுரமானால் என்ன?—காலவெள்ளம் தேக்கற்று ஓடிக்கொண்டே இருந்தது...அதிலே வரையில்லை...வரம்பில்லை...கோடு கூடத் தெரியவில்லை...கருவூரிலானாலென்ன? காட்டூரிலானாலென்ன? ச மா தி யோ... பிரக்ஞையோ? எதுவானாலென்ன?......

நான் ஓடினால் காலம் ஓடும். நான் அற்றால் காலம் அற்றுப் போகும். காலம் ஓடுகிறதா? ஞாயிறு—திங்கள்—செவ்வாய்—நான் இருக்கும் வரைதான் காலமும். அது அற்றுப் போனால் காலமும் அற்றுப் போகும். வெறும் கயிற்றரவு!

பரமசிவம் பிள்ளை எங்கே?

(1945)

★

# 'பூசணிக்காய்' அம்பி

எந்தப் பெற்றோராவது தன் குழந்தைக்கு இப் பெயரைத் துணிந்து வைத்திருப்பார்கள் என்று நான் கூற வரவில்லை. அது நான் கொஞ்ச காலத்திற்கு முன்பு அறிந்திருந்த சிறு பையனின் பட்டப் பெயர் என்றுதான் எனக்குத் தெரியும். அவனைப் 'பூசணிக்காய் அம்பி' என்றுதானே எல்லோரும் கூப்பிடுவார்கள். அவனுக்கு வேறு பெயர் இருந்ததாக எனக்கு ஞாபகம் இல்லை.

இந்தப் பெயர் எப்படி வந்திருக்கலாம் என்று எங்களூர் ஆராய்ச்சியாளர்கள் மிகவும் சிரமப் பட்டிருக்கிறார்கள். அம்பியின் தலை வழுக்கை. அதன் மேல் பொன்னிறமான பூனை மயிர். பூசணிக்காயின் வர்ணத்தைப் பெற்றிருப்பதனால் அந்தப் பெயரை அவனுக்குக் கொடுத்திருப்பார்கள் என்று ஒரு கட்சியினர் வாதாடினார்கள். இதற்கு நேர் மாறாக, அம்பிக்குப் பூசணிக்காயின் மீதிருந்த அபாரப் பிரேமையினால் அப்பெயர் வந்திருக்கலாம் என்று உறுதியாகக் கூறியது மற்றொரு கட்சி. இதற்கு இடையில் கொஞ்சம் கவிதைக் கிறுக்கும் பிடித்த ஒரு கோஷ்டி, அவன், பூசணி காய்க்கும் காலத்தில் பிறந்ததினால், அப்பெயர் இடப் பட்டிருக் கலாம் என்று 'அறை'ந்தார்கள். இம் முக்கட்சியினரின் வாதப் பிரதிவாதங்கள் ஒரு முடிவிற்கும் வந்து சேராததி னால் அதில் நாமும் சிக்கிக் கொள்ளாமல் ஊர்ப் பிள்ளை கள் மாதிரி அவனைப் 'பூசணிக்காய்' அம்பி என்று மட்டும் கூறி மகிழ்வோம்.

அம்பியின் ராஜ்யம் என் வீட்டுப் பக்கத்திலுள்ள ஒரு வளைவு. திருநெல்வேலிப் பக்கத்தில் வளைவு என்பது பத்துப் பதினைந்து வீடுகள் சூழ்ந்த ஒரு வான வெளி; இப்படிப் பல வளைவுள் சேர்ந்ததுதான் ஒரு தெரு, அல்லது ஒரு சந்து. மாவடியா பிள்ளை வளைவு என்றால் அழுக்கு, இடிந்த வீடு, குசேல வம்சம் என்பவற்றின் உவமானம். அந்த வளைவில்தான் எனது பூசணிக்காய் அம்பி தனியரசு செலுத்தி வந்தான். மாவடியா பிள்ளை வளைவு, கட்டிட வேலைக்குப் பெயர் போனதல்ல. பூசணிக்காய் அம்பியைத் தவிர அந்த வளைவில் ஒரு அபூர்வமும் கிடையாது. வருங்காலத்தில் அதிக நம்பிக்கை வைக்கும் சூதாடிக்குக்கூட அம்பியை விட வேறு ஒன்றைப் புதிதாகப் பார்த்து விடலாம் என்ற நம்பிக்கை வராது. அந்த வளைவின் நடு மத்தியில் ஒரு கிணறு. அங்கு பகலில் வண்ணானைக் கூடத் தோற்கடிக்கும் வெளுப்பு வேலை நடக்கும். அவற்றை எல்லாம் காயப் போடும் ஒரு கம்பிக் கொடி. இந்தக் கம்பிக் கொடி அம்பியின் முக்கியமான துணைக் கருவியாகையால் அதைப்பற்றி அவசியம் கூற வேண்டியதாகி விட்டது.

எனது வீட்டுச் சன்னல் அந்த வளைவை நோக்கியிருந்தது; எனது படிப்பு, படுப்பு, அம்பியின் திருவிளையாடல்களைப் பார்த்தல், எல்லாம் அச் சன்னல் வழியாகத்தான்.

அம்பிக்கு ஏழு வயதிருக்கும்; ஆனால் முகத்தைப் பார்த்தால் பத்து அல்லது பன்னிரண்டு வயதிற்கு மதிக்கலாம். அவன் உயரம் இன்னதுதான் என்று திட்டமாகக் கூற முடியாது. ஏனென்றால் அவன்மீது பெரிய மனிதனது கிழிந்த ஷர்ட் ஒன்று அலங்கரித்து நிற்கும். அதற்குள் சிறு துண்டு ஒன்று கட்டியிருப்பான் என்பது பலருடைய உத்தேசம். இம்மாதிரியான ‘சாமியார்’ அங்கி போன்ற

சட்டைக்குள் இருந்துகொண்டே அவன் தனது திருவிளை யாடல்களை நடத்தி விடுவான். 'அந்தர்' அடிப்பது முதலிய சிறு வேலைகள் எல்லாவற்றிலும் அவனுக்குத் தான் வெற்றி. அவனது சட்டை எப்பொழுதாவது அவனைத் தடுக்கி விட்டிருக்கிறதா என்றால் அது சரித் திரத்திற்குத் தெரியாத விஷயம். பகலில் எந்தச் சமயத்தி லும் கம்பியில் 'பூசணிக்காய்' தலை கீழாகத் தொங்கிக் கொண்டிருப்பது சாதாரணமான காட்சி. அவன் ஏறாத கூரை கிடையாது; அவன் தாண்டாத சுவர் கிடையாது. பூசணிக்காய் அம்பிக்கு அப்பக்கத்திலுள்ள சுவர்களின் உயரம், தொத்தி ஏறும் வசதி முதலிய விஷயங்கள் தண்ணீர் பட்ட பாடு. அந்தச் சந்தில் இருக்கும் முனிசிபல் தகரத்தை அடித்து 'லொடபட'வென்று உருட்டிச்செல்வது தான் அவனது அமைதியான விளையாட்டு.

'பூசணிக்காய்' அம்பிக்கு அவ்வளவாக நண்பர்கள் கிடையாது. சில சமயம் அவனது சினேகிதர்கள் அவனைப் பேட்டி காண வருவார்கள்; அவர்கள் வரும்பொழுது எல்லாம் கல்லும் மண்ணாங்கட்டியும் ஆகாய மார்க்கமாகப் பறப்பதுதான், அவர்களது 'சிநேக' பாவத்தை எடுத்துக் காட்டும். கடைசியாக, பெருத்த கூக்குரலுடன் அவர்கள் வளையை விட்டு ஓடுவதுதான் 'பூசணிக்காய்' அம்பியின் வெற்றி. இது எப்பொழுதும் தவறாது நடக்கும் இயற்கை.

பாரதியார், "தனிமை கண்டதுண்டு—அதிலே சார மிருக்குதம்மா" என்று பாடிவிட்டுப் போனார். பூசணிக் காய் அம்பியும் அந்தச் சாரத்தை மிகவும் அனுபவித்திருப் யான் போல் தெரிகிறது. அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் விஷந்தானாமே. அம்பிக்குத் தனிமை சாரமும் ஒரு தடவை புளித்துப் போய்விட்டது. அவன் குருட்டுப் பிச்சைக் காரனை வளைவிற்கு உள்ளே இழுத்து வந்து விட்டான்.

குருடனும் ஏதோ நீண்ட தெருவில் போவதாக நினைத்துச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான். இவ்வளவையும், ஒரு குட்டிச் சுவரின் மீது அமர்ந்து திருப்திகரமாக நோக்கிக் கொண்டிருந்தான் அம்பி. பக்கத்துப் 'பெரிய தனக்காரர்' வீடுகளில் எல்லாம் அம்பி 'பொல்லாப்' பயல் என்று பெயர் வாங்கி விட்டான். இதனால் பெரிய வீட்டுக் குழந்தைகளுக்கு எல்லாம் 'பூசணிக்காய்' அம்பி என்றால் அபாரப் பிரேமை. குழந்தை விரல்கள் பலகாரத்தைப் பகிர்ந்து தினன அவனை அழைக்கும். 'அபபா', 'அம்மா' என்ற தொந்தரவுகள் எல்லாம் இலலாத பெரிய மனிதன் என்று குழந்தை உலகத்துப் பேச்சு.

ஒருநாள் மாவடியா பிள்ளை வளைவில் பெருத்த கூச்சல். நான் எட்டிப் பார்த்தபொழுது, பூசணிக்காய் அம்பி வளைவின் கூரை ஒன்றின்மேல் இருந்துகொண்டு, பக்கத்துப் பெரிய வீட்டுக்காரர் குழந்தை யொன்றைக் கயிற்றின் உதவியால் உயர இழுத்துக் கொண்டிருந் தான். கீழே கூடியிருந்த கூட்டம் பையனை இறக்கி விடும்படி கெஞ்சினர். ஆனால் 'பூசணிக்காய்' அவசர அவசரமாகக் குழந்தையைக் கூரைக்கே கொண்டுபோய் விட்டான். குழந்தைப் பயல் உயரச் சென்ற பின்தான் அவனும் 'பூசணிக்காயின்' சதியாலோசனையில் சேர்ந் திருந்தான் என்று தெரிய வந்தது. பயலும் தாயாரைப் பார்த்து அழகு காட்டிச் சிரித்தானாம். அவன் உதவிக்கு ஏணி வந்து சேருவதற்குள், அம்பியின் பலத்த நண்பனாகி, அவனுடைய தூண்டுதலில் பெற்றோரையே கேலி செய்ய ஆரம்பித்து விட்டான். ஏணி வந்து குழந்தையைப் பிடிக்குமுன், 'பூசணிக்காய்' கம்பி நீட்டி விட்டான். அதிலிருந்து, இருவருடைய நட்பும், 'ஏ, பூசணிக்காய்', 'ஹி! பட்டு' என்ற சம்பாஷணையுடன் நின்றது.

இச் சந்தர்ப்பத்தில்தான் நான் அம்பியிடம் அதிக மாகப் பழக நேர்ந்தது.

அக்காலத்தில், தமிழ் நாட்டில் இலக்கியத்தின் காலி யான பாகங்களை நிரப்புவதற்காக உழைத்துக் கொண்டி ருந்தேன். இலக்கியத்தில் இருக்கும் காலி கொஞ்சம் பெரியது என்றும், தமிழ்நாடு அதனால் கண்ணுறங்காமல் வாடிக் கொண்டிருக்கிறது என்றும் கேள்விப்பட்ட நான், ஒரு நாளில் இரண்டு மணி நேரத்தில், இந்தக் காலியை நிரப்பும் வேலைக்குத் தத்தம் செய்து இருந்தேன். வேலை பெரிய வேலையல்லவா? ரஷ்யர்கள் போடுகிற ஐந்து வருஷத் திட்டங்களைப் பற்றி எல்லாம் படித்த பிறகு நானும் ஒரு திட்டம் போடாமலா இருப்பேன்? அந்தத் திட்டத்தின்படி, ஆபீஸிலிருந்து நான் வந்த பிறகு, உலகத்தை வெறுத்த சந்நியாசி மாதிரி, எனது அறைக்குள் சென்று பூட்டிக் கொள்ளுவேன். முந்திய நாள் என்ன எழுதினேன் என்பதை வாசிப்பேன். இதில் சில மாறுதல்கள் செய்ய வேண்டும் என்று எனக்குத் தோன்றும். உடனே அதைத் திரும்ப எழுத ஆரம்பிப்பேன். அப்பொழுது மேற்கோளுக்காக—தமிழ் நாட்டில் மேற்கோள் இல்லாத ஆராய்ச்சிப் புஸ்தகமும் பருப்பில்லாத கலியாணமும் உண்டா?—ஒரு புஸ்தகத்தை எடுப்பேன்; எப்பொழுதும் அம்மாதிரிப் புஸ்தகங்கள், எழுதுவதைவிட மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும். அது வேறொரு நல்ல வழியில் இக் காலியை நிரப்புவதற்கு வழி கூறும். இந்தப் புதிய திட்டத்தைப் பற்றி ஆலோசிக்க ஆலோசிக்க, இதுவரை எழுதிய முறையைத் தள்ளிவிட வேண்டியதுதான் என்று திட்டமாகப் படும். இச் சமயத்தில்தான் மூளைக்குக் களைப்பு ஏற்பட்டு, ஒரு தடவை வெற்றிலை—வெற்றிலை என்றால் என் அகராதி யில் புகையிலை ப்ளஸ் வெற்றிலை என்று அர்த்தம், —

போடவேண்டி வந்துவிடும். வெற்றிலை போடும்பொழுது நிம்மதியாக ஆலோசிப்பது நல்லது என்று தோன்றும். உடனே ஜன்னலின் பக்கத்தில் சென்று உட்கார்ந்து கொண்டு வெளியே பார்ப்பேன். அப்பொழுது மிஸ்டர் 'பூசணிக்காய்' அம்பி தென்படுவான். 'ஸார்' என்பான். என்னடா 'பூசணிக்காய்' என்பேன். இதற்கு மேல் எங்கள் சாம்பாஷணை வளர்ந்ததில்லை. ஆனால் இருவர் உள்ளத்திலும் இருக்கும் 'நாடோடி'த் தன்மை இருவரையும் பிணித்தது. இவ்விதமான ஆத்மீகப் பிணைப்புகள் 'பூசணிக்காய்' சர்க்கஸ் வேலைகளுக் கிடையே நடந்தேறும். இதற்குள் சமையலாகிவிடு மாகையால், வேறு ஒரு பக்கத்தில் இருக்கும் 'காலி' ஸ்தானத்தை நிரப்பச் சென்று விடுவேன்.

இப்படி இருக்கையில் எனது நண்பர் ஒருவர் ஒரு குலைச் செவ்வாழைப் பழங்களை எனக்கு அனுப்பி யிருந்தார். பழங்கள் கொஞ்சம் காய் வாட்டமாக இருந்தன. நான் ஆபீஸிற்குப் போகுமுன் அதைச் சன்னலின் பக்கம் தொங்க விட்டு விட்டுச் சென்றேன்; பழமும் பழுக்க வாரம்பித்தது. அறை முழுவதும் அதன் வாசனை பரிமளித்தது.

மறுநாள் சாயங்காலம் ஆபீஸில் இருந்து திரும்பி வரும் பொழுது ஒரு சிறுவன் செவ்வாழைப் பழம் ஒன்று தின்று கெண்டிருப்பதைக் கண்டேன். கொஞ்சம் தூரம் சென்றதும் இன்னும் ஒரு சிறு பையன் ஒரு செவ்வாழைப் பழம் தின்று கொண்டிருந்தான். இதிலிருந்து என்ன நடந் திருக்கும் என்பதைக் கண்டுபிடிக்க ஒரு துப்பறியும் கோவிந்தனும் வேண்டாம். வாசகர்களே இதற்குள் அந்த மகத்தான தொழிலைச் செய்து முடித்திருப்பார்கள். எனது அறைக்குட் சென்று பார்த்தேன். பழக்குலை மாயமாக மறைந்து விட்டது என்று கண்டு கொண்டேன். 'பூசணிக்

காய்' வேலைதான். அவனைப் பற்றி நினைக்கும்பொழுதெல்லாம் என் மனம் கொதித்தது. அவனைப் பார்த்தவுடன், துப்பறியும் நாவலில் கடைசி அத்தியாயத்தில் நடக்கிறபடி, "அடே 'பூசணிக்காய்!' வாழைப் பழக் குலைத் திருட்டிற்காகக் கைது செய்கிறேன்!" என்று அவன் தோள் மீது கையை வைத்துச் சொல்ல வேண்டும் என்று ஆசையாகி விட்டது.

கொலைக்காரனும் திருடனும் தாம் செய்த இடத்தைப் பார்க்க வருவது இயற்கையாம். அதுதான் 'பூசணிக்காயை' என் சன்னலின் பக்கம் வரும்படி தூண்டி இருக்க வேண்டும்.

அவன் ஜன்னல் முன்பாக இரண்டு மூன்று தரம் நடந்தான். நான் கவனிக்காதது போல் இருந்தேன்.

பிறகு பக்கத்திலிருக்கும் குட்டிச் சுவரில் ஏறிக்கொண்டு, "இங்கே சர்கேசு வந்திருக்குதே, அதிலே ஒருத்தன் ஆறு குருதெயிலே சவாரி பண்ணுறான்!" என்றான்.

குதிரையின் சர்க்கஸ் என்னை இளக்கவில்லை. நான் பேசாமல் இருந்தேன்.

"சேஷனைத் தெரியுமா?" என்றான்.

அவனைப் பற்றிச் சிறிது ஞாபகம் வந்தது. 'பூசணிக்காயின்' நண்பன்.

"துச்சனக்காரப் பயல். போலீசுக்காரனைக் கூடக் கொன்னூட்டான். மடிலே கத்திகூட வச்சிருக்கான். இன்னிக்கி அவனை சன்னலுக்கிட்டெப் பார்த்தேன்!" என்றான்.

ஒரு சின்னப் பயல் காது குத்துவது என்றால் யாருக்குத்தான் கோபம் வராது?

"ஏன்டா பூசணிக்காய் பொய் சொல்லுகிறாய்? சேஷனைப் பற்றி உனக்கென்ன? நீதான் பழத்தை எடுத்தாய். அதற்குத் திருட்டு என்று பெயர். உன்னை ஜெயிலுக்குப் பிடித்துப் போகப் போகிறேன்!" என்றேன்.

சொல்லி முடிப்பதற்கு முன் ஆசாமி கம்பி நீட்டி விட்டான். அப்படிச் செய்வான் என்று எனக்குத் தெரியும். இப்பொழுது இந்தப் பக்கமே வருவதில்லை. யாருக்காவது அவன் இருக்குமிடம் தெரிந்தால், அவனிடம் விளையாட்டிற்குச் சொன்னேன் என்று சொல்லுங்கள். இப்பொழுது அவன் இல்லாதது மாவடியா பிள்ளை வளைவு வெறிச் சென்று கிடக்கிறது.

(1935)

★

# சாமியாரும், குழந்தையும், சீடையும்...

"மனிதன் கடவுளைப் படைத்தான். அப்புறம் கடவுள் மனிதனைச் சிருஷ்டிக்க ஆரம்பித்தான்.

"இருவரும் மாறி மாறிப் போட்டி போட ஆரம்பித் தார்கள். இன்னும் போட்டி முடியவில்லை.

"நேற்றுவரை பிந்திப் பிறந்த கடவுளுக்கு முந்திப் பிறந்த மனிதன் ஈடு காட்டிக் கொண்டு வந்தான்.

"இதில் வெற்றி—தோல்வி, பெரியவர்—சின்னவர் என்று நிச்சயிப்பதற்கு எப்படி முடியும்?

'நிச்சயிக்க என்ன இருக்கிறது?"...

இப்படியாகப் பின்னிக் கொண்டே போனார் ஒரு சாமியார். எதிரிலே தாமிரவருணியின் புது வெள்ளம் நுரைக் குளிர்ச்சியுடன் சுழன்று உருண்டது.

அவர் உட்கார்ந்திருந்தது ஒரு படித்துறை. எதிரே அக்கரையில் பனைமரங்களால் புருவமிட்ட மாந்தோப்பு; அதற்கப்புறம் சிந்துபூந்துறை என்று சொல்லுவார்களே அந்த ஊர். இப்பொழுது பூ சிந்துவதற்கு அங்கு மரம் இருக்கிறது. அதைப்போல எண்ணக் குலைவையும் ஏமாற்றத்தையும் சிந்துவதற்குச் சுமார் ஆயிரம் இதயங்கள் துடிக்கின்றன. துடிப்பு நின்றவுடன் வைத்து எரிக்க அதோ சுடுகாடு இருக்கிறது. இப்பொழுதும், இந்த நிமிஷத்தில் கூடத்தான் அது புகைந்து கொண்டிருக் கிறது. தோல்வியின், ஏமாற்றத்தின் வாகனங்களை வைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டிருப்பது பலவீனங்

தானே? பலவீனத்தை வைத்துக்கொண்டு நாலு காசு சம்பாதிக்கப் பிச்சைக்காரனுக்கு முடியும். மனுஷனால் வாழ முடியுமா? அதனால்தான் இந்தச் சுடுகாடு என்ற ரண சிகிச்சை டாக்டர், வாழ்க்கை என்ற நோயாளிக்கு மிக அவசியம்.

அதை இந்தச் சாமியார் அறிந்து கொண்டிருந்தார். அதனால்தான் இவருக்கு விரக்தி ஏற்பட்டது. இவருக்கு இடது பக்கத்தில் சுலோசன முதலியார் பாலம். கட்ட பொம்மு சண்டையின்போது சமரசம் பேச முயன்ற துபாஷ் அவர். அவர்தான் அதைக் கட்டினது. திருநெல்வேலிக்காரர் களுக்கு அதில் அபாரப் பெருமை. முட்டையும் பதநீரும் விட்டு அரைத்த காரையில் கட்டியதாம். அதில் ஒரு தனிப் பெருமை.

இதற்கு முன் எப்போதோ ஒரு முறை இதுபோல வந்த வெள்ளம் அடித்துக்கொண்டு வந்த வைக்கோல் போர், முன் பல்லைத் தட்டின மாதிரி இரண்டு மூன்று கண்வாய்களைப் பெயர்த்துக் கொண்டு போய்விட்டது. இப்பொழுது மறுபடியும் கட்டி விட்டார்கள். பொய்ப்பல் கட்டிக்கொண்டால் எப்படியும் கிழவன்தானே; அப்படித் தான் அதுவும் வயசு முதிர்ந்த நாகரிகம் ஒன்று தன்னை வலுவுள்ளது மாதிரிக் காட்டிக் கொள்வது போன்றிருந்தது. அதற்கும் சற்று அப்பால் பொதிகை. குண்டுக்கல் மாதிரி ஒரு குன்று. தெத்துக்குத்தான வானத்தின் சிவப்புக் கோரச் சிரிப்பைத் தாங்குவது போலப் படுத்திருந்தது குன்றின் தொடர்.

சாமியாருக்குப் பின்புறத்தில் சுப்பிரமணியன் கோவில். அதாவது வாலிபம், வலிமை, அழகு, நம்பிக்கை இவற்றை யெல்லாம் திரட்டி வைத்த ஒரு கல் சிலை இருக்கும் கட்டிடம். அதற்கும் பின்னால் ஒரு பேராய்ச்சி கோவில். மேற்குத் திசையின் கோரச் சிரிப்புக்கு எதிர்ச்

சிரிப்பு காட்டும் கோர வடிவம். இருட்டில் மினுக்கும் கோவில். வாலிபமும் நம்பிக்கையும் அந்தக் கோரச் சிரிப்பின் தயவில் நிற்பதுபோல, சாமியாரின் முதுகுப் புறத்திலிருந்தன.

அவர் வெறுத்து விட்டவை; ஆனால் மனிதனால் வெறுக்க முடியாதவை. அதனால்தான் அவரது முதுகுப் புறமானது அவற்றிற்கு அப்பால் விலகிச் செல்ல முடியாது தவித்தது.

சாமியாரின் வலது பக்கத்தில்...

சாமியாரின் வலது பக்கத்தில் ஒரு சின்னக் குழந்தை, நான்கு வயசுக் குழந்தை, பாவாடை முந்தானையில் சீடையை மூட்டை கட்டிக் கொண்டு படித்துறையில் உட்கார்ந்து காலைத் தண்ணீரில் விட்டு ஆட்டிக் கொண் டிருக்கிறது. சின்னக் கால் காப்புகள் தண்ணீரிலிருந்து வெளி வரும் பொழுது ஓய்ந்துபோன சூரிய கிரணம் அதன்மேல் கண் சிமிட்டும். அடுத்த நிமிஷம் கிரணத் திற்கு ஏமாற்றம். குழந்தையின் கால்கள் தண்ணீருக்குள் சென்றுவிடும். சூரியனாக இருந்தால் என்ன? குழந்தையின் பாதத் தூளிக்குத் தவம் கிடந்துதான் ஆக வேண்டும்.

குழந்தை சீடையை மென்று கொண்டு சாமியாரைப் பார்க்கிறது.

சாமியார் வெள்ளத்தைப் பார்க்கிறார். வெள்ளம் இரு வரையும் கவனிக்கவில்லை.

"மனிதன் நல்லவன்தான்; தான் உண்டாக்கின கடவுளிடம் அறிவை ஒப்படைத்திருந்தால் புத்திசாலியாக வாழ்ந்திருக்க முடியும். அப்பொழுது அது தன்னிடமிருந்த தாக அவனுக்குத் தெரியாது. இப்பொழுது அறிவாளியாக அல்லல் படுகிறான்.

"சிருஷ்டித் தொழிலை நடத்துகிறவனுக்கு அறிவு அவசியம் என்பது அப்போது அவனுக்குத் தெரியாது. இப்பொழுது அவஸ்தைப் படுகிறான். அதற்காக அவனைக் குற்றம் சொல்ல முடியுமா?

"மனிதன் தன் திறமையை அறிந்து கொள்ளாமல் செய்த பிசகுக்குக் கடவுள் என்று பெயர். மனிதனுக்கு உண்டாக்கத்தான் தெரியும். அழிக்கத் தெரியாது. அழியும்வரை காத்திருப்பதுதான் அவன் செய்யக்கூடியது.

"அதனால்தான் காத்திருக்கிறான். ஆனால் அவனுக்குத் துறு துறுத்த கைகள். அதனால்தான் பிசகுகளின் உற்பத்திக் கணக்கு வரம்பை மீறுகிறது..." என்றார் சாமியார்.

துறையில் தலை நிமிர்ந்து வந்த நாணல் புல் ஒன்று சுழலுக்குள் மறைந்து விட்டது. குழந்தையும் 'ஆமாம்' என்பது போல் தலையை அசைத்துக்கொண்டு ஒரு சீடையை வாயில் போட்டுக்கொண்டு 'கடுக்'கென்று கடித்தது.

அந்தப் படித்துறையில், 'கடுக்'கென்ற அந்த சப்தத்தைக் கேட்க வேறு யாரும் இல்லை.

(1939)

★

# அவதாரம்

பாளையங்கால் ஓரத்திலே, வயற் பரப்புக்கு வரம்பு கட்டியவை போன்ற பனைவிளைகளுக்கு அருகே குல மாணிக்கபுரம் எனச் சொல்லப்பட்ட குலவாணிகபுரம் இருக்கிறது. இந்தச் சிற்றூரில் யாதவர்களும் கொடிக் கால் 'வாணியர்'களுமே ஜாஸ்தி. மருந்துக்கு என்று வேளாண் குடிகள் கிராமப் பரிவாரங்களான குடிமகன், வண்ணான் முதலிய பட்டினிப் பட்டாளங்களுக்கும் குறை கிடையாது. ஊரில் செயலுள்ளவர்கள், யாதவர் களே.

கிருஷ்ணக் கோனார் என்ற கிருஷ்ணசாமிதாஸ் யாதவர்களுக்குள் யோக்கியர் என்றபெயர் வாங்கியவர். யோக்கியர் என்றால் அயோக்கியத் தன்மையில் இறங் காதவர் என்றே அர்த்தம். சந்தர்ப்ப வசதி இல்லாத தினாலோ என்னவோ, நல்லவராகவே பெயரெடுத்து வந்திருக்கிறார்.

ஆனால் விதி, உடம்பை வளைத்து வேலை செய்ய முடியாதவரை காத்திருந்து விட்டு, அவருக்கு ஒரு குழந்தையை — ஆண்பிள்ளையை — மட்டும் கொடுத்து மனைவியை அகற்றி அவருடைய நடமாடும் சொத்துக் களான கால்நடைகளிடையே கோமாரியைப் பரப்பி விளையாடியது.

வெகு சீக்கிரத்தில் கஷ்டங்களை அறியலானார். சாப்பாட்டுக்கும் கஷ்டம் வந்தது. குழந்தையை வைத்துக்

கொண்டு பராமரிப்பது தலைக்கட்டு நிர்வாகத்தை விடக் கஷ்டமாகத் தோன்றியது கிழவனாருக்கு.

பையனுக்கு இசக்கிமுத்து எனப் பெயரிட்டு, இசக்கியின் அருள் விட்ட வழி என ஏக்கத்திலும், ஏமாற்றத்திலும் ஏற்படும் நிராதரவில் பிறக்கும் திருப்தியைப் பெற்றார்.

குழந்தையும் நாளொரு ஏமாற்றமும் பொழுதொரு கஷ்டமும் அனுபவித்து வளர்ந்து வந்தது. விதியின் கொடுமையைக் கண்டு சீற்றமடைந்தோ என்னவோ இயற்கை அவனுக்குத் தன் பரிபூரண கிருபையை வருஷித்தது. உடலும் மனமும் வறுமையின் கூர்மையிலே தீட்சண்யப்பட்டு வளர்ந்தது.

இசக்கிமுத்துவைப் பார்த்தால், மனம் அவன் காலடியில் விழுந்து கெஞ்சும். ஆனால் அதே மனம் அவனுக்காகக் கண்ணீர் வடிக்கும். அவனது முகச் சோபை அப்படி. குழந்தையின் துடிவைக் கண்டு கோனார் அவனுக்கு நாலெழுத்து படிச்சுக்கொடுத்து உத்தியோகம் பார்க்கும்படி செய்விக்க வேணும், என ஆசைப்பட்டு திண்ணைப் பள்ளியில் சேர்த்துவிட்டார்.

புது விஷயங்களைக் கிரகிக்க இசக்கியிடம் இருந்த ஆவலுக்கு ஏற்றபடி திண்ணை வாத்தியாரின் அறிவுப் பொக்கிஷம் விசாலமாக இல்லை. அதன் விளைவாகக் கல்வியரங்கம் மாறியது.

கோனார் மறுபடியும் குழந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு பாளையங்கோட்டை சாமியார் பள்ளிக் கூடத்திற்குப் பிரயாணமானார். எம்மதத்தவரானாலும் துறவிகளாக வருகிறவர்களுக்கு நம்மவர் செலுத்தும் மரியாதை சிற்சில இடங்களில் தவறான மதிப்பும் அந்தஸ்தும் கொடுத்து விடுகிறது. இத்துடன்

ஓரளவு தர்மச் செலவு செய்யும் சேவையும் சேர்ந்து கொண்டால் அந்தஸ்து வளர்ச்சிக்கு அளவே கிடையாது. ஏகாதிபத்தியத்திற்கே பிரத்தியேகமான வர்ணம் என்ற வெள்ளைத் தோலும் சேர்ந்து கொண்டாலோ கேட்க வேண்டியதே இல்லை. இந்த மூன்று அந்தஸ்தும் கொண்ட பிறமத மிஷனரிப் பள்ளிக் கூடங்கள் தர்மம் செய்யும் ஏகாதிபத்தியமாக ஏகாதிபத்தியம் செய்யும் தர்ம ஸ்தாபன மாக இரண்டு நோக்கங்களையும் கதம்பமாக்கி இரண்டை யும் ஒருங்கே குலைத்து வருகிறது.

இப்படிப்பட்ட ஸ்தாபனம் ஒன்றின் ஸ்தல சர்வாதிகாரி அர்ச். ஞானானந்தச் சாமியார். இவர் ஸ்தலக் கிருஸ்துவர் களின் ஒரு வகுப்பாருக்கு மோட்சத்தில் இடம் போட்டுக் கொடுக்கும் வேலையுள்ள ஸ்தல ஹைஸ்கூலின் தலைமை நிர்வாகத்தை ஏற்று இங்கிலீஷூம் சரித்திரமும் போதித்து வருகிறார்.

இவர் வசம் கோனார் தம் குழந்தையை ஒப்புக் கொடுத்தார். சாமியார் இலவசப் படிப்பும், அவன் வாழ்வுக்கு என்று மாசம் நான்கு ரூபாய் சம்பாவனையும் கொடுப்பதாக வாக்களித்ததில் கோனாருக்கு மகிழ்ச்சி கங்கு கரையில்லாமல் பிறந்தது. “பிள்ளையை எப்படி யும் நாலெழுத்து வரும்படி செய்விக்கவேண்டும்!” எனக் காலில் விழுந்து கும்பிட்டுவிட்டு வீடு வந்து சேர்ந்தார். குழந்தையும் சோற்று மூட்டையுடன் புஸ்தகச் சுமையை யும் தாங்கிப் பாளையங்கால் கரை மேலாகக் கல்வி யாத்திரை செய்து வந்தான். படிப்பு ஏழாவது வரை வந்தது.

பையனுக்கும், சாமியாருக்கும் திடீர்ப் புயலாக லடாய் ஏற்பட்டு கிழவரின் நிதானத்தைக் குலைத்தது.

எந்தக் காலமும் சாமியார் செய்த பிறமதப் பிரசாரத்தைப் பிரமாதமாகப் பொருட்படுத்தவில்லை. கிறிஸ்துவின் பரித்தியாகம் இவன் மனசைச் சிறிது கவர்ந்தது என்றாலும் கிறிஸ்து முனியின் தத்துவம் பூண்டிருந்தும் அமல் மிகுந்த சேவை அவனுக்கு அவரது தத்துவத்தின் மேல் வெறுப்பையே ஊட்டியது. மேலும் புண்ணைக் காட்டிப் பிச்சை வாங்குவதற்கும், கிறிஸ்துவின் புண்கள் வழியாக அவர்களும் மோக்ஷ சாம்ராஜ்யத்தை நம்பும்படி தன் வயிற்றுப் பசியை உபயோகிப்பதற்கும் பிரமாத வித்தியாசம் ஒன்றுமில்லை. எனவே இவன் நினைத்து வந்தான். அதனால் அவன் இந்த முயற்சிகளைச் சட்டை செய்யவில்லை. ஆனால் இது மட்டும் இந்த மத ஸ்தாபனத்தில் இல்லை. ஈராயிர வருஷங்களாக மதப் பிரசாரமும் செய்து பழுத்து முதிர்ந்து போன ஒரு ஸ்தாபனத்தின் கோளாறுகள் அவனைத் திடீரென்று சந்தித்தன. ஒரு லட்சியமோ கொள்கையோ இல்லாதவர்களும், அல்லது லட்சியத்திலோ கொள்கையிலோ நம்பிக்கையில்லாதவர்களும் பிரமச்சரிய விரதத்தை அனுஷ்டிக்க முயலுவதும், அனுஷ்டிக்கும்படி கட்டாயப்படுத்துவதும் ரொம்ப அபாயகரமான விஷயம். தீயுடன் விளையாடுவதாகும். இது மன விகாரங்கள் புகுத்தும் சுழிப்புக்கள். அந்த மனிதனுக்கு ஆபத்தை விளைவிப்பதுடன் நின்று விடாமல் ஸ்தாபன பலத்திற்கே உலை வைத்து விடுகின்றன.

இசக்கிமுத்துக்கு ஏழாவது வகுப்பில் ஏற்பட்ட உபாத்தியாயர் அர்ச். பெர்னான்டஸ் சாமியார் விபரீத ஆசையைக்கொண்டவர். பையனுடைய அழகு அவருடைய நேர்மையற்ற காம விகாரத்திற்கு இலக்காகியது. பையன் திடுக்கிட்டான். தலைமைச் சாமியாரிடம் ஓடித் தெரிவித்தும் நிவாரணமோ ஆறுதலோ கிடைக்க வழியில்லாமல்

போக, சிறு குழந்தைத்தனத்தின் அனுபவ சாத்தியமற்ற முறைகளைக் கையாண்டு பள்ளிக்கூடத்திலிருந்து விரட்டப்பட்டான்.

தகப்பனுக்கும் மகனுக்கும், இருவரும் அன்னியோன் னியப் பரிவுடன் நடந்து கொள்ள வசதியளிக்கும் நிர்க்கதி யான நிலைமையிலிருந்தும் மனம் ஒன்றாமல் அந்தஸ்து கொடுத்து வாங்கும் தூரத்தைக் குறைக்காமலே நடந்து வந்ததால், பள்ளிக்கு முழுக்குப் போட ஏற்பட்ட காரணத்தைக் கூற முடியவில்லை. 'மதம் மாறச் சொன்னார். முடியாது என்றதால் விரட்டப்பட்ட'தாக அறிவித்து விட்டான். தெய்வமாகப் பாவித்து வந்த சாமியாரின் ஆசையைப் பூர்த்தி செய்துவிட்டால்தான் என்ன, எந்த மதத்து மோட்சமானால் என்னவென்றே கிழவருக்குப் பட்டது. மேலும் ஹிந்து தர்மம் தாழ்ந்த வகுப்புக்கள் 'பொட்டுக்கட்டி' தன் விசேஷ பரிவைக் காட்டிவரும் சில வகுப்பின் ஆசாரங்கள் மாமிச உணவை விலக்கி வைக்காதிருப்பதால், இவ்வகுப்புக்களிலிருந்து பிற மதங்களுக்குப் போகிறவர்களுக்கும் அவர்களுக்குமிடையில் தொடர்பு அவ்வளவாக அறுந்து விடுவதில்லை. அதனால் கோனாருக்குப் பையன் செய்த வேலை பிடிக்கவுமில்லை, புரியவுமில்லை; இருந்தாலும் அவனைக் கண்டிக்கவில்லை. வேறு பள்ளியில் சேர்க்க முயலவுமில்லை.

இந்த நிலையிலே இசக்கிமுத்தின் மனவுலகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அதாவது அவன் தன்னை அறிந்து கொண்டான். ஒரு நாள் ஏனோதானோ என்று வில்லுப் பாட்டின் ஆவேசத்திற்கு இணங்க அவன் கக்கிய வார்த் தைகள் மூலம் இத்தனை நாட்களாக ஊமைக் கவிஞனாக அனுபவித்து வந்த இன்பங்களை எல்லாம் இசையில்

கொட்டினான். சில சமயங்களில் பிரமிக்கும் இசைக் கனவு களை எழுப்பியது; ஆனால் பல வார்த்தைப் படாடோப இடி முழக்கங்கள், கனவைச் சிதைக்கும் கரகரப்புகளுடன் பிறந்தன வென்றாலும், பொதுவாக முறையாகத் தமிழ் படிப்பது என்ற சம்பிரதாயத்தின் மூலம் ருசு கெட்டுப் போகாததினால் பாட்டில் உண்மையும் தெளிவும் தொனித்தது. ஆனால் புராதனச் செல்வங்களில் தொடர்பும் பரிச்சயமும் இல்லாததினால் நெஞ்சுக் கொடியைத் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு பிறந்தவுடன் தெரு வழியாகக் கோஷமிட்டுக் கொண்டு ஓடும் குழந்தையின் அசாதாரணத் தன்மையைப் பெற்றிருந்தது. ஆனால் இசக்கிமுத்தின் பாட்டு, இசக்கிமுத்தின் 'வெளிவராத ரகசி யமாக' இருந்து வந்தது.

இப்படியாக மனக் கனவுகளைப் பாடுவதும் கிறுக்குவ தும் கிழிப்பதுமாகக் காலங் கழித்தான், இசக்கிமுத்து.

## 2

ரூபமற்ற, நாமமற்ற, அனாதியான, பொருளற்ற, பொருளுக்கு அப்பாற்பட்ட அந்த வஸ்து, அதாவது வஸ்து என்ற வரம்புக்கு மீறியதும், வரம்பே இடிந்ததுமான ஏதோ ஒன்று என்ற ஒன்றல்லாத, பலவும் அல்லாத அந்த 'அது' சிந்திக்க ஆரம்பித்தது. தன்னை உணர ஆரம்பித்தது; தன்னை உணர்ந்து தன்னையே உணரவும் அஞ்ச ஆரம் பித்தது. பூர்த்தியாகாத ஆசை வித்துக்கள் மாதிரி கொடுமையின் குரூரத் தன்மைகள் தன் சித்த சாகரத்தின் அடியில் அமுங்கியும் குமிழி விட்டும் பிரபஞ்சம் என்ற தன்னையே கண்டு அஞ்சியது. தன்னையே நோக்கியது.

தானான மனிதர்கள், தன்னுள் ஆன மனிதர்கள் தன்னைக் கையெடுத்து வணங்கி தன்மீதே இலட்சியங்களைச் சுமத்தி, நன்மை நலம் மோட்சம் என்ற கோவில்களைக் கட்டுவது கண்டு கண்ணீர் விட்டது. அவர்கள் நம்புவது தான் அல்ல என்று அவர்களிடம் அறிவிக்க விரும்பியது; துடி துடித்தது.

## 3

கிருஷ்ணக்கோனார் அந்திமதசை யென்னும் அஸ்த மனக் கிரணங்கள் தம்மீது விழுவதைக் கண்டுவிட்டார். அர்த்தமற்ற புதிராக இருந்துவரும் பெரிய மாறுதலின் காலம் அணுகுவதை உணர்ந்து விட்டார். இனி எப் படியோ? இதுவரை நடந்துவந்த வாழ்வுப் பாதை பிறப்பு என்ற சித்த வான வளையத்தைத் தொடும் அந்த மங்கிய எல்லையிலிருந்து, அன்றுவரை ஏற்பட்ட மாற்றங்கள், கொந்தளிப்புக்கள், சுழல்கள் எல்லாவற்றையும் சம நோக்குடன் பார்க்கும், அப்பொழுது ஆட்டிய அதிர்ச் சிகள் அற்று நோக்கும் தன்மையைப் பெற்றார். இன்னும் ஒரு ஆசை மட்டும் பூர்த்தியாகவில்லை.

அவனுக்குக் கலியாணத்தைச் செய்து விட்டால், தம் கடமை பரிபூரணமாக நிறைவேறியதாகவே அவர் தீர்மானித்தார்.

லெட்சுமி என்ற பெண் இசக்கிமுத்துக்கு உடலதிர்ச்சி களில் இருக்கும் இன்பத்தைக் காட்ட அவ்வூர்ப் பெரி யோர்களால் ஆசீர்வதிக்கப்பட்டாள். புதுக் குடித்தனம் என்னும் பதினெட்டாம் பெருக்கு களிபுரண்டு கொந்

தளித்துச் சுழித்து ஓடியது. மனக் கனவுகள் என்ற தெப்பம் இசக்கி முத்துக்கு நிலைதடுமாறி குதித்து முழுங்கிச் சென்றது. கனவுகள் புது வடிவம், நிஜ வடிவம் பெற்றன. அவன் பாட்டை எழுதுவதை நிறுத்திவிட்டான். நேரில் நிறைவுபெற்ற மனம் பாட்டில் துள்ளிப் பொங்கவில்லை. அவன் கனவுகள் நாத வடிவம் பெறாமல் நாள் மணிக்கணக்கில் நிஜ 'தரிசனத்தில்' ஒடுங்கியது.

## 4

எல்லாம் தானாகவும், தன்னில் வேறாகவும், வேறு என்ற பேதமற்றும் இருக்கும் அது, தன் தொழிலில், தன் நியதியில், தன் இயற்கைத் தன்மையில் சந்தேகம் கொண்டது; பயம் கொண்டது. தன் தொழிலைத் தானே நிறுத்த இயலாமல், தவித்தது. தனக்குத் தன் தொழில் தெரியவில்லை எனக் குமைந்தது. சிருஷ்டித் தொழில் கலையின் நியதியை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதைக் கண்டது. தான் நிலையாமல் தன் பூர்த்தியாகா ஆசைகள் தன் தொழிலில் விழுவது கண்டு தனக்குத் தன் பயிற்சியில்லை, கலையில்லை, அதாவது சிருஷ்டித் தன்மைக்குத் தான் லாயக்கில்லை என நினைத்தது.

வருஷம் முழுவதும் பதினெட்டாம் பெருக்காக இருக்க முடியுமா? வெவ்வேறு நிலையில் உள்ள உணர்ச்சி பிரவாகம் போல ஒன்றையொன்று மோதிப் பொது நிலையடையும்வரை கொந்தளிப்பும் சுழற்சியும் இருக்கும். நிலைமை சமனப்பட்டவுடன் வேகம் குறையாது போனாலும், மேலுக்குத் தெரியாமல் இருக்கும்.

இசக்கிமுத்தின் மனத்துடிப்பு இந்த நிலையை அடைந்ததின் பயனாக, அதன் நிதானத்தைத் தப்பிதமாகக் கருதும்படி லெட்சுமிக்கு மனப் பண்பு இருந்ததால், அவனுக்குத் தப்பிதம் செய்துவிட்டாள். நிதானப்போக்கை அசட்டை என்று நினைத்ததின் விளைவாகச் சந்தர்ப்ப விசேஷத்திற்கிணங்க விபரீதம் விளைந்து விட்டது. விளைந்ததும் இசக்கி முத்துவுக்குத் தெரியாது,

நாதப் பிசகு ஏற்படாமல் ஒலிக்கும்படி செய்து வந்த அவனது மனவீணையின் நரம்புகள் அறுந்து தொங்கும்படி உணர்ச்சி வாசித்து விளையாடிவிட்டன. உன்மத்தன் ஆனான். பூர்வ ஜன்மம் என்ற வசதி இருக்கிறதோ என்னவோ, மனித ஜீவனுக்கு உள்ள விசேஷ வசதிகளையும் சக்திகளையும் நம்மால் அறிய முடியாது.

இசக்கிமுத்து அவளை மன்னிக்கும் மனப் பண்பு படைத்திருந்தான்; நபும்சகத்தால் விளையும் சகிப்புத் தன்மையல்ல; பரிபூரண மன்னிப்பு. ஆனால் மனம் அறுந்து தொங்கியது. கொழுந்து விடாவிட்டாலும் கங்கு அவியவில்லை. சில சமயம் சித்தம் அளந்து காட்ட முடியாத வீபரீத அளவுக்கு மனம் பேயுருக்கொண்டு குமுறியது. தன்னையே தின்று தணிந்தது.

மனசின் குதியாட்டத்தைக் கண்டு அஞ்சிய இசக்கிமுத்து அதன் கடிவாளம் தன் கைக்குச் சிக்கும்படி பண்படுத்த, லயக்குறைவு இல்லாததால் இசை எழுப்ப விரும்பினான். பாட்டு உண்மையில் துடிதுடிப்புடன் பொங்கியது. வார்ப்பில் பரிபூரண அழகு முன்போல் அனாயாசமாக விழவில்லை. கற்பனையில் கைப்பு தட்டியது. கனவை ஏமாற்றம் ஏந்தி நின்றது.

நிராகரித்தான்.

கலைவாணியின் வழி சிருஷ்டியின் வழி என்பதை உணர்ந்து அறிந்தவன்; அறிந்து உணர முயன்றவன் அல்ல. மனப் பண்புதான் கவிதையின் மார்க்கம் எனக் கண்டான். மனிதனுடைய பரிபூரண லட்சியமான தெய்வக் கனவில் மனசை லயிக்க விட்டால்தான், பாட்டில் பண்பு பிறக்கும் என நினைத்தான்.

லட்சுமியை விட்டுப் புறப்பட்டான், சமூகத்தை மறந்து வெளிப்பட்டான்.

மன லட்சியத்தின் பூத உருவமான ஹிமயத்தை நோக்கினான்.

நடந்தான்.

## 5

அந்த அது மனித உருவம்கொண்டு, மனிதன் நினைக்கும் 'தான்', தானல்ல என மனிதனிடம் பறையடித்து அறிவித்து, தன் சுமையை இறக்கிக்கொள்ள விரும்பியது.

மனித உருக் கொண்டது.

தாடியும் மீசையும் நரைத்துப் பழுத்த கிழவனாராக உருவெடுத்தது.

ஹிமயத்தில் காலடி வைத்தது.

நடந்தது.

ரூபத்தில் தெளிவு இருப்பதை உணர்ந்தது. தன்மீது சுமை இல்லையோ எனக்கூடச் சந்தேகித்தது. ஆனால்

பொறுப்பை மறந்து விடவில்லை. ஏனென்றால் அதனால் அதை மறக்க முடியவில்லை.

நடந்தது......

நடந்து வந்தது.

இசக்கிமுத்தும் நடந்து வருகிறான். அவன் முகத்தைத் தாடியும் சிகையும் மறைத்தது. ஆனால் மனக் கொதிப்பின் புகை மண்டலம்போல் முகத்தைச் சுற்றிச் சிதறிப் பறந்தது.

## 6

இருவரும் சந்தித்தனர்.
அது அவனைச் சந்தித்தது;
அவன் அதைச் சந்தித்தான்;
''நான், நானில்லை'' என்றது அது.
''நான், நானில்லை'' என்றான் அவன்.
''யோகத்தில் அமருவோம்'' என்றான் அவன்.
இருவராக அமர்ந்தனர்; ஒருவராக இருந்தனர்.
அது அவனில் தன்னைக் கண்டது,
அவன் அதில் தன்னைக் கண்டான்.

(1940)

★

# சாமாவின் தவறு

மகத்தான தியாகம் என்பதற்கு சாமாவின் அகராதி யில் வெள்ளி குளத்திலிருந்து பாட்டியின் வீட்டிற்குப் போவது என்று பொருள். இந்தத் தியாகத்தைச் செய்யா விட்டால், வருஷம் முழுவதும் சில்லரை ஓட்டத்திற்கு மிகுந்த தடை ஏற்படும் என்று பூரணமாக அறிவான்.

சாமா பள்ளிக்கூட மாணவன். கல்விக் கடலில் இண்டர் மீடியட் என்ற சுழலின் பக்கம் நீந்திக் கொண்டு இருக்கிறான். வீட்டிலே பிள்ளை 'காலேசில்' படிக்கிறான் என்பதால் ஓரளவு மரியாதை. வெளியிலே மாணவ உலகத் தின் கவலையற்ற குஷால் செலவு.

இவ்வளவு கவர்ச்சிகளையும் விட்டு விட்டுப் பாட்டி யின் வீட்டிற்குப் போகவேண்டுமென்றால் அது தியாகம் தான். அந்தத் தியாக விஷயத்தை கோடை விடுமுறையில் அவன் வைத்துக் கொள்ளுவது வழக்கம். ஏனென்றால் டவுனில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றும் இருக்காது, மறுஜூன் மாதம் வரை.

இருந்தாலும் பாட்டியின் முறுக்கும், 'எண்ணைக் குளி' தொந்தரவுகளும் சகித்துக் கொள்வதற்குக் காரணம், பாட்டியை விட்டுப் புறப்படும் பொழுது 'வழிச் செல விற்கு'க் கொடுக்கும் தொகைதான்.

சாமா வெள்ளி குளத்திற்குப் போக பஸ் ஏறும் பொழுது வேண்டா வெறுப்பாகத்தான் ஏறினான்.

பஸ் வெள்ளிக் குளத்துச் சாலையில் வந்து நிற்கும் பொழுது கருக்கல் நேரமாகி விட்டது. இவனைத் தவிர வேறு பிரயாணிகள் கிடையாது. ரஸ்தாவின் பக்கத்தில் கண்ணுக் கெட்டிய தூரம் ஒரு மனிதப் பிறவி கூட கிடையாது. டவுனில் புத்தகத்தைச் சுமப்பதே அநாகரிகம் என்று கருதும் சாமாவிற்கு, டிரங்குப் பெட்டியும் சுமப்பது என்றால் கொஞ்சம் மனம் கூசியது. ஆனால் கண்ணுக் கெட்டிய வரை அவன் நண்பர் ஒருவரையும் சந்திக்கமாட்டோம். என்ற நம்பிக்கையில் பிறந்த உற்சாகத்தில், அதைக் கையில் எடுத்துக்கொண்டு ஊரை நோக்கி நடந்தான்.

கருக்கலில் செல்வதற்கு மனம் நிம்மதியாக இருந்தது.

ஆனால் அடிக்கடி காலில் முள்ளுக் குத்தி விடுமோ என்ற பயம். போகும் வழி பனங் காட்டுகளிடையே செல்லும் ஒற்றையடித் தடம். இடை இடையே குத்துச் செடிகள், கருவேல், இலந்தை முட்செடிகள் முதலியவை படர்ந்து நின்றன.

டிரங்கு கையைக் கீழே அறுத்துக்கொண்டு விழுந்து விடும் போல் வலியாய் வலித்தது.

அடிக்கடி ஒரு கையிலிருந்து மறு கைக்கு மாற்றிக் கொண்டான். 'சீ என்ன இருட்டு...என்ன டிரங்கு, உளியாய் கனக்கிறது' என்று சொல்லிக் கொண்டான். இனிமேல் தூக்கிச் செல்ல முடியாது. இந்தப் பாழும் ஊர் தான் ரஸ்தாவின் பக்கத்தில் இருந்து தொலையக் கூடாதா? வேறு வழியில்லை. நாஸூக்கு மானம் எல்லாவற்றையும் கட்டி வைத்து விட்டு, மேல் அங்க வஸ்திரத்தைத் தலையில் கட்டிக் கொண்டு, டிரங்கை முக்கி முனகித் தலை மேல் வைத்துக்கொண்டு நடந்தான்.

கொஞ்சநேரம் கைகளுக்கு மோட்சம். சற்றுக் கவலை தீர்ந்தது. ஆனால் மூச்சுத் திணறுகிறது. தலை உச்சியும் கழுத்து நரம்புகளும் புண்ணாக வலிக்க ஆரம்பித்து விட்டன. சாமாவின் மனதில் வேறு ஒன்றும் தோன்றவில்லை. ஒரே எண்ணம் 'பெட்டி' கால்நடைகள் 'டிரங்க், டிரங்க்' என்று தாளம் போட்டு நடக்கிறது. நா வரள்கிறது.

'பெட்டி!'

உலகம் பூராவாகவும் அவன் எண்ணத்தில் தோய்ந்து கழுத்துப் பெட்டி மயமாகத் தெரிகிறது. கண்களில் கபாலத்தில் எல்லாம் பொறுக்க முடியாத வலி. சீ! பெட்டியாவது கிட்டியாவது. வாய்க்காலைக் கடக்கும் வரை ஒருவரும் கூப்பிடவில்லை. கருப்பனையும் காணோம்; ஒருவனையும் காணோம். கை பச்சைப் புண்ணாக வலிக்கிறதே, இந்தப் பயல்கள் இன்றைக்கு என்று எங்கு தொலைந்திருப்பார்கள், திருட்டுப் பசங்கள்! சனியன்கள்.

வாய்க்காலையும் கடந்தாகி விட்டது, அப்பாடா பெட்டியைக் கீழே வைக்க வேண்டியதுதான். கை என்ன இரும்பா? சீச்சீ! இன்னும் கொஞ்சம் தூரந்தானே. பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு நடக்கிறான். ஒவ்வொரு அடியும் எத்தனையோ மைல்கள்! அந்த மூலையில்தான் பாட்டியின் வீடு! எல்லாம் என்ன ஊரே அடங்கிக் கிடக்கிறது; அதுவும் ஒரு நல்ல காலந்தான், இல்லாவிட்டால் பெட்டி தூக்கிய அவமானம் தெரிந்து போகாதா.

அப்படா வந்தாச்சி, பாட்டியின் வீடு! உள்ளே சென்று திண்ணையில் பெட்டியை வைத்துவிட்டு கதவைத் தட்டுகிறான்.

உள்ளே இருந்து "அதாரது?" என்ற குரல்.

"பாட்டி! நான்தான் சாமா!" என்கிறான். கதவு திறக்கப்படுகிறது. அங்கு பாட்டி நிற்கவில்லை. ஓர் இளம் பெண். மங்கிய குத்து விளக்கின் வெளிச்சத்தில் சிரித்துக் கொண்டு நிற்கிறாள்.

சாமாவின் உடல் குன்றி விடுகிறது. பெட்டியைத் தூக்கிச் சுமந்து கொண்டு அவள் முன்பு கூலிக்காரன் மாதிரி எப்படிப் போவது. அவள்தான் பங்கஜம், அவன் அத்தையின் மகள்.

"பாட்டி! சாமா வந்திருக்கான்!" என்று உள்ளே பார்த்துக்கொண்டு சொன்னாள்.

"என்னடி சாமாங்கரே? மொளைச்சு மூணெலைகுத் தலே, சாமா! நன்னாருக்கு! வாடாப்பா! ஏன் அங்கேயே நிக்கரே" என்றாள்.

பெட்டியை எறிந்து விட்டுப் போய் விடலாமா! என்று இருக்கிறது.

பனங்காட்டில் அலையும் ஓலைச்சப்தம். பழுத்து விழும் பனம்பழங்களின் 'தொப்', 'தொப்' என்ற சப்தம். தலையிலாவது ஒன்று விழுந்து தொலையாதா என்ற ஏக்கம்; எங்கு விழுந்து விடுமோ என்ற பயம்.

தூரத்தில் சிறு வெளிச்சம். அப்பாடா! ஊர் வந்து விட்டது. வாய்க்கால் பாலத்தை தாண்டி விட்டால் கொஞ்ச தூரந்தான். இதில் ஒரு ஊக்கம். கால் கொஞ்சம் விசையாக நடக்கின்றன. ஆனால் சிறிது நேரத்தில் கால்கள் தொங்க லாடுகின்றன.

உடனே திடீரென்று ஒரு எண்ணம். எப்படித் தலை பெட்டியைச் சுமந்து கொண்டு ஊருக்குள் போகிறது. யாரும் பார்த்துவிட்டால். என்ன கேவலம்! அந்த நினைப்பிலேயே உடல் எல்லாம் வேர்க்கவாரம்பிக்கிறது. வாய்க்கால் பக்கத்தில் கருப்பன் அல்லது வேறு யாராவது

பயல்கள் நிற்பார்கள். இருட்டில் போகிறவனை ஏன் என்று கூடவா கேட்காது போய் விடுவார்கள்? காலணா கொடுத்தால் போகிறது.

அதற்கு இப்படித் தலையிலா தூக்கிக்கொண்டு போகிறது. மெதுவாகத் தலையில் இருந்து இறக்கிக் கீழே வைக்கிறான். கைகள் தள்ளாடுகின்றன. தலையிலிருந்து சும்மாட்டுத் தலைப்பாகை கழன்று மாலையாக விழுந்து விடுகிறது. வேர்வையில் நனைந்த அங்கவஸ்திர விளிம்புகள் கழுத்திற்குச் சுகமாக இருக்கின்றன. தலைக்கு என்ன நிம்மதி! இரும்பு வளையத்திலிருந்து விடுபட்டது போல், மேல் மூச்சு வாங்குகிறது.

கட்டாயம் யாராவது, "அங்கே யாரது" என்று கேட்பான். கூப்பிட்டுப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வரச் சொல்லி விடலாம் என்ற நம்பிக்கை.

பாட்டியின் வீட்டிற்குள் செல்லும்போது வெட்கமாக இருந்தாலும், உள்ளத்திலே ஒரு காரணமற்ற சந்தோஷம் இருந்தது.

"என்னடா 'உம்' இன்னு இருக்கரே. அங்கே கொழந்தைகள் எல்லாம் எப்படி இருக்கு? பரீட்சை எப்படிக் குடுத்தே? அடியே! அந்த மண் எண்ணை வெளக்கை ஏத்து டீ, தொரைகளுக்கு இது 'புடிக்காது!'" என்றாள்.

விளக்கைத் துடைத்துக் குனிந்து கொண்டு சிரிக்கும் பங்கஜத்தைப் பார்த்ததும் அவனுக்கும் சிரிப்பு வந்து விட்டது.

"பாட்டி! இவள் எப்போ வந்தாள்?" என்றான் அதை மறைக்க.

★

# நம்பிக்கை

எனக்கு இந்த வெற்றிலைப் பழக்கம் இருக்கிறதே. அது ஒரு பெரிய தொந்தரவு. வாய் நிறைய ஒரு ரூபாய் எடை புகையிலையை வாயில் அடைத்தால் தாகம் எடுக்காமல் என்ன செய்யும்? கண்ட இடத்தில், அசந்தர்ப்பமான இடத்தில் எல்லாம் இந்தத் தொந்தரவுதான். காப்பி கலர் குடித்தால் தாகம் தீரக்கூடிய நாஸூக் பேர்வழியில்லை நான்.

அன்று நானும் என் நண்பரும் தெருவில் சுற்றிக் கொண்டு இருந்தோம். அவர் வெற்றிலை போடுங்களேன் என்றார். இதற்கு உபசாரம் வேறு வேண்டியிருக்கிறது. போட்டாய் விட்டது. அதன் உத்ஸாகத்தில் கொஞ்ச நேரம் நடுத் தெருவில் போகிறவர்கள் வருகிறவர்கள் திரும்பிப் பார்க்கும் படியான சல்லாபம் பிறகு......... கேட்பானேன். தெரிந்ததுதான். அந்த வெற்றிலைக் கடைக்காரனுக்கு என்னைப் போன்ற பழைய ஏட்டுப் பிரதிகள் வருமென்று தெரியுமா? நண்பர் எனக்கு ஜல வசதிக்காக அவருக்குத் தெரிந்த ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றார். ஏன் என்றால் தன் மதிப்பை விட்டுக் கொடுக்காமல் நடக்க வேண்டுமென்ற சுத்த ஹம்பக் பேர்வழி நான்.

அந்த ஜோரில், தண்ணீர் பிரச்சினை ஒருவாறு முடிந்தது.

எனது நண்பர் ஒரு அபூர்வப் பேர்வழி, அவர் மேல் எப்பொழுதும் பொறாமை அதிகம். சமூகத்தின் எந்தப் படிக்கட்டிலிருப்பவனும் அவரிடம் வெகு லேசாகத் தனது

உள்ளத்தைத் திறந்து விடுவான். அது மட்டுமன்று. இந்தக் குழந்தைகள்தான், அவரிடம் என்ன வசிகர சக்தியோ?

அந்த ஹோட்டலில் ஒரு குழந்தை. அந்த ஹோட்டல் சொந்தக்காரனுடையது. பார்த்தால் அதை முத்தமிட வேண்டுமென்று தோன்றாதவன் மரக்கட்டை. குழந்தை அவனைப் பார்த்து விட்டது, அவ்வளவுதான் ஏக ரகளை.

"ஓடி வா! ஓடி வா! ஒன்னு ரெண்டு......மூணு!"

குழந்தை...ஒரே பாய்ச்சலில் அவர் ஏந்திய கையில் விழுந்து, ஒவ்வொரு படியிலும் உருண்டு விடாமல் இருக்க வேண்டுமே என்று மெதுவாகக் காலை வைத்துத் தடவும் அந்தக் குழந்தை......என்ன நம்பிக்கை!

இவ்வளவும் வாசல் படியில் இந்தக் கூத்துக்களை யெல்லாம் முன்னே வெளியில் வந்த நான் கவனித்துக் கொண்டு தத்துவம் பண்ணிக்கொண்டிருந்தேன். உத்ஸாகம் அவருக்கு ஜாஸ்தியோ, அந்தக் குழந்தைக்கோ? எனக்கும் பெருமை ஒன்றுதான் மிச்சம்.

நான் சொல்லும் நேரம் சாயங்காலம். சாயங்காலம் என்று மரியாதைக்குத்தான் கூறுகிறேன். பட்டணத்தின் மின்சார கோரமும், அதனுடன் குழம்பும் இரைச்சலும் என் மனதில்......

எனது கண்கள் தெருப் பக்கம் அகஸ்மாத்தாகத் திரும்பின.

அங்கே ஒரு ரிக்ஷாவில் ஒரு கனவான். எல்லா விஷயத்திலும் பர்ஸிலிருந்து சில்லறையை எண்ணிக் கொண்டிருந்தார். வண்டி நிறுத்தி விடப் பட்டிருந்தது.

பக்கத்தில் ஒரு பிச்சைக்காரி, வாலிபம்......வாலிபத் தின் களை. அழுக்குப் பிடித்த வெள்ளாடை, முக்காடு

தலையை மறைத்தது. முகத்தை மறைக்கவில்லை. கனவான் பக்கம் கையை நீட்டிய வண்ணம் அசையாது நின்றிருந் தாள். சில சமயம் வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வெளி வந்தன. அது என்னவோ? இரைச்சலில் கேட்கவில்லை. அவள் இடையில் ஒரு குழந்தை. சிறியது. நான்கைந்து மாதம்......துயரத்தின் சிற்றுரு தாயிடம் பால் குடித்த வண்ணம் இருந்தது. மூடிய கண்கள் ஏறக்குறைய உயிரற் றது மாதிரிதான்.

சிற்சில சமயம் அதன் தாய் தன்னையறியாமல் அதை இறுக அணைத்துக் கொண்டாள். அதன் மீது அவ்வளவு பாசமோ, கைதான் வலிக்கிறதோ!

அந்தத் தாயின் முகத்தில் என்ன துயரம்......என்ன சோர்வு...அதிலே பசி...என்று எழுதிய மாதிரி கலங்கிய கண்கள்...நம்பிக்கை யிழந்த கண்கள்...அந்தக் கை கனவானை நோக்கி நீட்டியது சற்றாவது விலகவில்லை. என்ன நம்பிக்கை!

அவளைக் காணவும் மற்றதை மறந்தேன். அவளுக்கு ஏதாவது கொடுக்க வேண்டும் என்று என் உள்ளம் தூண்டியது. ஆனால் சென்னையிலே தர்ம சிந்தனை ஒரு போக வஸ்து. அதை என்னைப் போன்றவர்கள் எளிதில் அனுபவித்து விடமுடியாது. நானும் யார்? அவளைவிட ஒரு படிமேல்...எனது முகம் வாழ்க்கையின் அலைமேல் சற்று உயரத் தள்ளி இருக்கிறது. அதற்கென்ன இப்போது?

அந்த ரகளை இவளை ஓட்டல் பக்கம் திரும்பச் செய்தது.

திரும்பியவள்.........

அப்படியே மெய்மறந்து நின்றவள்போல், தெய்வத்தை, இலக்ஷியத்தைக் கண் எதிரில் கண்டவள் போல் அவற்றை....., கண்களில் ஒரு பிரமிப்பு.

பிறகு............

அந்தச் சோர்வும் சோகமும் நிலவிய கண்களிலிருந்து துயரம் தேங்கிய அதரங்களிலிருந்து, மேகத்தின் பின் ஒளிந்து சந்திரன் வெளி வந்த மாதிரி......

ஒரு புன்சிரிப்பு.

அவள் குறைகள் அவளையறியாமலே பால் சுவைத்துக் கொண்டிருக்கும் குழந்தையை அணைத்துக் கொள்கின்றன.

ஒரு நிமிஷந்தான்.

மறுபடியும் அவள் முகத்தில் வாழ்க்கையின் மேகம் கவிந்தது.

அந்தக் கனவானை நோக்கி ஏதோ கூறினாள்.

அவரோ?

அவரும் அந்தக் குழந்தையின் விளையாட்டில் கண்களை திறந்தபடி ஈடுபட்டிருக்கிறார்.

பை மாத்திரம் கைக்குள் பலமாக இறுக்கப் பிடிபட்டிருக்கிறது.

அந்தத் தாயும் குழந்தையும்...... அவள் நீட்டிய கை......அதற்குத்தான் என்ன நம்பிக்கை. அந்தக் கண்கள் ஒளி இழந்துதான் இருக்கின்றன. அதில் என்ன நம்பிக்கை! சோர்வினாலா?...வேறு கதியில்லாமலோ... இருந்தாலும் நம்பிக்கைதானே. அந்தப் பிரமையாவது இல்லாவிட்டால் வாழ்க்கையில் பிடித்துக்கொள்ள வேறு என்னவிருக்கிறது?

'ஓடி வா! ஓடி வா! ஒன்று, ரெண்டு......மூணு......' குழந்தையின் களங்கமற்ற வெள்ளிக் கிண்ணத் தொனி போன்ற சிரிப்பு........ஒரே பாய்ச்சல், அவர்மீது என்ன நம்பிக்கை!

★

# சாளரம்

அடையார் பஸ் மயிலாப்பூருக்கு வந்து கொண்டிருக்கிறது. பஸ்ஸுக்குள் இருந்த மங்கிய 'பல்ப்' வெளிச்சம் இருட்டை எடுத்துக் காட்டுகிறது. பிரயாணிகளின் முகமும் மார்பும் தவிர வேறொன்றும் தெரியவில்லை.

'டிக்கட் ப்ளீஸ்'' என்று கத்தினான் கண்டக்டர்.

''இந்தாப்பா, மயிலாப்பூருக்கு ஒன்று'' என்றார் நரைத்த தாடியுடைய ஒரு கிழவர்.

''ஸார்! நீங்களா! எங்கிருந்து இருந்த இருட்டில்?'' என்றார் ஓர் உச்சிக்குடுமி.

''பெஸண்ட் அம்மையாரின் மரணத்தைக் குறித்து ஒரு பொதுக் கூட்டம் நடக்கிறது. அம்மையார் ஆவியுலகிலிருந்து தந்த ஆசி மொழிகள்-ஹா! என்ன அருள் வாக்கு!'' என்று பதில் சொன்னார்.

''ஒரு மதமும் பின்பற்றாத ஒரு ஸ்தீரீ; அவள் போனதே நல்லது'' என்றார் ஓர் அரைமீசைப் பாதிரியார்.

''உமக்கென்ன தெரியும்? அம்மையாரின் சாவு இந்தியாவுக்கு அல்ல, இந்த உலகத்துக்கே ஒரு பெரிய நஷ்டம்'' என்று சொல்லி ஏற இறங்கப் பார்த்தார் அந்தத் தியாஸபிக் கிழவர். (52)

''ஆனால் அவர் இத்தனை நாள் படுத்த படுக்கையாய்......'' என்று ஓர் இருள் பிழம்பு பேச ஆரம்பித்தது.

''அப்படிக்கிடந்து போனாலும் பரவாயில்லை! ஒரு சமாதானமாவது இருக்கும். இன்றைக்கு மத்தியானப்

பாருங்க, ராயப்பேட்டையிலே ஒரு புதுவீடு கட்டுறாங்க. பாருங்க, தூண் கல் தூண், தூக்கி நிறுத்தறப்ப கீழே ஒரு ஆள். மேலே, பாருங்க, பொத்தென்று விழுந்தது. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போறதுக்குள்ளே, பாருங்க ஆள்டன், தீந்து பூட்டான்,'' என்றார் ஒரு பாருங்க பேர்வழி.

''என்ன என்ன, எங்கே? ராயவரத்திலியா? யாரு? எந்தத் தெரு?'' என்று ஆத்திரப்பட்டார் மூட்டையை ஆலிங்கனம் செய்து கொண்டிருந்த ஒருவர்.

''இல்லிங்க, ராயப்பேட்டையிலிங்க பாருங்க அவன்......''

''ஓ! சரிதான்! ராயபுரமாக்கு மென்று கேட்டேன். நமக்கு அங்கேதான்'' என்றார் அந்த மூட்டைக்காரர்.

''இறந்தவன் யார்? என்று கேட்டார் உச்சிக் குடுமியார்.

''அவன் பறயனுங்க. பாருங்க அவன்......—''

''இதற்குத்தானா! அன்னிக்கு பேப்பரிலே, சார்! நீங்க பார்த்தீர்களா? குற்றாலத்தில் திடீரென்று வெள்ளம் வந்து ஆள்களை அடித்துக்கொண்டு போய் விட்டதை, நம்ம சேஷன் நேத்து அங்கிருந்துதான் வந்தான். ஆறு பிராம் மனாள் கூடப் போயிட்டாளாம்'' என்று மீண்டும் விஸ்தரித்தார் உச்சிக்குடுமி.

''பாப்பான்னா என்ன, பறையன்னா என்ன? சாவிலே! விதி கொண்டு போய்த் தள்ளிற்று என்று சொல்லுவீர்கள். இதற்கென்ன சொல்லுகிறது? நம்ம வீட்டுப் பக்கத்தில் ஒரு பையன், இன்கம்டாக்ஸ் ஆபீஸ் கிளார்க். மாதம் ரூ சம்பளம். கல்யாணமாகி மூன்று மாதங்கள்கூட ஆகலை. நேற்று ஆபீஸிலிருந்து வந்தான். என்னமோ மார்பு வலிக்கிறாப்பலே இருக்கு என்று

உட்கார்ந்தான். அவ்வளவுதான்'' என்றார் இதுவரையும் பேசாத ஸ்தூல சரீரி.

''எங்கே? எங்கே?'' என்றார்கள் இரண்டு பேர்.

''இங்கேதான் பஸ்ஸருக்குப் பக்கத்தில் அவன் வீடு.''

''என்ன நம்ம கிருஷ்ணப்பிள்ளையா? போயிட்டானா! ஆளைப் பார்த்தால் பிரம்ம களை அப்படியே முகத்தில் ஜொலிக்கும்'' என்றார் அந்த உச்சிக்குடுமி நண்பர்.

''அவரு கூடவா? பாருங்க நம்ம கடைக்கு அவருதான் போட்டாரு. நல்ல மனிதன். நூற்றுக்கொன்று.''

''கலி முற்றிவிட்டது. கொஞ்சநாளில் உலகம் முடிந்து போகும்.'' என்று மழலை மாறாத ஒரு சிறு குழந்தைக் குரல் கேட்டது. நாங்கள் அத்திசையை நோக்கினோம். புத்தகங்களைச் சுமக்க முடியாமல் சுமக்கும் ஒரு சிறு மாணவன் பெரியதலை, பெரிய கண்ணாடி. எல்லாரும் மௌனமாக அவனையே பார்த்தார்கள்.

''காலம் எல்லாம் அப்படியே புரண்டு கிடக்கு; விலைவாசியோ கேட்க வேண்டாம். எதற்குத்தான் இப்படிப் போகுதோ?'' என்று தத்துவ விசாரணையில் இறங்கினார் ஒருவர். பஸ்ஸூம் மயிலாப்பூர் ஸ்டாண்டில் நின்றது. நாங்களும் இறங்கினோம். தூரத்தில் காந்த வெளிச்சங்களுடன் ஓர் ஊர்வலம் தெரிந்தது. அப்பொழுது நாதஸ்வரக்காரன் மிகுந்த சுவாரஸ்யமாக ''சாந்தமுலேக்'' என்று கீர்த்தனத்தை அப்படியே உருக்கி வார்த்துக் கொண்டிருந்தான்.

''கல்யாணமோ? பெரிய மோக்ளா போல இருக்கிறது?'' என்றார் ஒருவர்.

நாங்களும் அவிழ்த்து உதறின நெல்லிக்காய் மூட்டை மாதிரிப் பிரிந்தோம்.

★

# கண்ணன் குழல்

ஞாயிற்றுக் கிழமை காலை.

சென்னை எழுந்து விட்டது; அந்தப் பரபரப்பு, வேகம், அவசரம், ஆவேசம், போட்டி - அவைகளும் எழுந்து விட்டன.

அதில் நானும் ஒருவன்தான். நூற்றில் இன்னொன்று. அந்த நாகரிக கதியின் வேகம் என்னையும் இழுத்துக் கொண்டுதான் போகிறது.

காலை

ட்ராமின் படபடப்பு, மோட்டாரின் ஓலம்.

பந்தயக் குறிப்புடன் பத்திரிகையின் விளம்பரக் கூப்பாடு.

அங்கே—

எத்தனை பேர் ஓடுகிறார்கள்? என்ன அவசரம்!

அங்கே ஒரு பரத்தை.

அவள் பிச்சைக்காரி; இது என்ன ஏமாற்றமோ?

நொண்டி, பிச்சைக்காரன். நல்ல வியாபாரம்.

நொண்டிக்கால் இல்லாவிட்டால் மனித உணர்ச்சியில் பேரம் செய்ய முடியுமா?

அதைவிட இந்தக் குமாஸ்தா எதில் உயர்ந்தவன்? அவன் அங்கமெல்லாம் ஒடிக்கப்பட்ட முடவன். அதற்கு

மேல் அவனுக்கு இருக்கும் சுமை,- அதிலே அவனுக்குக் கிடைக்கும் 30 ரூபாய், தானம்தான், இந்தச் செல்வத்தில் தனது சட்டை ஒட்டை மறைத்துக் கொள்ள வேண்டிய கௌரவம், அதைச் சமூகம் எதிர்பார்க்கிறது.

மறுபடியும் ட்ராமின் கணகணப்பு, மோட்டாரின் ஓலம், நாகரீகமும் அதன் சாயையும்.

வெள்ளியில் கருப்புப் புள்ளிகள்.

என் மனதிலே ஏதோ காரணமில்லாத துயரம் சோகம். ஏன்?

நானும் அந்த மனித மிருகம்தானே.

மற்றவர்களுக்கில்லாத அக்கறை எனக்கென்ன?

கோழை! சீச்சீ......

ஒரு மூலை திரும்பினேன். ஒரு புல்லாங்குழல் ஓசை, அதன் இசையிலே, அதன் குரலிலே ஒரு சோகம்...... எல்லையற்ற துன்பம்.

அவனும் ஒரு பிச்சைக்காரன்தான், அழுக்குப்பிடித்த உடல், உடலைக் காண்பிக்கும் உடை, சிறு மூட்டை, தகரக் குவளை.

ஒரு படிக்கட்டிலே உட்கார்ந்து குழலிலே லயித்திருக்கிறான். பிச்சைக்காகவல்ல. எதிரே இரண்டு மூன்று குழந்தைகள், அவனைப் போன்றவை, ஆனால் அவனுடையதல்ல.

அந்தக் குழலின் துன்பத்திலே லயித்துத்தான் நானும் நின்றேன்.

கதவு திறந்தது.

ஒரு பூட்ஸ் கால், போ வெளியே! என்று உதை கொடுக்கிறது.

‘படார்’

கதவு சாத்தியாகி விட்டது.

இவனும் உருண்டான். குழலும் விழுந்து கிறியது.

மறுபடியும் மோட்டாரின் ஓலம்!

“என்ன சாகவேண்டும் என்ற ஆசையா?” என்ற கூப்பாடு.

நானும் விலகினேன்.

உயிரை விட எனக்கும் ஆசையில்லை.

—காந்தி 1934

★

# ஆற்றங்கரைப் பிள்ளையார்

ஊழி காலத்திற்கு முன்.........

கி.மு.க்கள் (கிருஸ்து பிறப்பதற்கு முன்) என்ற அளவு கோல்களுக்கும் எட்டாத சரித்திரத்தின் அடிவானம்.

அப்பொழுது, நாகரிகம் என்ற நதி காட்டாறாக ஓடிக் கொண்டிருந்தது.

கரையில் ஒரு பிள்ளையார்.

ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடுவதால் கற்பாறைகளும், மணற்குன்றுகளும், அடிக்கடி பிள்ளையாரை மூடி, அவரை துன்பப்படுத்திக் கொண்டிருந்தன.

ஒரு கிழவர் வந்தார்.

பிள்ளையாரின் கதியைக் கண்டு மனம் வருந்தினார். பிள்ளையாரைக் காப்பாற்ற அவருக்கு ஒரு வழி தோன்றிற்று.

'சமூகம்' என்ற மேடையைக் கட்டி, அதன் மேல் பிள்ளையாரைக் குடியேற்றினார். அவருக்கு நிழலுக்காகவும், அவரைப் பேய் பிடியாதிருக்கவும், 'சமய தர்மம்' என்ற அரச மரத்தையும், 'ராஜ தர்மம்' என்ற வேப்ப மரத்தையும் நட்டு வைத்தார்.

வெள்ளத்தின் அமோக வண்டல்களினால், இரண்டு மரங்களும் செழித்தோங்கி வளர்ந்தன.

பிள்ளையாருக்கு இன்பம் என்பது என்னவென்று தெரிந்தது.

தனக்கு உதவி செய்த பெரியாரின் ஞாபகார்த்தமாக 'மனிதன்' என்ற பெயரை தனக்குச் சூடிக் கொண்டார்.

இரண்டு மரங்களும் ஒன்றை ஒன்று பின்னிக் கொண்டு மிகவும் செழிப்பாக நெருங்கி வளர்ந்து, பிள்ளையாருக்கு சூரிய வெளிச்சமே பட முடியாமல் கவிந்து கொண்டன. மழை காலத்தில் எப்பொழுதும் மரங்களிலிருந்து ஈரம் சொட்டிக் கொண்டே இருந்ததினால் பிள்ளையாருக்கு நடுக்கு வாதம் ஏற்பட்டு விடும் போலிருக்கிறது. மேலும் கிளைகளில் பக்ஷிகள் கூடு கட்டிக் கொண்டு, பிள்ளையாரின் மேல் எல்லாம் அசுத்தப்படுத்தின.

பிள்ளையாரைப் பார்க்க, வெகு பயங்கரமாக இருந்தது. அப்பொழுது இரு கிழவர்கள் வந்தனர்.

கோர உருவத்துடன் விளங்கும் பிள்ளையாரைக் கண்டதும், இருவரும் ஆற்றுக்கு ஓடி ஜலம் எடுத்து வந்து முதலில் அவரைக் குளிப்பாட்டினார்கள்.

ஒரு கிழவருக்கு ஒரு யோசனை தோன்ற, கையில் மண் வெட்டியுடன், வெகு வேகமாக ஒரு பக்கமாகச் சென்று மறைந்தார்.

மேலிருந்த அசுத்தங்கள் போனதினால் உண்டான ஒரு சந்தோஷத்தினால், பிள்ளையார் எதிரிலிருந்த கிழவருடன் பேசலானார்: "என்னை முன்பின் அறியாத நீங்கள் செய்த உதவிக்கு, உங்கள் இருவருக்கும் என தன்பை தவிர வேறு நான் என்ன கொடுக்க முடியும்? உங்கள் பெயரென்ன, உங்கள் நண்பர் பெயர் என்ன?" என்றார்.

அதற்கு அந்தக் கிழவர் பதில் சொல்லுகிறார்: "பிள்ளையாரே! கஷ்டத்திலிருப்பவருக்கு உதவி செய்ப

வருக்கு பிரதியுபகாரம் வேண்டுமா? அதை நாங்கள் எதிர் பார்க்கவும் இல்லை. எனது பெயர் 'புத்தன்'; என்னுடன் வந்தவர் என் நண்பரல்ல; அவரை வழியில்தான் சந்தித்தேன். அவர் பெயர் ஜீனன்'' என்றார்.

கிழவருக்கு பளிச் சென்று ஒரு யோசனை யுதித்தது. ஒரே பாய்ச்சலில் மரத்தின் மேல் ஏறி, பக்ஷிகள் கூடுகட்டு வதற்கு வசதியாயிருந்த கிளைகளை எல்லாம் வெட்ட வாரம்பித்தார்.

இத்தனை நாட்களாக இருளிலும் நிழலிலும் இருந்து வந்த பிள்ளையாருக்கு, திடீரென்று பட்ட சூரிய கிரணங்களைத் தாங்க முடியவில்லை. மேலெல்லாம் சுட்டுக் கொப்பளிக்க வாரம்பித்தது. கண்களைத் திறக்க முடியா மல் கூசுகிறது. ''நல்ல வேலை செய்கிறீர்! போதும் உமது உதவி'' என்று கோபித்து, ''இந்தக் கிளைகளினால்தான் உமக்கு.........'' என்று கிழவர் பதில் சொல்லுமுன், தனது தும்பிக்கையினால் அவரைத் தூக்கி வீசினார். கிழவர், மேடைக்கு வடகிழக்கில், வெகு தூரத்தில் போய் விழுந்தார்.

சற்று நேரத்தில் மண் வெட்டியுடன் சென்ற கிழவர், பிள்ளையாரை அணுகி, ''நான் புதிதாக மேடை ஒன்று கட்டியிருக்கிறேன். அதில் அந்தக் கஷ்டம் ஒன்றும் இல்லை'' என்று சொல்லி அவரைத் தூக்கிக் கொண்டு போய், தான் தயாரித்த இடத்தில் உட்கார வைத்து, ''இதோ பாரும்! இதில் மரங்களே இல்லை; உமக்கு அங்கிருக்க கஷ்டம்''......என்று சொல்லி முடிக்குமுன் அவ்விடத்திலிருந்த உஷ்ணத்தைத் தாங்க முடியாத பிள்ளையார், கண்ணை மூடிக்கொண்டு ஒரே ஓட்டமாக தனது பழைய மேடையில் வந்து உட்கார்ந்து கொண்டு, ''உங்கள் இருவருக்கும் உதவி செய்வது என்றால் பிறரைத் துன்புப்படுத்துவது என்று நினைப்பா? சற்று

முன்புதான், உமது நண்பன், உம்முடன் வந்தவன், எனது அருமையான மரங்களை வெட்டி உடம்பெல்லாம் கொதிக்கும்படி செய்து விட்டான். கண்ணை மூடிக் கொண்டு சிவனே என்றிருந்த என்னை நீர் வெகு புத்திசாலித்தனமாக கட்டிவிட்ட உமது மொட்டை மேடையில் போட்டுப் பொசுக்கி விட்டீரே. போதும் உமது உதவி. நீர் சும்மா இருந்தால் போதும்.'' என்று சொல்லிவிட்டுக் கோபத்துடன் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்தார்.

பிள்ளையாரின் மனநிலையைக் கண்ட கிழவர், பெரிதும் ஏமாற்றமடைந்து, தானே அந்த மேடையில் உட்கார்ந்து தனது உயிரை விட்டார்.

வெட்டி விட்டதனால் கிளைகள் முன்னை விட பன் மடங்கு அதிகமாக வளர்ந்தன. தாழ்ந்தும் கவிந்தும் வளர்ந்த அரச மரத்தின் இரண்டு கிளைகளுக்கிடையில் பிள்ளையாரின் தலையகப்பட்டுக் கொண்டது. வேப்பமரத்தின் வேர் ஒன்று பிள்ளையாரின் வயிற்றைச் சுற்றி வளர்ந்தது. பிள்ளையாரின் கால்களில் அரச மரத்தின் இரண்டு வேர்கள் இறுக்கி பின்னிக் கொண்டன.

பிள்ளையார் இர்ண்டு மரங்களுக்குள் சிறைப் பட்டார்.

காற்றடிக்கும் பொழுதெல்லாம் பிள்ளையாருக்கு தலை போய் விடும் போல் இருந்தது. வயிற்றைச் சுற்றிய வேரோ அதன் வேதனை சகிக்க முடியவில்லை. கால்களும் சிறைப்பட்டதினால் ஓடவோ முடியாது.

பிள்ளையாருக்கு நரகம் எப்படி யிருக்கும் என்று சற்றுத் தெரிந்தது.

பல காலம் சென்றது......வடமேற்கு கணவாய்களில் பெய்த அமோகமான மழையினால் நதியில் வெள்ளம்

கரை புரண்டு ஓடியது. கணவாயில் ஒரு சிறு ரோஜாத் தோட்டம் போட்டு வசித்து வந்த கைலி கட்டிய ஒரு தாடிக் கிழவனையும் குடிசை—தோட்டத்துடன் அடித்து வந்தது.

வெள்ளத்தின் வேகத்தினால் அரசமரம் சாய்ந்தது. வேப்பமரம் அடியோடு விழுந்து வேர்மாத்திரம் பிடித்திருந்ததினால் தண்ணீரில் மிதந்து ஆடிக்கொண்டிருந்தது. பிள்ளையாருக்கு ஓடவும் முடியவில்லை; ஓடவும் பயம்.

பிள்ளையாரின் துன்பத்திற்கு ஓர் எல்லையில்லை; நீக்க ஓர் வழியுமில்லை.

வெள்ளத்தில் உருண்டுவந்த தாடிக் கிழவன் வேப்ப மரத்தின் கிளைகளை எட்டிப் பிடித்து மேடையில் தொத்திக் கொண்டான்.

வெள்ளம் வற்றியது, தாடிக் கிழவன் வேப்ப மரத்து நிழலுக்கு ஆசைப்பட்டு அதைத் தூக்கி நிறுத்தினான். வெள்ளத்தில் ஒதுங்கிய ஒரு செத்த பசுமாட்டின் தோலையுரித்து, அதன் மாமிசத்தை வேப்ப மரத்திற்கு உரமாக இட்டான். தன்னுடன் வெள்ளத்தில் ஒதுக்கப்பட்ட ஒரு ரோஜாச்செடியை எடுத்து மீதியிருந்த மாமிச எருவையிட்டு, வேப்ப மரத்திற்கும் அரச மரத்திற்கும் இடையில் நட்டுவைத்தான். மாட்டின் தோலை வைத்து வேப்ப மரத்தடியில் ஒரு குடிசை கட்டிக்கொண்டு தன் இடையில் சொருகி இருந்த உடைவாளை வேப்ப மரத்தில் மாட்டிவிட்டு சந்தோஷமாக இருக்கவாரம்பித்தான்.

ரோஜாச் செடி, உரத்தின் மகிமையால் நன்றாகச் செழித்து வளர்ந்தது. நல்ல வாசனையுள்ள புஷ்பங்களுடன் நீண்ட முட்களும் நிறைந்திருந்தன.

பிள்ளையாரின் கஷ்டத்தைக் கவனிக்க யாருமில்லை.

அப்பொழுது மூவர் ஒருவர் பின் ஒருவராய் வந்தனர். அவர்களுக்கு சங்கரன், ராமானுஜன், மத்வன் என்று பெயர்.

முதலில் வந்தவர் பிள்ளையார் தலையை விடுவிக்க முயன்றார். வெகு கஷ்டப்பட்டு சிறிது விலக்க முடிந்தது. வயிற்றைச் சுற்றிய வேரை சிறிதும் அசைக்க முடியாது என்று கண்டு, தலையை விடுவித்த சந்தோஷத்தில் போய் விட்டார். அவர் பின் வந்த இரு கிழவர்களும், அரச மரத்தை முதலில் இருந்த மாதிரி தூக்கி நிறுத்த யத்தனித்தார்கள். முடியவில்லை. பெரிய மரத்தைத் தூக்க இருவரால் முடியுமா? அதிலும் கிழவர்கள். அரசமரம் கோணிக் கொண்டுதான் நின்றது. முன்பும் இப்படித்தான் இருந்திருக்கும் என்று நினைத்து சந்தோஷப் பட்டுக் கொண்டு சென்று விட்டார்கள்.

விலகியிருந்த அரச மரத்தின் கிளைகள் மறுபடியும் கவிந்து பிள்ளையாரின் கழுத்தை இறுக்கவாரம்பித்தன. அருமை தொந்தியைச் சுற்றிய, மாமிச உரம் பெற்ற வேப்ப மரத்தின் வேர்களோ, பிள்ளையாரை அசைய விடாமல் நெருக்கின.

ரோஜா புஷ்பங்களின் வாசனையை நன்றாக அனுபவித்தாலும் முட்களை எப்படி விலக்குவது. குத்திக்குத்தி அந்தப் பக்கம் பூராவாகவும் சீழ் வந்தது.

போதாதற்கு கைலிக் கிழவன், தனக்கு பொழுது போகாத நேரங்களில் தனது உடை வாளை எடுத்து பிள்ளையாரின் ஒன்றைக் கொம்பில் தீட்டவாரம்பித்து விடுவான்.

மேடையின் மீது அரசங் கன்றுகளும் வேப்பங் கன்றுகளும், வேறு புல்பூண்டுகளும் முளைக்க ஆரம்பித்து விட்டன.

சில காலம் சென்றது.

ஒரு நாள் இரவு, மேற்கு சமுத்திரத்தின் அடிப்பாகத்தில் ஒரு பெரிய பூகம்பம் ஏற்பட்டதினால் கடல் ஜலம் நதிக்குள் எதிர்த்துப் பாய்ந்தது. பிள்ளையார் இருந்த மேடையின் பக்கம் புயற்காற்றும் மழையும் சண்ட மாருதமாக அடித்ததினால், ஆறும் பெருக்கெடுத்து கடல் ஜலத்தை எதிர்த்தது.

பேய் போல ஆடிக்கொண்டிருந்த மரங்களும் மறுபடி விழுந்து விட்டன. அரச மரம் பிள்ளையார் முதுகின் மேல் சாய்ந்து விட்டது. வலுவற்ற வேப்பமரம் முன் போல், பிள்ளையாரின் வயிற்றைச் சுற்றியிருந்த வேரின் உதவியால், மேடையிலிருந்து கொண்டு தண்ணீரில் ஆடிக் கொண்டிருந்தது.

கைலிக்கிழவனை குடிசையுடன் அடித்துக்கொண்டு போய் விட்டதால், காற்றுக்கு வளைந்து கொடுத்து மறுபடியும் தலை நிமிர்ந்த ரோஜாச் செடியைத் தவிர அவனுடைய ஞாபகார்த்தமாக வேறு ஒன்றுமில்லை.

பிள்ளையாருக்கு நரகவேதனை பொறுக்க முடியவில்லை.

இந்த மூன்று பிணிகளும் பாசக்கயிறு போல் அவரைத் துன்புறுத்தின.

சமுத்திரத்தின் நடுவில் ஒரு சிறு படகில் சென்று கொண்டிருந்த ஒருவனை கடல் நீர் படகுடன் ஆற்றுக்குள் அடித்துக்கொண்டு வந்ததினால் அந்தப் படகும் இந்தப் பிள்ளையாரின் மேடையை அணுகிற்று. படகினுள் இருந்தவன் பிள்ளையாரின் காலைப் பிடித்துக் கொண்டு மேடையில் தொத்திக் கொண்டான். பிறகு படகையும் மேடையில் இழுத்துப் போட்டுக் கொண்டான்.

வந்தவனுடைய உடம்பு மிகுந்த வெண்மையாகவும் தலைமயிர் உருக்கி வார்த்த தங்கக் கம்பிகள் மாதிரி

பொன்னிறமாக பிரகாசித்தது. அவனது நீண்டதாடி பொன்னிறமான ஆபரணம்போல் அவன் மார்பை அலங்கரித்தது. அவன் நீண்ட அங்கியும், கணுக்கால் வரை வரும் தோல் பாதரட்சையும் அணிந்திருந்தான். அவனது வலதுகையில் கருப்புத்தோல் அட்டை போட்ட ஒரு பெரிய புத்தகமும், ஒரு நீண்ட சிலுவையும் இருந்தன.

இவனுக்கும் வேப்பமரத்தின் மகிமை நன்றாகத் தெரியுமாகையால் உடனே அதைத் தூக்கி நிறுத்தி, அதன் அடியில் தனது படகைக் கவிழ்த்துப் போட்டு அதனடியில் படுத்து உறங்கினான்.

அவன் தனக்கு உணவுக்காக வைத்திருந்த ரொட்டித் துண்டுகளை பிள்ளையார் முன் வைத்துவிட்டு உறங்கியதனால், பசியின் கொடுமை மிகுந்த அவர், அவைகளை எடுத்து காலிசெய்ய வாரம்பித்தார். கொழுக் கட்டை தின்று பழகிய பிள்ளையாருக்கு இது தேவாமிருதமாக இருந்தது. பசி நீங்கிய பிள்ளையார் வலியின் கொடுமையைத் தாங்க முடியாமல் அப்படியே உறங்கி விட்டார்.

மறுநாள் விடிந்தது.

பிள்ளையார் இருந்த மேடைப் பக்கம் அதிக உஷ்ண மான பூமியாகையால், புதிதாக வந்தவன் தனது நீண்ட அங்கியினால் தனது புத்தகத்தையும் சிலுவையையும் கட்டி, வேப்பமரத்தின் கிளைகளில் தொங்க விட்டுவிட்டு ஒரு சிறிய சல்லடத்தை மாத்திரம் அணிந்துகொண்டு கவிழ்ந்து கிடந்த படகின் மேல் உட்கார்ந்து, வேப்பங் காற்றை யனுபவித்துக் கொண்டு இருந்தான். பொழுது போக்காக கையில் இருந்த உடைவாளைச் சுழற்றி விளையாடிக் கொண்டிருந்தான்,

அப்பொழுது பல கிழவர்கள் வந்தார்கள்.

மேடையையும் பிள்ளையாரையும் அரச மரத்தையும் கண்டவுடன் பீதியடித்துப் போய் விட்டார்கள்.

சிலர் பிள்ளையாரின் வயிற்றை விடுவிக்க முயன்றார்கள்.

சிலர் மேடையை சீர்படுத்தினார்கள்.

ஒவ்வொருவர் செய்வதும் மற்றவர்களுக்கு தடையாக இருந்தது.

பிள்ளையாரின் வயிற்றை சுற்றிய வேப்பமர வேரை யறுக்கப் போனால், புதிதாக வந்தவன் வாளை ஓங்கினான்.

அரசமரத்தின் கிளைகளை வெட்டப் போனால், பிள்ளையாரின் உதவியால் மரம் நிற்கிறது. அதை வெட்டி விட்டால் மரமே விழுந்துவிடும். இது ஆராய்ச்சி செய்ய வேண்டிய விஷயம், சற்றுப் பொறுத்துச் செய்யுங்கள் என்றார்கள்.

சிலர் மரங்களையே எடுத்து விட்டால் நல்லது என்று நெருங்கினார்கள்.

இரைச்சல் அதிகமாகிறது.

மரத்திற்கு பிள்ளையாரா, பிள்ளையாருக்கு மரமா என்று பெரிய தர்க்கம்.

ஆத்திரமுள்ளவர்கள், அரசமரத்தையும் வேப்ப மரத்தையும் அழித்துவிட பதைத்து நெருங்கினார்கள்.

உறங்கிக் கொண்டிருந்த பிள்ளையார் ஓர் அற்புதமான கனவு காண்கிறார். தான் பெரிதாக வளர்வது

போல் தெரிகிறது. முகத்தில் புன்சிரிப்பு தோன்றுகிறது. தும்பிக்கை சற்று அசைகிறது.

விச்வரூபமா?

பிள்ளையார் விடுவிக்கப் படுவாரா?

அல்லது அவர் கனவு நனவாகி விடுவித்துக் கொள்ளுவாரா?

மணிக்கொடி 1934

★

தமிழியல் துறை நூலகம்
துறை வரிசை எண் :
தெ. பெ. சி. நூலக
வரிசை எண் :
சிறப்பு நிதியுதவி
வரிசை எண் : 1499
வகை வரிசை எண் :
UGC DSA
சிறப்பு நிதியுதவி
நூல் 1499